வாரப் பதிப்பு விலை சதம் 20

தலைமைத் தபால் நிலையத்தில் செய்திப் பத்திரிகையாகப் பதிவு செய்யப்பட்டது

# சுதந்திரன்

SUTANTIRAN

194A, BANDARANAIKE MAWATTE, COLOMBO-12.

194 ஏ, பண்டாரநாயக்க மாவத்த, கொழும்பு-12.

திறம் சலவைக்கு




மில்க் வைற்
சோப்

மில்க் வைற் சோப் தொழிற்சாலை
யாழ்ப்பாணம்

புத்தகம் 15 | திருவள்ளுவர் ஆண்டு 1991 ஐப்பசி திங்கள் 7ம் நாள் (23—10—60) ஞாயிற்றுக்கிழமை ஐ. அவ். 2 | இதழ் 21

# சிங்களம் படிப்பதானல் ஆசிரியர் பதவி

## உடனே கிடைக்குமாம் சிங்களப் பாடசாலையில்!

## விஞ்ஞானப் பட்டதாரித் தமிழ் ஆசிரியருக்கு கல்வி இலாகா காட்டியிருக்கும் கருணை!!

### தமிழ்ப் பாடசாலைகளில் இடமில்லை எனக் கைவிரிப்பு

(சுதந்திரன் நிருபர்)

"சிங்களம் படிக்கச் சம்மதமானல் ஆசிரியர் பதவி உடனே தரலாம். சிங்களப்பாடசாலை ஒன்றில் நியமிக்க இயலும். மற்றப்படி தமிழ்ப் பாடசாலைகளில் இடமில்லை" என்று கல்வி இலாகா வேலை கேட்ட விஞ்ஞானப் பட்டதாரித் தமிழ் ஆசிரியர் ஒருவருக்கு எழுதியிருக்கிறது.

தமிழ் ஆசிரியர்களைச் சிங்களம் படிக்க வைத்துக் காலப்போக்கில் அவர்களைச் சிங்களவர்களாகவே ஆக்கிவிடும் திட்டத்தில் தற்போது அரசாங்கப் பாடசாலைகளில் வேலை கேட்கும் எல்லாப் பட்டதாரிகளுக்கும் கல்வி இலாகாவால் மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டு வருவதாக அறியப்படுகிறது.

சம்பந்தப்பட்ட தமிழாசிரியருக்கு கல்வி இலாகா 17-10-60 தேதியிட்டு அனுப்பிய கடிதத்தின் இலக்கம் TRB/X 687 ஆகும். அதில் குறிப்பிடப்பட்டிருப்பதாவது:—

#### ஜி. ஸி. ஈ. சிங்களத் தகுதி வேண்டும்

1. "தமிழ் பாடசாலைகளில் உமக்கு உடனே வேலை தருவதற்கு முடியாது. இடமில்லை. ஆயினும் சிங்களப் பாடசாலையில் உம்மை நியமிக்க முடியும். அதற்கு ஜி. ஸி. ஈ. பரீட்சையில் சிங்களப் பாடத்தில், உத்தியோகம் பெற்ற மூன்று வருடகாலத்துக்குள் சித்தயடைய முயற்சிக்க வேண்டும். சிங்களப் பாடசாலையில் ஆசிரியராவதற்கு வேண்டிய அடிப்படைத் தகுதி இது.

#### தகுதிகாண் பரீட்சை நடைபெறும்

2. "முதல் வருடத்தில் சிங்களம் பேசுவதிலும், வாசிப்பதிலும், எழுதுவதிலும் 5-ம வகுப்புக்குரிய தகுதி பெறவேண்டும் இரண்டாவது வருடத்தல் சிங்களப் பேச்சு, வாசிப்பு, எழுத்து ஆகியவற்றில் எட்டாம் வகுப்புக்குரிய தகுதி பெற வேண்டும். உம்முடைய சிங்களப் படிப்பு அபிவிருத்தியைக் கணிக்க அவ்வப்போது தகுதிகாண் பரீட்சைகள் கல்வி இலாகாவால் நடாத்தப்படும்.

#### பதவி நீக்கம்

3. "நீர் நியமிக்கப்படும் பாடசாலையில் சிங்களம் படிக்க உமக்கு போதிய வசதி இருக்கும். இரண்டாவது பந்தியில் சொல்லப்பட்டபடி சிங்களத்தில் தகுதி பெருவிட்டால், நீர் சேவையிலிருந்து நீக்கப்படுவீர் என்பதை அறிந்து கொள்ள வேண்டும்.

#### சம்மதமா?

4. "இந்தக் கடிதம் கிடைத்ததை அறிவிக்கவும் அத்துடன் மேலே குறிப்பிட்ட நிபந்தனைகளுக்கு அமைய சிங்களப் பாடசாலையொன்றில் நியமனம் பெற விருப்பமா என்பதையும் ஒரு வாரத்துக்குள் தெரிவிக்கவும்"— இவ்வாறு கூறுகிறது கல்வி இலாகாவின் கடிதம்

---

வருவது பத்து பதினைந்து தந்திகள்:

## 'தவறு அரசாங்கத்தில் அல்ல, தமிழ் பேசும் மக்களில்தான்'

### சுட்டிக் காட்டுகிருர் மத்திய தந்திக் கந்தோர் தமிழ் ஊழியர்

(சுதந்திரன் நிருபர்)

"மத்திய தந்திக் கந்தோருக்கு நாளொன்றுக்கு பத்துப் பதினைந்து தமிழ்த் தந்திகள்தான்வருகின்றன. இவற்றிற்காக ஒரு முழு நேரத் தமிழ் ஊழியரை நியமிப்பதா?" என்று கேட்கிருர் மத்திய தந்திக் கந்தோர் தமிழ் ஊழியர் ஒருவர். 'தவறு செய்வது: அரசாங்கம் அல்ல; தமிழ் பேசும் மக்கள்தான்" என்றும் அவர் சுட்டிக்காட்டுகிருர்.

"மத்திய தந்திக் கந்தோரில் பெயருக்கு ஆறு பேர் இருந்தென்ன பயன்? சிங்களத்துக்கு உள்ளதுபோல தமிழ்த் தந்திகளைக் கவனிக்க முழு நேர ஊழியர் ஒருவர் நியமிக்கப்படவேண்டும்" என்று தமிழரசுத் தந்தை திரு எஸ். ஜே. வி. செல்வநாயகம் சம்பந்தப்பட்ட அமைச்சரை வற்புறுத்திய செய்தி 9-10-60ல் சுதந்திரனில் வெளியிடப்பட்டது நேயர்களுக்கு நினைவிருக்கலாம். அந்தச் செய்தியைப் படித்ததும் மத்திய தந்திக் கந்தோர் ஊழியர் மேற்கண்டவாறு கூறும் கடிதம்ஒன்றைச் சுதந்திரனுக்கு அனுப்பியிருக்கிருர்.

பிரஸ்தாப கடிதத்தில் மேலும் சொல்லப்பட்டிருப்பதாவது:-

#### சிங்களத் தந்திகள் 45%

"நாளொன்றுக்கு மற்றைய மாகாணங்களிலிருந்து கொழும்புக்குக் கொழும்பிலுருந்து வெவ்வேறு மாகாணங்களுக்குமாக பல்லாயிரக்கணக்கான தந்திகள் பறந்து கொண்டிருக்கின்றன இவற்றுள் பெரும்பாலானவை ஆங்கிலத் தந்திதான் என்பதில் ஐயமில்லை. இரண்டாவதாக சிங்களத் தந்திகள் இடம் பெறுகின்றன. அதாவது மொத்தத் தந்திகளில் சுமார் 40 அல்லது 45 சதவீதம் சிங்களத் தந்திகளாகும். இதற்கென இருக்கும் சிங்கள ஊழியர்களுக்கு வேலை நிறையக் கிடக்கிறது.

#### தமிழ்த் தந்திகள் பத்து பதினைந்து

"ஆனல் தமிழ்த் தந்திகளைப்பற்றிச் சொல்லப் போனல் நாம் தலைகவிழத்தான் வேண்டும். பல்லாயிரக்கணக்கில் வந்து குவியும் தந்திகளில் நாளொன்றுக்கு சராசரியாகப் பார்க்கப் போனல் பத்து பதினைந்து

(9-ம பக்கம் பார்க்க)

---

அரசாங்கத்திடம்:

## பாடசாலைகளைக் கையளிக்க மத ஸ்தாபனங்கள் மறுப்பு

## தனித்து இயங்க முடிவு

### ஆசிரியர்கள் அங்கு தொடர்ந்து கடமையாற்றச் சம்மதம்

(சுதந்திரன் நிருபர்)

மத ஸ்தாபனங்கள் தாம் நடத்தி வரும் பெரிய பாடசாலைகளை அரசாங்கத்திடம் ஒப்படைப்பதில்லை என்று முடிவு செய்துள்ளன. அவையனைத்தும் தனித்து இயங்கும் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது.

தனித்தியங்கப்போகும் பாடசாலைகளில் கடமையாற்றும் ஆசிரியர்களும் தாம் அரசாங்கத்தில் சேராமல் அந்தந்தப் பாடசாலைகளிலேயே தொடர்ந்து கடமையாற்றுவது என்று தீர்மானித்திருக்கிருர்கள்.

#### கத்தோலிக்க மதபீடம்

மத ஸ்தாபனங்களுள் குறிப்பாகக் கத்தோலிக்க மதபீடம் அரசாங்கம் பாடசாலைகளை எடுத்து நடத்துவதைப் பலமாக எதிர்க்கிறது. அந்த மதபீடமே அரசாங்கத்துக்கு எதிராகக் கிளம்பும் எதர்ப்பு முன்னணியில் முன்னுக்கு நிற்கிறது. "எதுவரினும் எமது பாடசாலைகளை அரசாங்கத்திடம் ஒப்படைப்பதில்லை" என்று கத்தோலிக்க பாடசாலை முகாமைக்காரர்கள் முடிவு செய்ததை கத்தோலிக்க மதபீடத்து மேலிடம் அங்கீகரித்துள்ளது என்று தெரிகிறது.

#### அமெரிக்கன் மிஷன்

அமெரிக்கன் மிஷன் பாடசாலைகளைப் பொறுத்தவரையிலும் எதிர்ப்பு பலமாகவே இருக்கிறது. வடக்கில் பிரசித்தி பெற்ற வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியை அரசாங்கத்திடம் கையளிப்பதில்லை என்று அமெரிக்கன் மிஷன் தீர்மானித்துவிட்டது அந்த மிஷன் பாடசாலைகள் இன்னும் பல தனித்து இயங்கும் என்று அறிய வருகிறது.

(9-ம் பக்கம் பார்க்க)

சகலவித மூலநோய் நிவாரணி

ரிச்லெட்ஸ் ப்ளட் பியூரிபயர்

(RICHELET'S BLOOD PURIFIER)

இரத்த சுத்தி செயது




மூலம்

பௌத்திரம்

படை
(ECZEMA)

மாத
விடாய்

கோளாறுகள்



முதலானவைகளைக் குணப்படுத்துவதில் நிகரற்ற சஞ்சீவி இது. ஒரு போத்தல முடிந்ததுமே மேலும் சாப்பிட்டு பூரண பலனை அடைய வேண்டும் என்ற ஆசையும் நம்பிக்கையும் தானகவே ஏற்படும்.

எங்கும் கிடைக்கும்.

வெல்டன் ஏஜென்சீஸ்,

63, பேங்ஷால் வீதி, கொழும்பு.

(போன் : 2885)

இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்களின் உரிமைக் குரல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிங்களம் மட்டும் சட்டத்தால்:

# 61-ல். எதிர்நோக்குகிறது பேராபத்து!

## அரசாங்க ஊழியர்கள், தமிழ் பேசும் பொதுமக்கள், தமிழரசுக் கட்சி செய்வதென்ன?

### அரசியலாருக்கும் சிங்கள மக்களுக்கும் நிலைமையை விளக்குவது—கேளாவிட்டால்....

### 'செய் அல்லது செத்துமடி' என்ற அடிப்படையில் தீவிர போராட்டம்

சிங்களம் மட்டும் சட்டத்தை செந்தமிழ் பேசும் இனம் எவ்விடம் எதிர்த்தல் வேண்டும்? தமிழ் அரசாங்க ஊழியர்கள் கடன் என்ன? எல்லாம் தமிழ் இயக்கம் ஏற்படுத்தும் மாபெரும் புரட்சியாது? தமிழ் பேசும் இனத்தை வழிநடாத்தும் தமிழ அரசு இயக்கம் தட்டிக் கழிக்காது ஆற்ற வேண்டிய தலையாய பணிகள் எவை?— இந்தக் கேள்விகளுக்கெல்லாம் நாம் ஒவ்வொருவரும் விடை காண வேண்டியவர்களாயிருக்கிறோம்.

1960-ம் டிசம்பர் மாதம் 31-ம் தேதியோடு இலங்கை முழுதும் சிங்களம் மட்டும் (Sinhala Only) என்ற சட்டம் முழு மூச்சாக நடைமுறையில் வர இருக்கிறது. இச்சட்டம் நடைமுறைக்கு வரும் போது சிங்கள அரசாங்கம் எதிர்பார்ப்பதற்கு இணங்க இது எவ்வளவு தூரம் வெற்றியை அளிக்கும்? இதனால் ஏற்படும் நிர்வாகச் சிக்கல்கள் யாவை? ஆகிய இவற்றில் யாம் ஈண்டு கவனம் செலுத்தத் தேவையில்லை. சிங்களம் மட்டும் சட்டத்தை நடைமுறைக்கு கொண்டுவர சிங்கள அரசாங்கம் உறுதி பூண்டு விட்டது என்பதும் அதற்கு பெரும்பான்மை சிங்கள மக்கள் ஆதரவு அளிக்க ஆயத்தமாய் இருக்கிறார்கள் என்பதும் வெள்ளிடமலை.

#### மொழி அழியின் இனம் அழியும்

சுருங்கக் கூறின் நடைமுறைக்கு வர இருக்கும் சிங்களம் மட்டும் என்ற சட்டம் பொதுவாகத் தமிழ் பேசும் இனத்தையும் குறிப்பாகத் தமிழ் அரசாங்க ஊழியரையும் உடனடியாகவும் தாக்க இருக்கிறது. தமிழ் பேசும் இனத்தை பொதுவாக பாதிக்கும் என்று யாம் குறிப்பிட்டதால் எம் இனத்திற்கு இச் சட்டத்தினால் ஏற்பட இருக்கும் இடர் சிறிதளவாகத் தான் இருக்கும் என்பது அல்லப் பொருள். ஒரு தேசிய இனத்தை அழிக்க விரும்பின் முதலில் அதனின் மொழியை முடித்துக்கட்டு (If you want to destroy a nation first destroy its Language) என்ற ஒரு ஆங்கில அறிஞனின் அரசியற் கருத்து இன்றைய எம் அவல நிலைக்கு முற்றும் பொருந்தும். உண்மையிலேயே சிங்களம் மட்டும் என்ற சட்டம் சிங்களத்தை ஆட்சி மொழியாக்குவதோடு நிற்கப்போவதில்லை. அது படிப்படியாக தமிழ் பேசும் இனத்தின் தனித் தன்மையை (Individuality) நீக்கச் செய்து அதைப் பூண்டோடு

ஈழவேந்தன்

அழிக்கும் சதித்திட்டம் என்பதை யாம் நன்கு நினைவில் வைத்தல் நலம்.

#### தமிழ் மக்கள் கடன்

தனிச் சிங்களச் சட்டத்தினால் உடனடியாக நேரடித் தாக்குதலை (Immediate direct impact) பெறுபவர்கள் தமிழ் அரசாங்க ஊழியரே என்பதால் அவர்களுக்கு வாழ்வளிக்க, அதன் வாயிலாக தமிழ் பேசும் இனத்திற்கு வாழ்வளிக்க யாம் எவ்வழிவகைகளை வகுக்க வேண்டும் என்பதை இங்கு ஆராய்தல் பொருத்தமுடைத்து. இக்கட்டுரையாளரின் கருத்துப்படி இச்சட்டத்தை தமிழ் பேசும் அரசாங்க ஊழியரும், தமிழ் பேசும் இனமும், தமிழ் பேசும் இனத்தின் தனிப் பெரும் அரசியல் இயக்கமாக இயங்கும் தமிழ் அரசுக் கட்சியும் தனித்தனியாகவும் கூட்டாகவும் எதிர்க்க வேண்டும் என்பதேயாகும்.

இக் கருத்தினைத் தெரிவித்தவுடன் "தம்பி! உன் தமிழ் உணர்ச்சியினைப் போற்றுகிறோம். ஆனால் நடைமுறையில் சிங்கள இனத்தை எதிர்த்து யாம் வெற்றிகாண முடியுமா? யாமோ சிறுபான்மையினர்; அதுவும் பிளவுபட்ட சிறுபான்மையினர். அவர்களோ பெரும்பான்மையினர்; அதுவும் ஒன்றுபட்ட பெரும்பான்மையினர் என்ற ஏக்கக் குரல் எம் முதியோர் பலரிடம் இருந்து எழத்தான் செய்கிறது. இக்குரலில் பொருள் இல்லை என்பதல்ல எம் கருத்து. எப்படி ஒரு மனிதப் பண்புள்ள மகன் நோய்வாய்பட்டிருக்கும் தன் தாய் தப்புவது கடினம் என மருத்துவர் பலர் தீர்ப்பளித்திருப்பினும் "அருமையோடு பெற்று பெருமையோடு வளர்த்த என் தாயல்லவா" என்று கூறி அன்பு உணர்ச்சியினால் உந்தப்பட்டு உறுதியோடு இறுதிவரை தாயின் உயிருக்காகப் போராடுவானோ அது போன்றே நாமும் யாம் பிறந்த இனத்திற்கும் யாம் பேசும் மொழிக்கும் அழிந்தொழிகின்ற பேராபத்து ஏற்பட்டிருக்கும் இவ்வேளையில், எம் இனத்தையும் எம்மையும் எம் அறிவு ஆற்றலுக்கு எட்டியவரை பாதுகாக்க முயல வேண்டும் அன்றோ?

#### வழி வகுக்க வேண்டும்

யாம் தொடுக்க இருக்கும் போராட்டத்தில் யாம் எவ்வளவு தூரம் வெற்றியடைவோம் என்பதை எவரும் அறுதியிட்டுக்கூற முடியாது. எனினும் இச் சிங்களம் மட்டும் சட்டம் தமிழ் பேசும் இனமாக Racial Entity) தொடர்ந்து வாழ முடியாத அச்சம் தரும் நிலையினை உருவாக்கும் என்பதையிட்டு மட்டும் எம்மிடையே கருத்து வேற்றுமை தோன்ற முடியாது. எப்படி ஒரு திறமை மிக்க மருத்துவன் ஒரு நோயாளியின் நோயின் தன்மையையும் அதன் தோற்றத்தின் காரணத்தையும் உணர்ந்து தன் ஆற்றல் முழுவதையும் பயன் படுத்தி அவைகளை தப்ப வைக்க முயல்வானோ அது போன்றே நாமும் எம் இனத்தைப் பீடித்திருக்கும் அரசியல் பிணியை நீக்க முயலுதல் அறிவுடைமை. இம்முறையில் யாம் வெற்றி பெறவும், தோல்வியுறவும் கூடும். ஆனால் எம் கண் முன்னாலே அழிவதை பார்த்துக் கொண்டு வாழ இருப்போமாயின் எம்மை உலகம் எள்ளி நகையாடும். அத்துடன் எம் வழித்தோன்றல்களின் மீளாப் பழி மொழிக்கும், வசை மாரிக்கும் நாம் ஆளாக நேரிடும். எம் குழந்தைகள் சீராக வாழ்வதற்காக காப்புறுதி (Insurance Policy) எடுக்கும் யாம்—எம் குழந்தைகள் வருந்தமுற்ற போது வாடிவதங்கும் யாம் ஏன் அவர்கள் மானமுடைய மக்களாக தன்மானத்துடன் தரணியில் வாழ வழிவகைகள் வகுக்கக் கூடாது?

#### தமிழ் அரசாங்க ஊழியரின் கடன்

முதலாவதாக தமிழ் அரசாங்க ஊழியர்களைப் பொறுத்த வரையில் அவர்கள் எக்காரணம் கொண்டும் சிங்களம் பயிலவோ அல்லது சிங்களத்தில் நிர்வாகம் நடாத்தவோ உடன்படக் கூடாது. அத்துடன் தமிழ் பேசும் அரசாங்க ஊழியர் அனைவரும் தாம் அங்கம் வகிக்கும் தொழிற் சங்கங்கள் (Trade Unions) வாயிலாக தம் வாழ்வைப் பாதிக்கும் எவ்வித நடவடிக்கைகளையும் அரசாங்கம் எடுக்கக்கூடாது என்று வேண்டுதலோ அல்லது நிலைமையைப் பொறுத்து எச்சரிக்கையையோ விடுத்தல் வேண்டும். இத்தொழிற் சங்கங்களின் வேண்டுதலுக்கு அரசாங்கம் செவி மடுக்க மறுப்பின் நேரடி நடவடிக்கையில் (Direct Action) இறங்குமாறு தொழிற் சங்கங்களைத் தூண்ட வேண்டும். இத்தொழிற் சங்கங்களும் தொழிலாளர் என்ற அடிப்படையில் இன, மத, வகுப்பு வேறுபாடுகளை ஒரு புறம் ஒதுக்கி, உரிமைக் குரல் எழுப்பி செயலில் குதிக்க ஆயுத்தமாய் இருத்தல் வேண்டும்.

#### தொழிற் சங்கங்கள் தொழிற்பட மறுக்கின்

இதற்கு இன்றைய தொழிற் சங்கங்கள் தயங்கினும் சரி, மறுப்பினும் சரி, தமிழ் பேசும் அரசாங்க ஊழியர் இவற்றில் தொடர்ந்து உறுப்பினராக இருப்பதில் யாதும் பயன் இல்லை. ஏனெனில் தொழிலாளரின் அடிப்படை உரிமைகளுக்காக Fundamental rights) போராடாத தொழிற் சங்கங்கள் இருந்தும் இல்லாவிடினும் ஒரு தன்மையுடைத்தே. தமிழ் பேசும் ஊழியரைப் பொறுத்தவரை அவர்கள் இன்றைய தொழிற் சங்கங்கள் தமது உயிர் பிரச்சினைகளைத் தீர்க்க மறுக்கின் தாமாகவே தமக்கொரு தொழிற் சங்கத்தை நிறுவி போர்க் குரல் எழுப்ப முயல வேண்டும். "அடம்பன் கொடியும் திரண்டால் மிடுக்கு"—"ஒன்று பட்டால் உண்டு வாழ்வு'—"முயற்சி திருவினையாக்கும்" — என்ற எம் முன்னோர் அறிவுரைகள் எமக்குத் துணையாக நிற்கட்டும். எடுத்த எடுப்பில் யாம் எதிலும் வெற்றி காண முடியாது. எனினும் தொடர்ந்து எழுப்பும் ஒன்றுபட்ட குரலுக்கு இறுதியில் வெற்றியும் மதிப்பும் உண்டு என்பதற்கு உலக வரலாறுகள் சான்றுகள்பல எடுத்துக் காட்டிய வண்ணம் இருக்கின்றன.

#### எல்லாம் தமிழில்

இனி தமிழ் பேசும் மக்களின் கடன் யாது என ஆராய்வோம். தமிழ் பேசும் அரசாங்க ஊழியரின் வாழ்வும், தாழ்வும் அவர்கள் அரசாங்கத்தில் தொடர்ந்து பதவி வகிக்கும்

(15ம் பக்கம் பார்க்க)

இலக்கியம்;

# மங்கையின் மானத்தை வாங்கிய பொல்லாத கிளி

அது ஒரு அழகான பச்சைக் கிளி சிவந்த அழகிய சொண்டு. குங்குமத்தைக் குழைத்துக் கீறிட்டது போன்ற அழகிய ஆரம். தளிர்போன்ற மென்மையான அழகிய கால்கள். மனத்தில் பலவித ஆசைகளைத் தூண்டிவிடும் அதனது மோகன எழிலில் தன் மனத்தைப் பறிகொடுத்தாள் அந்தப் பாவை.

கிளி அவளது உடமையாகிவிட்டது. அழகான கூண்டில் இனிய பழங்களையும் பாலையுஞ் சுவைத்துக் கொண்டு கிளி உல்லாசமாக வாழ்ந்தது. ஓய்வான நேரங்களில் கிளியுடன் மழலை பேசுவாள் அந்த நங்கை. அவளது அருமைக் கிளி தனது வட்டக் கண்களை உருட்டி ஏதேதோ பேசும். "என் செல்லக் கிளி!' என்று அதனை எடுத்து அணைத்துக் கொள்வாள்.

இந்த நங்கைக்கு ஒரு காதலன் ஏற்பட்டான். கிளியில் ஏற்பட்டிருந்த அன்பின் பெரும் பகுதி காதலனிடந் திரும்பியது ஒருநாள் யாரும் அறியாமல் காதலனுடன் சென்றுவிட்டாள். கிளி தனது தோழியைக் காணாது தவித்தது. ஊண் உறக்கமின்றி வாடியது. பாலும் பழமும் கூண்டிலே தேடுவாரற்றுக் கிடந்தன.

'செந்தார்க் கிள்ளையும்
தீம்பால் உண்ணு'

கூண்டிலே கிளிவாடி வதங்க அதனது உரிமையாளர் தனது காதலனுடன் காட்டு வழியே சென்றுகொண்டிருந்தார்! அங்கே கிளிகளும் நாகணவாய் புட்களும் இனிய ஒலியை எழுப்பின. நங்கைக்குத் தனது கிளியின் ஞாபகம் வந்துவிட்டது, ஒரு கிளியைப் பார்க்கிறாள் அது துணையின்றி அங்குமிங்கும் பறக்கிறது. துணை தேடிய அவளுக்கு தனது கிளிக்கும் ஒரு துணை தேட வேண்டுமென்று தோன்றியது. அந்த நங்கையின் வாய் அவளையுமறியாமல்,

'இது என் பைங்கிளி
எடுத்த பைங்கிளி'

என்று முணுமுணுக்கிறது. கிளியில் கொண்ட பேதை அன்பும்—காதலன்பும் போட்டியிட்டு ஈற்றில் காதலன்பு வெற்றியிட்டுகிறது. காதலனுடன் அவள் போய்விட்டாள்.

அகலவத்தை
செ. நடராசா

சில நாட்களில் தான் வளர்த்த கிளியைத் தருவித்துக்கொண்டாள். ஒரே கொண்டாட்டம் அவளுக்கு. மேலும் சிறிது நாட்கள் கழிந்தன. அவளது காதலன் பொருள் தேடச் சென்றுவிட்டான். அவன் திரும்பி வரக் குறித்த நாளும் கடந்தது யாரிடம் 'அவர் எப்போ வருவார்?' என்று கேட்பது. தான் வளர்த்த கிளியையே பிடித்துக்கொண்டாள் கூண்டினின்று கிளியை எடுத்து வீட்டின் ஒதுக்குப் புறமாக உள்ள இடத்திற் கொண்டுபோய் அதைவைத்துக்கொண்டு, மிக மெதுவாக—யாராவது கேட்டுவிடுவார்களே என்ற பயத்துடன்,

செந்தார்ப் பைங்கிளி
முன்கைஏந்தி
யின்று வரலுரைமோ
சென்றிசினோர் திறத்[illegible]
வில்லவ றறிதலஞ்சி
மெல்லெண
மழலை இன் சொற் பயிற்று
நாணுடை அரிவை!

'இன்றைக்கு வருவாரா, என்று கிளியை நாணத்துடன் கேட்கும் அந்த அரிவைக்குக் கிளி என்ன பதில் கூறும்?

எப்படியோ அந்த நங்கையின் காதலன் வந்து சேர்ந்துவிட்டான்! களிபபிற்குக் கேட்கவும் வேண்டுமா? உள்ளந் துள்ளக் காதலனுடன் பள்ளியறையில் ஊடினாள். காதல் வெறியில் அவர்களுக்கிடையே பரிமாறிக் கொண்ட வார்த்தைகள் எத்தனையோ! எல்லாம் இன்பந் தோய்ந்த வார்த்தைகள்; நினைக்க இனிக்கும் காதல் கீதங்கள்; எல்லாவற்றையும் அவளது பொல்லாத கிளி கேட்டுக்கொண்டிருந்தது. மறந்துவிடாமல் ஞாபகத்தில் வைத்துமிருந்தது.

ஒருநாள் காதலன் இல்லாத நேரத்தில் கிளியுடன் அளவளாவிக்கொண்டிருந்தாள் அந்த மங்கை. அந்தப் பொல்லாத கிளி சமயம் பார்த்து அவள் மானத்தை வாங்கிவிட்டது! வாயைக் கையால் பொத்தியவாறு சிலைபோல இருந்தாள் அந்த நங்கை. வேறென்ன செய்வது?

நேயக்கலவி மயக்கத்தே
நிகழ்ந்த வெல்லாம்
கிளியுரைப்ப
வாயைப் புதைக்கும்......'

அந்தப் பொல்லாத கிளி தனது குறுகுறுத்த கண்களால் அவளை ஊடுருவிப் பார்த்[illegible] வாங்கிக்கொண்டேயிருந்தது!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கேட்டுப் பாருங்கள்

குயுக்தி



பி. எஸ். சண்முகநாதன்,
புரகலமோட்டை.

கே: உங்களுக்கும் திருமதி குயுக்தியாருக்கும் எத்தனை பகைவர்கள் உளர்?

ப: எனக்குப் பகைவர்கள் நிறைய இருக்கிறார்கள். ஆனால் திருமதி குயுக்தியாருக்கு மூட்டுப் பூச்சிகளைத் தவிர வேறு பகைவர்களே கிடையா.

ஃ

எஸ். பாலச்சந்திரன்,
யாழ்ப்பாணம்.

கே: உங்களுக்கு நடிகர்களில் யாரைப் பிடிக்காது?

ப: பாராளுமன்றம் என்ற அரங்கில் ஏறி பொதுமக்கள் ஊழியர்களாக நடிக்கும் நடிகரில ஒருவரைக்கூட எனக்குப் பிடிக்காது.

ஃ

செல்வம், முல்லைத்தீவு.

கே: தங்கள் பதில்களில் ஆணவம் தொனிக்கிறது என்கிறேன். ஒப்புக்கொள்வீரா?

ப: ஒப்புக் கொள்ள மாட்டேன். தலைவீக்கம் உள்ளவரிடம் தான் ஆணவம் இருக்கும். என்னிடம் காணப்படுவது தலைவீக்கம் அல்ல; தன்னம்பிக்கை. தன்னம்பிக்கையோடு நான் எழுதும் பதில்களை நீங்கள் தவறுதலாகப் புரிந்து கொண்டீர்கள்.

ஃ

இ. விஜயராணி, உடுவில்.

கே: தங்கள் சுதந்திரன் வாசித்தேன். தமிழில் எழுதக் கூடிய ஒரு ருஷியப் பெண்மணியுடன் பேனாத்தொடர்பு வைக்க ஆசைப்படுகிறேன். நான் உடுவில் பெண்பாடசாலையில் படிப்பவள். என்ன செய்யலாம்?

ப: பண்டிதர் இரத்தினம் சமீபத்தில் ருஷியா சென்று திரும்பியவர். திரும்பியபின் கொஞ்சம் முற்போக்குப் பேசுகிறார்! அவருக்கு எழுதிப் பாருங்கள். அவர் ருஷியாவில் உள்ள தமிழ் பேராசிரியர்கள் மூலம் உங்களுக்கு ஒரு பேனா நண்பியைப் பிடித்துத் தரக்கூடும்.

ஃ

மு கருணாகரன், கல்முனை.

கே: இலங்கையில் உள்ள இளைய கவிஞர்களுள் மஹாகவி, பரமஹம்ஸதாசன், நீலாவணன் ஆகிய மூவரின் தரத்தையும் நிரைப்படுத்துக.

ப: இவர்களை நிரைப் படுத்த முடியாது. ஒவ்வொரு வகையில் ஒவ்வொருவர் சிறந்து விளங்குகிறார். கற்பனைக்கு மஹாகவி, கருத்துக்கு நீலாவணன், பக்திக்குப் பரமஹம்ஸதாசன் என்று சொல்லலாம்.

கே: கவிஞர் நீலாவணனைப் பற்றித் தங்கள் கருத்தென்ன?

ப: நல்ல கவிஞர். பண்பும், பணிவும், அடக்கமும் உடையவர். கவிதைக்கும் மட்டக்களப்புக்கும் உள்ள தொடர்பைப்பற்றி எப்போதும் பெருமிதமாகப் பேசுபவர். அவர்மனதில் ஒரு பெருங்குறை. கவிதைத் துறையில் மட்டக்களப்பு முன்னணியில் நிற்கிறதாம். சிறு கதை இலக்கியத்தில் யாழ்ப்பாணம் முன்னணியில் நிற்கிறதாம். மட்டக்களப்பும் முண்டியடித்துக் கொண்டு சிறுகதை இலக்கியத்தில் முன்னேற வேண்டுமாம். இந்தக்குறை என்று தீரும் என்று எப்போதும் அங்கலாய்க்கிறார் அவர்.

ஃ

க. கிருபானந்தன், கிராம்புவில்.

கே: சுதந்திரனில் ஏன் சோதிடம் பிரசுரிக்கப்படுவதில்லை? சோதிடத்தில் தங்களுக்கு நம்பிக்கையில்லையா?

ப: சோதிட சாத்திரத்தில் எனக்கு நம்பிக்கையுண்டு. ஆனால் சோதிடர்களில்தான் நம்பிக்கையில்லை. ருஷிய அமெரிக்கச் செவ்வாய்க் கிரகங்கள் வான மண்டலத்துக்குப் போய்ச் சேர்ந்த பின் பழைய கிரகங்களின் செல்வாக்கில் சந்தேகம் ஏற்பட்டு வருகிறது.

ஃ

ந சித்தன், தெரணியகலை.

கே: பிரதமர் திருமதி சிறிமாவோ ஆங்கிலம் எதுவரை பயின்றுள்ளார்?

ப: ஜூனியர் தாண்டி சீனியர் வகுப்பில் சில காலம் உட்கார்ந்திருந்ததாகக் கேள்வி. அதைப் பற்றிக் கவலைப்படத் தேவையில்லை. ஏனென்றால் எம். ஏ. பட்டதாரியும் சட்டவாதியுமான கணவன் பண்டாரநாயகாவைவிட மனைவி சிறீமாவோ, கட்சியைக் கட்டுக்கோப்பாகவும், அரசியல் சமநிலையைத் தளப்பமின்றியும் வைத்துக் கொண்டுதானே இருக்கிறார். அரசியலில் படிப்பும் பட்டமும் அவசியம் இல்லை. இவை கல்லூரிப் புரொபஸருக்குத்தான் தேவை. அரசியலில் அனுபவமும், முதுகெலும்பும் வேண்டும். பண்டாரநாயகாவுக்கு முதுகெலும்பு இருக்கவில்லை. சிறிமாவோவுக்கு அது இருக்கிறது. படிப்பேயில்லாத காமராஜர் மேதை ராஜாஜியை காங்கிரஸிலிருந்தே கலைத்துவிட்டு சென்னையைச் சீராக ஆட்சி புரியவில்லையா?

ஃ

சி. செல்வராசா, வயாவிளான்.

கே: பெரும்பான்மை மக்களோடு நடைபெறும் அரசியல் போராட்டத்தில் சத்தியாக்கிரகம் பயன்தரும் என்ற நம்பிக்கை தங்களுக்கு உண்டா?

ப: நிச்சயமாக உண்டு. ஆனால் சென்ற முறை நடைபெற்றது போல் ஒரு நாள் சத்தியாக்கிரகம் பயனில்லை. பயிற்றப்பட்ட தொண்டர்களைக் கொண்டு கோஷ்டி கோஷ்டியாகத் தொடர்ந்து நடைபெற வேண்டும். இன்னொரு முறை சத்தியாக்கிரகப் போராட்டம் ஆரம்பிக்கப்பட்டால் முன்பு நடந்தது போல் அடிதடியும் பலாத்காரமும் ஒருபோதும் நடக்கா. தங்கள் கடந்த காலச் செயல்களுக்குச் சிங்களவர்களே இன்று வெட்கப்படுகிறார்கள். பெரும்பான்மையின் ஆதிக்கத்தை எதிர்த்துப் போராட வலுவிழந்த சிறுபான்மை மக்களுக்கு உள்ள ஒரே வலிமைமிக்க ஆயுதம் சத்தியாக்கிரகம்தான் என்பதில் எனக்கு அசைக்க முடியாத நம்பிக்கையுண்டு.

ஃ

வ. தவராசா, காங்கேசன்துறை.

கே: எத்தனையோ சினிமாப் பத்திரிகைகள் வருகின்றன. தங்களுக்குப்பிடித்தமான பத்திரிகை எது?

ப: சினிமாப் பத்திரிகையில் இப்போது தினப் பத்திரிகைகள் கூட வெளிவருகின்றனவே. தென்றல் திரை என்பது ஒரு சினிமாத் தினப் பத்திரிகை. இந்தப் பத்திரிகை மிக நன்றாக இருக்கிறது. சினிமாச் சம்பவங்களை வைத்து நல்ல விறுவிறுப்பான செய்திகளைத் தயாரித்து வெளியிடுகிறார்கள். இதன் ஆசிரியர் திருகே. ஆர். பாலன் ராயபேட்டைக்காரர் என்று தோன்றுகிறது. அவர் தீட்டும் தலையங்கங்களும் நன்றாயிருக்கின்றன. நான் விரும்பிப் படிக்கும் சினிமா பத்திரிகை தென்றல் திரைதான். சினிமாச் செய்தியென்ற புதுத் தினசரியின் தராதரத்தை இனித்தான் பார்க்க வேண்டும்.

ஃ

த. சோமசுந்தரம்,
[illegible]

கே: எல்லாள மன்னன் இப்போது இருந்திருந்தால் வாசலில் ஆராய்ச்சி மணி கட்டித் தொங்க விட்டிருப்பானா?

ப: சே, இது என்ன கேள்வி. கட்டித் தொங்கவிட அவனுக்கு வேறு வேலையில்லையா? வாசலில் ஒரு சுவிச்சைப் பொருத்தியிருப்பான். 'எலட்ரிக் பெல்' அவன் படுக்கையறையில் ஒலித்திருக்கும்.

ஃ

சி. வணங்காமுடி, மந்துவில்

கே: வாழ்க்கையில் ஏற்றமுண்டானால் இறக்கமும் உண்டு என்கிறார்களே இதை உதாரணத்தால் விளக்க முடியுமா?

ப: முடியும். தற்காலப் பாடசாலை மாணவிகளின் 'கவுண்' காலால் ஏறுகிறது; கழுத்தால் இறங்குகிறது. இந்த உதாரணம் போதாதா?

ஃ

க, சண்முகநாதன்,
வட்டக்கச்சி.

கே: தமிழரசுக் கட்சிக்கு வெளியே உள்ள தமிழ்ப் பிரதிநிதிகளுள் தமிழ் மக்களின் மதிப்பையும் நல்லெண்ணத்தையும் பெற்ற பிரதிநிதி யார்?

ப: சந்தேகம் இல்லாமல் உடுப்பிட்டிப் பிரதிநிதி திரு. எம். சிவசிதம்பரம் தான். திரு அல்பிரட் துரையப்பா, பொன்னம்பலத்தின் ஒரு 'டுப்ளிகேட்' தான் என்ற அபிப்பிராயம் வெகு வேகமாகப் பரவி வருகிறது. மந்திரிப் பதவிதான் அவர் அரசியல் இலட்சியம் என்று அவருடன் நெருங்கிப் பழகியவர்கள் அபிப்பிராயப் படுகிறார்கள்.

ஃ

செல்வி த தங்கராணி, கல்முனை

கே: இக்கால மாணவர்கள் சினிமாப் பார்ப்பதனால் என்ன பலனை அடைகிறார்கள்?

ப: அக்கால மாணவர்கள் திருவிழாப் பார்த்ததனால் அடைந்த பயனை அடைகிறார்கள்.

ஃ

ம. இரத்தினசபாபதி,
யாழ்ப்பாணம்.

கே: உங்களிடம் சோம்பல் குடிகொண்டிருப்பதாக 'தாண்டவக்கோன்' கூறுகிறார். இது உண்மையா?

ப: நான் தினமும் சுமார் 18 மணித்தியாலங்கள் ஏதாவது வேலை செய்து கொண்டேயிருக்கிறேன். இதை சோம்பல் என்று குறிப்பிட்டால், என்னை அதிக காலம் வாழ வைக்க அவர் விரும்பவில்லைப்போல் தெரிகிறது. என்றாலும் தாண்டவக்கோன் மீது நான் கோபப்படுவதற்கில்லை. ஏனென்றால் அவர் நான் அதிகப்படியான கேள்விகளுக்குப் பதில் சொல்லவேண்டும் என்ற பேராவலில் இடப்படி அவ்வாறாகக் கூறியிருக்கிறார்.

ஃ

எஸ் சியாம் மாத்தளை.

கே: சுதந்திரனில் பேனா நண்பர்கள் பகுதி ஆரம்பித்தால் என்ன?

ப: பேஷாக ஆரம்பிக்கலாம். பவுண்டன் பேனா நண்பர்கள் வேண்டுமா? போல் பொயின்ட் பேனா நண்பர்கள் வேண்டுமா? அல்லது சாதா தொட்டெழுதும் பேனா நண்பர்கள் போதுமா?

ஃ

செல்வி க. கமலாம்பிகை,
நல்லூர்.

கே: எட்டாத பழம் புளிக்கும் என்று தத்துவம் பேசுபவர்களைப் பற்றித் தங்கள் கருத்து என்ன?

ப: எட்டிப் பிடிப்பதற்கு நெஞ்சில் தைரியம் இல்லாத கோழைகள் அவர்கள்.

ஃ

த. இராசரத்தினம், இணுவில்

கே: ஒரு பிரபல யூ. என். பி. யைத் தாங்கள தமிழரசுக் கட்சியின் மூன்று மூளைகளில் ஒன்று என்று வர்ணித்திருந்தீர்கள். ஆனால் அந்த மூளை தமிழர்கள் சிங்களம் படிக்கலாம் என்று அந்தரங்கத்தில் அபிப்பிராயம் வெளியிடுகிறதாமே, அறிவீரா?

ப: நான் அறியவில்லை. நம்பவும் முடியவில்லை. இருந்தாலும் மூளை சில சமயம் குழம்பிப் போவதில்லையா?

ஃ

த. விநாயகமூர்த்தி, இணுவில்.

கே: சிம்மாசனப் பிரசங்கம் தமிழில் வாசிக்கப்பட்டது அவமானமென்றும் காரணம் அந்நிய மொழியான ஆங்கில மொழியின் தரத்துக்கு தமிழ்மொழியையும் அரசாங்கம் கொண்டு வந்துவிட்டதென்றும், இத்தகைய காரியத்தை தமிழ் எம். பிக்கள் ஆதரித்துப் பேசுவது தமிழ் மக்களுக்கு ஏற்பட்ட அவமானத்தின் மேல் அவமானம் என்றும் ஆனைப்பந்திக் காங்கிரஸ் தீர்மானித்திருக்கிறதே!

ப: பாவம், தமிழ் காங்கிரசுக்குத் தலை பழுதாகி விட்டது! இல்லாவிட்டால் தனது உறுப்பினரான உடுப்பிட்டிப் பிரதிநிதி திரு. சிவசிதம்பரம் "சிம்மாசனப் பிரசங்கம் தமிழில் வாசிக்கப் பட்டதும், தொண்டமான் பாராளுமன்றத்துக்கு நியமிக்கப்பட்டதும் வரவேற்கக் கூடியன" என்று பேசி வருகையில், தமிழ் காங்கிரஸ் இப்படித் தீர்மானம் நிறைவேற்றுமா?

## சிட்டே!

இன்னமுதைக் காய்ச்சியுயிர் அச்சில் வார்த்த
எழிலுருவே! விண்சுடர்த்தேன் ஒளியை உண்டு
பண்ணிசைத்து விண்பறக்கும் சிட்டே! உன்னைப்
பார்க்கின்ற பொழுதிலெலாம் என்னகத்துட்
சொன்னயத்துக் கெட்டாத மகிழ்ச்சி பொங்கும்
சொர்ணவடி வானஉனைப் பிடித்துக் கொஞ்ச
என்னுயிருள் ஒருணர்ச்சி துள்ளும்! நீ ஓர்
இயலழகுத் தேவதைதான்; ஐயம் இல்லை!

மானிடர்தம் வீடுகளிற் கூடு கட்டி,
மாசற்ற இளமனைவி மக்க ளோடு,
தேனின்பக் கடலாயுத் திளைத்திட் டாலும்,
சிறுசிறகு படபடக்க நாளெல் லாம்நீ
வானெழுந்து பறப்பதுமேன்? முற்றத் திற்பின்
வந்தமர்வ தேனோ.ஓ மகிழ்ச்சிப் புள்ளே?
தானியத்தைப் பொறுக்குதற்கோ?
உனக்கும் அ.ஃ.தே,
தளர்வின்றி உயிர்காக்கும் அமுதம் போலும்!

கட்டிடங்கள் படைக்குமனைக் கலைஞர் தாமும்
கண்டென்றும் வியக்கும்வணம் நினறன்கூட்டைக்
கட்டிடநீ கற்றதெங்கு? கலைஞ னோநீ?
கல்லாத *இயல்பூககம் உனக்குண் டோசொல்?
பட்டனைய மென்சிறகுப் பைம்புள் ளே'நீ
பருமனிலாச் சிற்றுடலைப் பெற்றும், இன்பப்
பெட்டகமாய்க் கலையரசாய்க் குடும்ப வாழ்வின்
பெற்றியுணர்ந் திட்டவனாய்த் திகழ்தல் எங்ஙன்?

—சே. கனகசபை, பி. ஏ.

*INSTINCT

வெளிவந்துவிட்டன!

அரசகரும மொழித் திணைக்களத் தமிழ் ஆராய்ச்சித் துறைத் தலைவர்
வித்துவான் பண்டிதர் கா. பொ. இரத்தினம்
பி. ஏ. ஆனர்ஸ் [இலண்டன்] எம். ஏ., பி. ஒ. எல். [சென்னை]
எழுதிய நூல்கள்

இலக்கியம் கற்பித்தல்... விலை ரூ. 3-00
இலக்கியம் கற்பித்தற்றுறையில் முதன் முதலாக வெளிவந்துள்ள முழுநூல். இலக்கியத்தைக் கற்போருக்கும், கற்பிப்போருக்கும், ஆராய்ச்சி செய்வோருக்கும் இன்றியமையாத நூல்.

இலங்கையில் இன்பத் தமிழ்
விலை ரூ. 1-50
புதுக்கிய இரண்டாம் பதிப்பு
இன்று ஒவ்வொரு தமிழன் கையிலும் இருக்கவேண்டிய இனிய நூல். கல்வி அதிகாரியினால் கல்லூரிகளிற் கற்பிக்கத்தக்கதெனக் ஏற்றுக்கொள்ளப்பட்டது. பல கல்லூரிகள் பாடநூலாகப் பயன்படுத்துகின்றன.

கலைவாணி புத்தக நிலையம்,
யாழ்ப்பாணம்—கண்டி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழியக்கம்

## தமிழின் பெருமை இன்னும் தமிழருக்குத் தெரியவில்லையே!

தமிழ் மக்களிடையே ஒரு பெருஞ் சாபக்கேடு காணப்படுகிறது. தமிழின் பழம் பெருமையையும் பேராற்றலையும் அவர்கள் உணராமல் வாழ்ந்து வருகிறார்கள். இதனால் தமிழை உலக அரங்கில் முன்னணியிலே இடம் பெறச் செய்யும் வாய்ப்புக்களை இழந்து விடுகின்றனர். தமிழின் பெருமையையும், உரிமையையும் பிறமொழியினரே எடுத்துக் காட்டித் தமிழரைத் தெருட்ட வேண்டியிருக்கிறது. ஒக்ஸ்போர்ட் பல்கலைக் கழகப் பேராசிரியர் பரோ சமக்கிருத மொழி பற்றி எழுதிய நூலில் தமிழ் மொழியிலிருந்து வட மொழிக்குச் சென்ற பல சொற்களை எடுத்துக் காட்டித் தமிழுக்குப் பெருமை தந்துள்ளர். பூனாப் பல்கலைக் கழகத்தின் பட்டமளிப்பு விழாச் சொற் பொழிவை நிகழ்த்திய சமக்கிருதப் பேராசிரியர் கலாநிதி தாதே இந்தியா முழுவதற்கும் இந்தியுடன் தமிழையும் அரசகரும மொழியாக்கி இருப்பின் இந்தியாவிலே மொழிப் பிரச்சினை தோன்றியிராதென்று தமது உரையில் எடுத்து விளக்கியுளர்.

### சுவலபெல் கூறியது

தமிழை இந்தியாவின் அரசகரும மொழியாக்குமாறு ஒரு தமிழரும் இன்னும் குரல் எழுப்பாதிருக்கும் பொழுது பிற மொழிப் பேராசிரியர் இவ்வாறு கூறியிருப்பதை ஒவ்வொரு தமிழரும் எண்ணிப் பார்க்க வேண்டும். செக்கோசிலவாக்கியாவிலிருந்து தமிழ் வளர்க்கும் பேரறிஞர் கமில் சுவலபெல் தமிழர் தமிழ் உணர்ச்சியின்றி வாழுகிறார்கள் என்பதைத் தமிழகத்துக்கு வந்து பல நண்பர்களுடன் உரையாடிய பொழுது எடுத்துக் காட்டியுளர்.

### சிங்கள மொழிவெறிக்கே எதிர்ப்பு

தமிழ் மக்களிடையே இன்று குறைவாக இருப்பது தமிழ் உணர்ச்சியே. மிகுதியாக இருப்பது அடிமை உணர்ச்சி இந்த உலகத்தில் நாகரிகமடைந்து உயர்ந்த வாழ்வு வாழும் தன்மானமுள்ள மக்கள் யாவரும் தாங்கள் கூடி நடத்தும் அலுவல்களையெல்லாம் தங்கள் தாய் மொழியிலேயே நடத்துகிறார்கள். தங்கள் கையெழுத்தைத் தங்கள் தாய்மொழியிலேயே இடுகிறார்கள். தமிழர்களாகிய நாம் என்ன செய்கிறோம்? சிங்கள மக்களிடையே காணப்படும் தாய்மொழி ஆர்வத்திலே ஆயிரத்தில் ஒரு பங்கேனும் எங்களிடமுண்டா? சிங்கள மக்கள் தங்கள் கருமங்களைத் தங்கள் தாய் மொழியில் நடத்துவதற்கு முயல்வதை நாங்கள் வரவேற்கிறோம்; மிக விரைவில் வெற்றி அடையுங்கள் என வாழ்த்துகிறோம். ஆனல் இந்த ஆர்வம் மொழி வெறியாகித் தமிழரைச் சிங்கள மொழிக்கு அடிமையாக்குவதையே நாம் வெறுக்கிறோம்; எதிர்க்கிறோம் "உங்கள் மொழியை நீங்கள் போற்றுவது போல் எங்கள் மொழியை நாங்கள் போற்றுதற்குத் தடை செய்யாதீர்கள்; இது மாபெரும் அநீதி" என்று சொல்லுகிறோம். எனவே தமிழ் இயக்கம் சிங்கள மக்களின் மொழி உணர்ச்சிக்கு மாறுபட்டதன்று. அவர்களிடத்துள்ள மொழி உணர்ச்சியைத் தமிழ் மக்களிடத்தும் உண்டாக்குவதையே நோக்கமாகக் கொண்டது.

### தமிழ் இயக்கத்தை நகக்க முயற்சி

தமிழ் இயக்கத்துக்கு இன்று ஒத்துழைப்பு நல்காதவர்கள் தமிழ்ச் சமுதாயத்தை இன்று வரை ஏமாற்றிச் சுரண்டிப் பிழைத்து வருபவர்களே. இவர்கள் தமிழுக்குப் பாடுபடுகிறோம் என்பார்கள். ஆனல் தமிழிலே கையெழுத்து வைக்கக் கூசுவார்கள்; தமிழிலே பேச வெட்கப்படுவார்கள். தமிழ் தெரியாத, தமிழ்ப் பற்றல்லாத இவர்கள் தமிழ்ச் சமுதாயத்திலே தாம் பெற்றுவந்த முதன்மையையும் மதிப்பும் தமிழுக்கு முதன்மை கொடுத்தால் மறைந்து விடுமோ என்று ஏங்கி மறைமுகமாகத் தமிழ் இயக்கத்தை நசுக்க முயல்கின்றனர்.

### பொதுமக்கள் இயக்கம்

தமிழ் இயக்கம் பொது மக்கள் இயக்கம்; பச்சைப் பசுந் தமிழர் இயக்கம். தமிழ் பேசத் தெரியாத தமிழரின் இயக்கமன்று; தமிழராயிருந்தும் தமிழைப் படிக்க விரும்பாமல், தமிழிலே எழுதப் பேச அறியின்றித் தமிழரைச் சிங்களம் படியுங்கள் என்று கட்டளையிடுபவர்களையும் கயவர்களை அம்பலப்படுத்தி அடக்கி ஒடுக்கும் இயக்கம். எனவே பொதுமக்களைப் பல்லாயிரக் கணக்காக இவ்வியக்கத்திற் சேருமாறு கேட்டுக் கொள்ளுகிறோம்.

தமிழியக்கத் தொண்டர்களாகச் சேர விரும்புவோர் உடனே 3 சதத்துக்கு ஓர் அஞ்சல் அட்டையை வாங்கித் தங்கள் பெயர், முகவரி, தொழில், வயது முதலியவற்றை எழுதிக் கையொப்பமிட்டுத் தமிழியக்கம் மே/பா. சுதந்திரன் த. பெ. 1183, கொழும்பு, எனும் முகவரிக்கு அனுப்புமாறு கேட்டுக் கொள்கிறோம்.

### தமிழியக்கத் தொண்டர்கள்


559 ஐ. நரேந்திரன், எழுவைதீவு; 560 இ. சந்திரன், திடத்தலாவை, 561 பொ. துரைராசு, தும்பகொடை; 562 ச. குழந்தசாமி, வெலக்கும்புற; 563 அ. கணபதிப்பிள்ளை, மலைமம்பிட்டி; 564 மு. பஞ்சலிங்கம், கருவாக்கேர்

(12ம் பக்கம் பார்க்க)






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# ஒத்தாசை உபேட்சை
## (Contributory Negligence)

திரு. எஸ். சபாபதிப்பிள்ளை
M. A., LL. B. (Lond) F. R. A. S., Bar-at-Law
இலங்கை சட்டக்கல்லூரி, தொழில் நுட்பக் கல்லூரி விரிவுரையாளர்
வருமானவரி பரிசீலனைக் குழு சட்ட ஆலோசகர்

முன்னைய கட்டுரையில் ஒருவர் அசட்டை அல்லது உபேட்சை (Negligent) செயலினால் இன்னொருவருக்கு நட்டம் விளைத்தால் அதனால் வரும் நட்டத்துக்காக நட்டமடைந்தவருக்கு நட்ட ஈடு கொடுக்க வேண்டுமெனவும் ஆனால் அதற்குப் பிரதிவாதங்களுண்டெனவும், அப்பிரதிவாதங்களொன்றில் ஒத்தாசை உபேட்சையும் (Contributory Negligence) ஒன்றெனவும் கண்டோம். இனி ஒத்தாசை உபேட்சையைப்பற்றி விரிவாக ஆராய்வோம். ஒருவர் தம் கடமையில் அசட்டையாயிருந்து இன்னொருவருக்குத் தீங்கிழைத்த போதிலும் தீங்கிழைக்கப்பட்டவரும் தன்னைக் காப்பாற்றும் கடமையிலும் சில வேளை அசட்டையாயிருந்திருக்கலாம் உதாரணமாகத் தெரு வீதிகளில் வரும் வாகனச் சாரதிகள் தங்கள் வாகனத்தை ஜாக்கிரதையுடன் ஓட்டி வருவார்களானாலும் மனப்போக்கில் தெருவில் நடமாடுபவர்கள் தங்களைக்காப்பாற்றுமெண்ணத்தை உதறி விட்டு அசட்டையாக நடந்து விட்டு ஏற்பட்ட நட்டத்துக்கு நட்ட ஈடு கோர முடியாது; ஏனெனில் நட்டமடைந்தவரும் உபேட்சைக்கு ஒத்தாசையாயிருந்திருக்கிறார். இதை ஒத்தாசை உபேட்சைப் பிரதிவாதமென்பர்.

### ஒத்தாசை உபேட்சைச் சட்டம்

எங்கள் பொதுச் சட்டத்தின் தாய்ச் சட்டமாகிய ரோமன் டச்சட்டத்தில் இக்கொள்கை மதிகம் விஸ்தரிக்கப் படவில்லையாதலால் எங்கள் சட்டம் இவ்விஷயத்தில் ஆங்கிலப் பொதுச் சட்டத்தையே தழுவி நிற்கும். ஆங்கிலேய தேசத்தில் இவ்விடயமாக அணிமையில் ஒத்தாசை உபேட்சைச் சட்டம் (Contributory Negligence Act) எனும் சட்டம் நடைமுறைக்குவந்திருக்கிறது. அச்சட்டம் இலங்கையைப் பொறுத்தவரையில் சட்டம் இல்லாவிடினும் இச்சட்டம் வருமுன் இருந்த ஆங்கிலப் பொதுச்சட்டக் கொள்கை இங்கும் கையாளப்படும். பொதுவாக ஒத்தாசை உபேட்சைப் பிரதிவாதத்தின் சாராம்சம் யாதெனில் பிரதிவாதி தான் செய்த செயல் அசட்டைத்தனத்தால் நடந்ததென ஒத்துக்கொண்ட போதிலும் வாதியும் ஒருமாதிரிக்குத் தனக்கு விளைந்த நட்டத்துக்கு ஒத்தாசையுடையவரே எனபதாம். சுருங்கக் கூறின் இருவரும் அசட்டையாய்நடந்த போதிலும் நட்டமடைந்தவரின் செயலே பிரதானமாக நட்ட விளைவுக்கு ஏதுவாயிருந்தது என்பதேயாம். இம்மாதிரியான சான்றை நிரூபித்தால் வாதியின் வழக்குத் தள்ளுபடியாகும்; ஆனால் இச்சான்றை நிரூபிப்பது பிரதிவாதியின் கடமையாகும். வாதி நியாயமான ஜாக்கிரதையாயிருந்திருந்தால் விபத்தைத் தவிர்த்திருக்கலாம் என்னும் வாதம் மட்டும் போதியதல்ல என்பதை இங்கு கவனிக்க வேண்டும். இதை மூன்றுவித உதாரணங்கள் மூலம் அறிந்து கொள்ளலாம்.

### குறைவினமுடைய வாதி

(1) நட்டமடைந்தவர் தனக்குடைய குறைவினம் காரணமாக போதிய ஜாக்கிரதையில்லாமலிருந்திருக்கலாம். உதாரணமாகச் சாலையில் நடமாடினவர் செவிடராக அல்லது குழந்தையாகவிருக்கலாம் இக்குறைவினம் பிரதிவாதி அறியக்கூடியதாயிருந்தால் சாதாரணத்துக்கு மேற்பட்ட அவதானம் காட்ட வேண்டும். இது போலவே அபாய அல்லது விஷப் பதார்த்தங்களை வசிகரமாக வைப்பவர்கள் கவனிக்க வேண்டும். குழந்தைகள் அல்லது வேறு தங்களைக் காப்பாற்றப் பெலவீனமடைந்தவர்கள்பால் மற்றவர்கள் அதிக ஜாக்கிரதை காட்ட வேண்டும். இதை ஒரு வழக்கு உதாரணத்தால் அறியலாம்.

### வழக்கில் தீர்ப்பு

ஓர் உள்ளூராட்சி ஸ்தாபனத்தார் ஒருபூங்காவை ஏற்படுத்தி யிருந்தனர் அதில் ஒரு பகுதியில் பிள்ளைகள் விளையாடுவதற்கான விளையாட்டு இடமும் மற்றொரு பக்கத்தில் செடிகள் பூ மரங்களும் நடப்பட்டிருந்தன. அம்மரங்கள் ஒன்றின் பழங்கள் கண்ணைக் கவரும் விதமாய் இருந்தபோதிலும் அவை நச்சுவகையே சேர்ந்தனவையாக இருந்தன. விளையாட்டு மைதானத்தில் விளையாடிய இளம் சிறுவன் படலையைத் திறந்து போய் உள்ளிருக்கும் நச்சுப் பழத்தைத் தின்று உயிர் பலி கொடுக்க நேரிட்டது ஸ்தாபனத்தார் செடிகளையும் பூ மரங்களையும் ஒருவரும் தொடக்கூடாதென்று அபாய அறிக்கை கொடுத்திருந்தார்கள். சிறுவனின் தகப்பன் நட்டம் கோரி வழக்கு வைத்த பொழுது ஸ்தாபனத்தார் பையனும் ஒத்தாசை உபேட்சைக்கு (Contributory Negligence) ஏதுவாயிருந்தானெனப் பிரதிவாதம் செய்தனர். ஆனால் நீதிமன்றம் அப்பிரதிவாதம் போதியதல்லவெனத் தீர்த்துத் தகப்பனுக்கு நட்ட ஈடு அளித்தது. ஏனெனில் குழந்தைகளை வசிகரிக்கும் பொருள்களை அவர்களுக்கு எட்டும்படி வைத்து விட்டு அதைத் தொடக் கூடாதெனும் அபாய அறிக்கை கொடுத்தலில் ஒருவித பயனுமில்லை அதனால் சிறுவர்களுக்குக் காட்ட வேண்டிய கடமை தீர்ந்து போகமாட்டாது.

### ரோட்டில் கம்பத்தில் மோதினால்...

எனினும் சிறுவர்கள் மீது ஒத்தாசை அபேட்சைப் பிரதிவாதம் எப்பொழுதும் செல்லுபடியாகாதென்பதைத் திடமாகச் சொல்வதற்கில்லை. ஒரு சிறுவன் தன் வயதுக்கேற்ற அறிவும் ஆற்றலும் தன் நடத்தையில் காட்ட வேண்டும். அப்படிக் காட்டாமல் விடுவதால் தன் மேல் நட்டத்தை இழுத்துக் கொண்டால் அது ஒத்தாசை உபேட்சையாக முடியும்; உதாரணமாக ஒரு பையன் நடுப்பகலில் தெருவோரத்தில் வைக்கப்பட்டள் தம்ப மொன்றில் மோதிக் காயப்பட்டால் ஸ்தம்பத்தை வைத்தவர் அசட்டையாயிருந்திருந்தாலும் பையனின் ஒத்தாசை [illegible] யால் நட்டம் விளைந்ததென நிரூபித்து தான் [illegible]லிருந்து தப்பித்துக்கொள்ளலாம்.

### ரயிலிலிருந்து விழுந்தால்...

(2) மற்றவர்கள் ஜாக்கிரதையாயிருப்பரென்று அனுமானிக்கும் சூழ்நிலையிருந்தாலும் வாதி மீது ஒத்தாசை உபேட்சை செல்லுபடியாகாது. உதாரணமாக ஒருவர் புகையிரத வண்டிக் கதவு பூட்டியிருக்குமெனும் நம்பிக்கையில் அதிலே சாரும்பொழுது கீழே விழுந்து காயமடைந்தார். இங்கு புகையிரத உத்தியோகஸ்தர் தங்கள் கடமையைச் செய்திருப்பர் என்பது அனுமானிக்கத்தக்க விடயம். எனினும் ஒரு சாதாரண மனிதன் சூழ்நிலையில் அபாயத்தைக் காணக்கூடிய நிலையிலிருந்தால் அவன் அவ்வபாயத்தை அசட்டை பண்ணி நடந்து தன் பகுதி நட்டமடைந்தால் அது ஒத்தாசை உபேட்சையாக முடியும் என்பது பொதுவறிவுக்குடைய கொள்கையே.

### ஓடும் பஸ்ஸிலிருந்து குதித்தால்...

(3) நட்டமடைந்தவர் தப்ப முடியாத ஆபத்தில் சிக்கி அதன் காரணமாக அசட்டையான செய்கையைச் செய்து நட்டத்தை அடைந்திருக்கலாம். அச்சமயத்திலும் அவரின் அசட்டையை ஒத்தாசை உபேட்சையெனக் கொள்ளலாகாது. உதாரணமாக ஒருவர் தன் அசட்டையினத்தால் இன்னொருவரைப் பயங்கர நிலையில் தத்தளிக்க விட்டு விட்டு அதன் பிறகு "நீர் இப்படிச் செய்திருந்தால் தப்பியிருக்கலாம்; ஏன் அப்படிச் செய்தீர்?" என்று கேட்க முடியாது.

உதாரணமாக ஒரு பஸ் சாரதி அசட்டையாக பஸ்ஸை ஓட்டிப் போகும் பொழுது ஆபத்து வருமென நிதானிக்கும் சூழ்நிலையில் பஸ்ஸிலிருந்த ஒருவர் தன்னைக் காப்பாற்றும் நோக்கமாகக் குதித்தார்; அப்படிக் குதிக்கையில் அவருக்குக் காயம் ஏற்பட்டது அசட்டையான சாரதியில் வழக்கு வைத்தால் வாதிமீது ஒத்தாசை உபேட்சையுண்டு என்று சொல்லித் தப்ப முடியாது. ஏனெனில் ஜீவனுக்கு ஆபத்து ஏற்படப் போகிறதெனும் சூழ்நிலையில் எல்லாவற்றையும் சற்றுக் கவனமாக நிதானிக்கும் சந்தர்ப்பமிராது அந்நிலையில் கொண்டுவந்து விட்டவர் தன் குற்றத்தை ஒரு பக்கத்தில் வைத்துவிட்டு ஆபத்துக்குள்ளானவரின் அசட்டையீனத்தைப் பற்றி விசாரிக்க இடமில்லை எனினும் ஆபத்துக்குள்ளாகியவரின் நடத்தை நியாயமான மனிதனின் செயலோ என்பதை விசாரிக்க வேண்டும் ஒருவர் பயந்தாங்கொள்ளியாக விருந்து ஒரு சிறிய ஆபத்தைத் தன் மனதில் பெருக்கி நியாயமற்ற முறையில் நடந்து தன் மீது தானே தீங்கைத் தேடிவிட்டு முதல் அசட்டையாயிருந்தவர் மீது முழுக் குற்றத்தையும் சுமத்த முடியாது.

### குதிரையும் காரும் மோதினால்......

இருவரும் அசட்டையாய் நடந்திருந்தால் இவர்களில் எவர் நட்டம் கொடுக்க வேண்டுமெனும் விஷயத்தில் அறியவேண்டியதொன்றுண்டு. தடுக்கும் கடைசி வாய்ப்பு (Last Opportunity) யாருக்கிருந்தது என்பது ஒரு பிரதான விஷயம். ஒருவர் நடுவீதியில் தன் குதிரையை அவிழ்த்து உலாவ விட்டார். இன்னொருவர் மோட்டார் வாகனத்தில் கவனயீனமாக வருகையில் வாகனத்தை நிறுத்த முடியாமல் தானும் காயப்பட்டுக் குதிரையையும் காயப்படுத்தினாரென வைப்போம். இங்கு விபத்தைத் தடுப்பதற்கு வாய்ப்புப் பின் வந்த மோட்டார் வாகனச் சாரதிக்கே. அவர் ஜாக்கிரதையாயிருந்திருந்தால் தன் வாகனத்தை நிறுத்தியிருக்கலாம். ஆகையால் குதிரையின் உரிமைக்காரர் நட்ட ஈடு கோரி வழக்கு வைத்தால் அவர் மீது ஒத்தாசை உபேட்சையென்றும் பிரதிவாதம் மேற்செல்லாது. ஆனால் குதிரையின் உடமைக்காரர் மீது மோட்டார் வாகனக்காரர் வழக்கு வைத்தால் அவர் ஒத்தாசை உபேட்சையென்றும் பிரதிவாதத்தைக் காட்டித் தப்பித்துக்கொள்ளலாம்.

### மோட்டாரும் சைக்கிளும் மோதினால்

இன்னுமொரு உதாரணத்தைக் கவனிப்போம். ஒருவர் துவிச்சக்கர வண்டியில் பிழையான பக்கமாகப் போகிறார். அவர் தலையைக் குனிந்தவாறு ஓட்டிச் செல்கிறார் முறையான பக்கமாக அருகால் போகும் மோட்டார் சாரதி இதைக் கவனித்தும் அசட்டையாகப் போய் துவிச்சக்கரத்தைத் தாக்குகிறார். தலை குனிந்தபடி ஓடிய துவிச்சக்கரச் சாரதி முறையீனமாகவும் சென்றபடியால் அவரில் அசட்டைக் குற்றமுண்டு; எனினும் இச் சூழ்நிலையில்

(12-ம் பக்கம் பார்க்க)

கேட்டீர்களா? கேள்விப்பட்டீர்களா?
எங்கள் ஸ்தாபனத்தின் முதல் ஆண்டு நிறைவு காரணமாக நாம் விற்கும்
★ நாஷனல் ரான்சிஸ்டர் ரேடியோக்கள்,
★ ஸ்பார்க்ஸ்லிங் விசிறிகள்,
★ எலெக்ட்ரிக் ஹொட்பி ளேற்ஸ், மற்றும் சகல பொருட்களினதும் விலைகள் மிகக் குறைக்கப்பட்டிருக்கின்றன.
National
இச்சலுகை இன்று முதல் ஒரு வாரம் மட்டுமே!!




எலெட் ரேடியோ & என்ஜினியரிங் கம்பெனி,
26, கெய்ஸர் வீதி, கொழும்பு.
—Mylads/EREC—

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேசியமயம்: அது சிங்கள-பௌத்த ஆதிக்கமே!

## மந்திரி சமரவீர கூறுகிருர்

## உபகாரச் சம்பளப் படிப்புக்கு சிங்களத்தில் தேர்ச்சி தேவையில்லைத்தானு?

### அரசாங்கம் முடிவு செய்யவில்லையாம்-கல்விமந்திரி

## சைவக் குருக்கள்களுக்கு வரி விலக்கு அளிக்க எஸ். ஜே. வி.வற்புறுத்து

14 செப்டம்பர் 1960
கேள்வி நேரம்:

திரு. தகநாயகா: (தொழில், தேசிய மயசேவை அமைச்சரின் பாராளுமன்றக் காரியதரிசியிடம் கேட்கிருர்): (அ) ஊழியர்கள் சேம நிதி அங்கத்தவர்களின் வருடாந்த அறிக்கை ஆங்கிலத்தில் மாத்திரமே விநியோகிக்கப் படுகிறது என்பதையும்ஊழியர்கள் அதில் கூறப்படுபவற்றைப் புரிந்து கொள்ள முடியவில்லை என்பதையும் நீங்கள் அறிவீர்களா?

(ஆ) இத்தகைய விளம்பரங்களை ஆட்சிமொழியாகிய சிங்களத்தில் விநியோகிக்க......ஏற்பாடு செய்வீர்களா?

திரு எம். பி. டி. சொய்ஸா சிரிவர்தன: (அ) இன்று புழக்கத்திலிருக்கும் ஆங்கிலப் பத்திரங்கள் 1959-ல் அச்சிடப்பட்டவை.

(ஆ) ஆம். இவ் வருடம் புதுப் பத்திரகைகள் ஆட்சி மொழியிலேயே அச்சிடப்படும்.

தக: ஊழியர்கள் புரிந்து கொள்ளக் கூடிய வகையில அந்த அறிக்கையில் ஒருவித விளக்கங்களும் இடம் பெறுமா?

சிரிவர்தன: சிங்களத்தில் அச்சிட யோசித்திருக்கிறது அரசாங்கம். சிங்களத்தில் அச்சிடப்பட்டால், ஊழியர்கள் புரிந்து கொள்வார்கள் தானே!

சா. ஜே. வே. செல்வநாயகம்: இப்பத்திரங்கள் தமிழிலும் அச்சிடப்படுமா?

சிரிவர்தன: ஆமாம், இப்பத்திரங்கள் தமிழிலும் அச்சிடப்படும்.


ஆங்கிலம்

ஆங்கிலம் அழகாகப் பேச, வாசிக்க, எழுத ஆறே மாதங்களில் படிக்க விரும்பினல் இலவச விபரங்களுக்கு எழுதுக.

அற்லஸ் ஹோல்,
த. பெட்டி: 649,
கொழும்பு.


### ஆசிரியர்களும் பயிற்சிக் கலாசாலையும்

திரு இராசதுரை: (கல்வி மந்திரியிடம் கேள்வி):

1. பலாலி, கோப்பாய், மட்டக்களப்பு ஆகிய பயிற்சிக் கல்லூரிகளில் பயிற்சி பெறும். (அ) தராதரப் பத்திரம் பெற்ற ஆசிரியர்கள் எத்தனை பேர்? (ஆ) தராதரப் பத்திரமற்ற ஆசிரியர்கள் எத்தனை பேர்?

பதில்: மட்டக்களப்பு, பலாலி, கோப்பாய் ஆகிய பயிற்சிக் கல்லூரிகளில் பயிலும் (அ) ஆசிரிய தராதரப் பத்திரம் பெற்றவர்கள் தொகை முறையே 2—13—0 (ஆ) சிரேஷ்ட பாடசாலைத் தராதரப் பத்திரம் உடையவர்கள் முறையே 89—160—83.

திரு இராஜ: அரசாங்கப் பாடசாலைகளிலிருக்கும் தராதரப்பத்திரம் பெற்ற ஆசிரியர்களில் ஒரு குறிப்பிட்ட விகிதத்தினரை, அவர்களின் சேவைக் காலத்தை அடிப்படையாகக் கொண்டு, பயிற்சிக் கல்லூரிகளில வருடா வருடம் அனுமதிக்கக் கல்வி அமைச்சர் நடவடிக்கை எடுப்பாரா? இதனல் கல்வித் தரம் உயருமல்லவா?

பதில்: சேவைக்கால அடிப்படையில் தராதரப் பத்திரம் பெற்றவர்களை ஒரு குறிப்பிட்ட விகிதத்தில் பயிற்சிக் கல்லூரிகளில் அனுமதிப்பது பற்றி அமைச்சர் காரியாலயம் தீவிரமாகக் கவனித்து வருகிறது.

ஃ

### வளரும் தேசியம்

திரு ஜெயசேன: அரசாங்கக் கட்சி) கேள்வி: (அ) வர்த்தக, வியாபார, உணவு, கப்பல் போக்குவரத்து அமைச்சர் கனடா உதவித் திட்டத்தின் கீழ், உபகாரப் படிப்பு வசதிகள் இருவருக்கு அளித்திருக்கிருரா? (ஆ) அந்த இரு மாணவர்களும் எவ்வாறு தெரிந்தெடுக்கப்பட்டார்கள்? (இ) அவர்கள் ஏன் கிழக்கு மாகாணம், வடக்கு மாகாணங்களிலிருந்து தெரிந்தெடுக்கப்பட்டார்கள்!

### அவைப் புரு

பதில்: (அ) உபகாரப் படிப்பு வசதிகள் எதுவும் வழங்கப்படவில்லை. (ஆ) ஆகவே இரண்டாம் கேள்வி பிறக்கவில்லை (இ) மூன்ரும் கேள்வியும் அப்படியே.

ஃ

### தமிழ் மாணவர்களுக்கு இல்லை?

கௌரவ பதியுதீன் மாமூத் (கல்வி அமைச்சர்):..........

**பாராளுமன்றத் துணுக்குகள்...**

அடுத்தபடியாக கௌரவ வெளிமடைப் பிரதிநிதி (கே. எம். பி. இராஜரத்தின) எழுப்பிய கேள்வி பற்றிப் பேசுகிறேன் அயல் நாட்டு உபகாரப் படிப்புக்கு விண்ணப்பிப்பவர்கள் சிங்களத்தில் சிரேஷ்ட தராதர வகுப்பளவில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும் என்ற விதியை ஐ. தே. க கல்வி மந்திரி மாற்றி வைத்தார். சிங்களத்திற்கும் தமிழுக்கும் இடமளித்தார்...........

திரு. தகநாயகா: சிங்களத்திற்கும் தமிழுக்கும் மல்ல: சிங்களம் அல்லது தமிழ்!

கௌரவ பதியுதீன் மாமூத்... ஆமாம் சிங்களத்தில் அல்லது தமிழில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டுமென்று மாற்றி வைத்தார். ஆனல் இந்த (சுதந்திரக் கட்சி) அரசாங்கத்தைப் பொறுத்தவரை, நாங்கள் என்ன செய்யப் போகிறோம் என்பதைத் திட்டவட்டமாகச் சந்தேகமறச் சொல்ல என்னல் முடியாது. ஆனல் கௌரவ வெளிமடைப் பிரதிநிதி (கே எம். பி இ.) கூறியவற்றை நிச்சயம் மனதில் வைத்திருப்பேன்..........

ஃ

### பாடசாலைகள் மூலம் பௌத்த ராச்சியம்: ஒளிக்கவில்லை மந்திரி; ஒப்புக்கொள்ளுகிருர்

குவெனரின் பெர்னண்டோ (நீர்கொழும்பு): பாடசாலைகள் எடுக்கப்படுவது பற்றிய வாக்கெடுப்பில் ஏன் ஆசிரியர்கள் சேர்க்கப்பட வேண்டும்?........ தங்கள் பக்கம் ஆசிரியர்கள் சார்வார்களென்று அரசாங்கம் எதிர்பார்க்கிறது. இதனல் ........ ........ உரிமைகள் பறிக்கப்படுகின்றன. ஐ. நா. சபையின் உரிமைப் பிரகடனத்திலுள்ள உரிமைகளையே நான் குறிப்பிடுகிறேன் ......... பௌத்த பாடசாலைக்கா, கிறிஸ்தவ பாடசாலைக்கா, இந்துப் பாடசாலைக்கா தத்தம் பிள்ளைகளை அனுப்புவது என்பது பெற்ரோர்களின் விருப்பத்துக்குரிய விஷயம். பெற்ரோர்களுக்கு இருக்கும் இந்த அடிப்படை உரிமை மீறப்படுகிறது.

ஸ்டான்லி திலகரத்தின: (அரசாங்கம் பாடசாலைகளைப் பொறுப்பேற்பதற்கு மாருக இருக்கும்) "கத்தோலிக்க இயக்க"த்தின் மகஜரிலிருந்தா வாசிக்கிறீர்?

குவெனரின்: அரசாங்கக் கட்சியிலுள்ள ஒருவர் பாடசாலைகள் விஷயமாகக் கூறியதை வாசித்துக் காட்டுகிறேன் பெரும்பான்மையாகப் பௌத்தர்கள் வாழும் இந் நாட்டில் ஒரு பௌத்த ராச்சியம் ஏற்படுத்துவதே அரசாங்கம் பாடசாலைகளை எடுப்பதின் பிரதான நோக்கம் என்ருர் அவர், ஒரு கூட்டத்திலே.

ஸ்டான்லி திலக: கத்தோலிக்க மகஜரிலிருந்தா வாசிக்கிறீர்?

குவெனரின்: இது குருப்புவுடையதல்ல. இவ் விஷயம ......டெயிலி நியூஸ் பத்திரிகையிலிருக்கிறது. நீங்களுமே பார்த்துக் கொள்ளலாம்

ஸ்டான்லி திலக: இல்லை. குருப்புவினுடையது.

குவெனரின்: (பௌத்த நாடு என்று) இத்தகைய கருத்துக்களைக் கொட்டுவது பறறி ஒரு அரசாங்கத் தரப்பு அங்கத்தவர் வெட்கப்படவேண்டும்.

கௌரவ பதியுதீன் மாமூத்: யார் அந்த அங்கத்தவர்?

குவெனரின்: கடந்த காலத்தில் பௌத்த சரித்திரத்தைக் கொண்டதும், இன்று பெரும்பான்மையாகப் பௌத்தர்களைக் கொண்டதுமான இந் நாட்டில் (பாடசாலைகளை எடுப்பதின் மூலம்) ஒரு பௌத்த இராச்சியம் ஏற்படுத்துவதே நோக்கம் என்று அந்த (அரசாங்கத் தரப்பு) அங்கத்தவர் கூறினர்.

ஒரு பிரதிநிதியின் குரல்: அவருடைய பெயரைக் குறிப்பிடுக!

குவெனரின்: பெயர் கூற நான் விரும்பவில்லை. 8-ந் தேதி டெயிலி நியூஸ் பத்திரிகையில் யாரும் அதைப் பார்க்கலாம்.

திரு அலுவிஹார: (குழப்பத்துக் கிடையே) இந்தப் பக்கத்திலுள்ளவர்களுக்கு ஒழுங்கு என்பதே கிடையாதா, ஐயா?

குவெனரின்: நீங்கள் வற்புறுத்தினல், நான் பெயரை வெளியிடத் தயார்.

உப-சபாநாயகர்: கௌரவ அங்கத்தவர் கேள்வி போடுகிருர்.

குவெனரின்: பெயரை அறிய விரும்புகிறீர்களா?

பல குரல்கள்: (ஏக காலத்தில்) ஆம்! ஆம்!

குவெனரின்: அவர் பெயர் மாநாம சமரவீர (உள்ளூராட்சி மந்திரி) போதுமா இப்பொழுது? 1960-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 8-ந் தேதி டெயிலி நியூஸ் பத்திரிகையைப் புரட்டிப் பார்த்துக்கொள்ளுங்கள்!

ஃ

### சைவக் குருக்கள்கள்

(வரவு செலவுத் திட்ட விவாதம் 5-10-60)

சா. ஜே. வே. செல்வநாயகம்:... இறுதியாக ஒரு மிகச் சிறு தொகையான இந்துக் குருக்கள்கள் பற்றிக் குறிப்பிட விரும்புகிறேன். அரசாங்கம் கொடுக்கும் வாசகால அனுமதிப் பத்திரங்களுடன் தொடர்ந்து 3 மாதங்களுக்கு மேலாக இலங்கையில் இருப்பவர்கள் இவர்கள். தொகையில் 25 பேர். சைவ பரிபாலன சபைக்கும் பிரதமர் கொத்தலாவலைக்குமிடையே ஏற்பட்ட ஒரு ஒழுங்கின்படி சபையின் சிபார்சின் பேரில் இவர்களுக்கு வாச அனுமதிச் சீட்டுகள் கிடைக்கின்றன. இந்துக் கோயில்களில் நிகழும் விழாக்களையும் விவாக, மரணச் சடங்குகளையும் நடாத்தி வைக்க (இந்தியாவிலிருந்து) அழைக்கப்படுகிருர்கள். இவர்கள் பிராமணர்களல்ல. சைவக் குருக்கள் என்றழைக்கப் படுபவர்கள். இந்துக்களின மத அனுட்டானங்களில இவர்களுக்குப் பெரும் பங்கு உண்டு. இவர்கள் போய் விட்டால், இவர்களின் இடங்களை நிரப்ப இங்கு யாருமில்லை. சராசரியாக ஒவ்வொரு குருக்களும் வருடம் ரூபா 1200/— வருமானம் பெறுகிருர்கள். இத் தொகையில் வருடம் ரூபா 400/— வரி செலுத்தும் படி இவர்கள் கேட்கப்பட்டால் ............ இவர்கள் இலங்கையை விட்டே போய் விடுவார்கள், (ஆனல்) எங்கள் நாட்டிலுள்ள இந்துக்களின் மத அனுட்டானங்களுக்காக இவர்கள் இலங்கையில் இருப்பது அத்தியாவசியமானது. (எனவே) பிரஸ்தாப சைவக் குருக்கள்மார் நிலைமை பற்றி விசாரணை நடாத்தி. இந்த வரியிலிருந்து இவர்களுக்கு விலக்களிக்கும்படி கௌரவ மந்திரியவர்களை வேண்டிக் கொள்ளுகிறேன்.

### மட்டு நகர் இசை நடன கலாமன்றம்

முத்தமிழ் வளர்க்கும் நோக்கத்துடனும் குறிப்பாக இசை நடனக் கலைப் பணிக்குமாக மட்டக்களப்பில் இசை நடன கலா மன்றம் ஒன்று அணிமையில் நிறுவப்பட்டுள்ளது. மட்டக்களப்பின் நீண்ட காலத் தேவையை இது ஓரளவு பூர்த்தி செய்வதாய் அமைந்துள்ளது.

பின்வருவோர் இம்மன்றத்தின் நிர்வாகிகளாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்:—

போஷகர்: கிழக்கு மாகாணக் கல்வி அதிகாரி திரு எஸ். தணிகாசலம்; தலைவர்: திரு ஜே கே. சிவித்தம்பி; செயலாளர்கள்: திருவாளர்கள் பெ.ஏரம்பமூர்த்தி, பட்றிக் டேவிட், இ. இரத்தின சிங்கம்; பொருளாளர் திரு கா. வேதாரண்யம்.

இசை வகுப்புகளை கலைஞர்கள் கே. குமாரசாமி, எம். சிவபாலன் (வயலின்); எஸ். தங்கராஜா, எஸ் மகாலிங்கம் (வாய்ப்பாட்டு); எஸ். ஆறுமுகம் பிள்ளை (வீணை) ஆகியோர் நடத்தவிருக்கிருர்கள்

நடன வகுப்புகள் திரு. ம. கைலாயபிள்ளையின் பொறுப்பில் நடக்கும்.


இந்தியாவின் உயர்ந்த ரக உற்பத்தி
மங்கையர் மனதுக்குகந்தது
உஷா தையல் மெஷின்களே



★ மாதத் தவணைக் கட்டணங்களில பெற்றுக் கொள்ளலாம்.
★ இலங்கை பூராவும் விற்பனையாகிறது.
சோல் ஏஜண்டுகள்:
ரெய்மூ சன்ஸ் லிமிட்டெட்,
88 A, மெயின் வீதி, கொழும்பு-11.
போன் : 4245, 5060.
கல்கத்தாவிலுள்ள இந்தியன் என்ஜினியரிங் எக்ஸ்போர்ட் புரொமோஷன் கவுன்ஸிலால் நடாத்தப்படுவது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என் தம்பி.. வன்னியசிங்கம் மனோலயத்தில் தோன்றியவர்

காலஞ்சென்ற அமரர் வன்னியசிங்கம் அவர்களைப் பற்றி அவருடைய மூத்த சகோதரியார் திருமதி இராஜ ராஜேஸ்வரி கணேசலிங்கம் "என் தம்பி வன்னியசிங்கத்தை உருவாக்கிய பரம்பரையும் சூழலும்" என்ற தலைப்பில் எழுதும் தொடர் கட்டுரையின் ஆறுவது பகுதி இது.

திருமதி இராஜ ராஜேஸ்வரி கணேசலிங்கம்
B. A. (Hons), (Lond) M. Litt

(முற்றொடர்)

"எங்கள் தாயார் பிள்ளைகளை வளர்ப்பதற்கு வேண்டிய எல்லாம் குறைவறச் செய்வாரே யன்றிப் பிள்ளைகளைக் கோதாட்டமாட்டார். பொய், சிறு குறும்புகள், சகோதரர் ஒருவரை ஒருவர் ஏசுதல் அடித்தல், பிறபிள்ளைகளோடு சண்டையிடுதல் போன்றகுற்றங்களுக்கு உடனுக்குடனேயே தண்டனை யளிப்பதில் சிறிதேனும் தயவு தாட்சண்யம் பார்க்க மாட்டார். தாயார் தான் இப்படி என்றால் மாமன்மார் இன்னும் ஒரு படி மேலே. மாமன்மார் இருவரில் எவராவது எங்களில் எவருக்காவது விளையாட்டுப் பொருட்களோ இனிப்பு வகைகளோ பழங்கள் பட்சணங்களோ என்று வது வாங்கிக் கொடுத்து அருமை பாராட்டியதாக நினைவில்லை. ஆனால் அவர்கள் கண்ணெதிரில் எந்தப் பிழை செய்தாலும் அந்தப் பிழைக்கு ஏற்ற தண்டனையோ கண்டனையோ அளிக்க மட்டும் தவறியதில்லை.

### தண்டனை தப்பாது

தந்தையார் கண்ணெதிரில் தவறு செய்தால் அவர் நேரே தண்டிக்க மாட்டாரே யொழிய தாயாரிடம் தாம் கண்டதைச் சொல்லாமல் விடமாட்டார்; தண்டனை தப்பாது. ஒருவர் அடித்தால் மற்றவர் ஒருபோதும் தடுக்க மாட்டார்கள். காரணம் கேட்பது கூட அடித்து முடிந்த பிறகு தான். சிலசமயம் "கண்டோர்" யாராவது அடிப்பதைத் தடுக்க முற்பட்டுத் தாமும் இரண்டோர் அடி வாங்கிக்கொண்டு விலகியதும் உண்டு. தந்தையார், தாயார், மாமன்மார் (இருவர்) ஆகிய நால்வரில் எவரிடத்தும் பிள்ளைகளில் வினைத் தெரிந்த எவருக்கும் எவ்வித சலுகையும் கிடையாது. சோற்றுக்கும் சீலைக்கும் தான் செல்லம்; பழக்கத்துக்குச் செல்லம் இல்லை என்பார்கள்.

### அடிமை சகாப்தம்

உணவு உடை இரண்டுக்கும் குறை இராது. ஆனால் ஆசைக்கு ஒரு தின்பண்டம் ஒரு கடையில் வாங்கி உண்ணவோ, இந்த நிறத்தில் இந்த வகையில் ஆடை வாங்குவோம் என்று கேட்கவோ முடியாது. பழமோ பக்ஷணமோ துணிமணியோ ஆடை அணிகளோ பெற்றோராக வாங்கிக் கொடுத்ததோடு சரி.

ஐந்து வயது வரை அரசன்; அப்புறம் யுக்தவயது வரை அடிமை; யுக்தவயது வந்தபின் தோழன் என்று இவ்வாறு கருதிப் பிள்ளைகளை நடத்துவது தான் அவர்களை வளர்க்க வேண்டிய முறை என்று சொல்வார்கள். எங்களில் எவருக்கும் ஐந்து வயது வரை தானும் அரசாட்சி சரிவர நடந்ததில்லை. மூன்றும் ஆண்டில் பள்ளிக்கு வைக்கப்பட்டவரும், நான்கு ஆண்டு நிரம்பியதும் படிக்க உழைத்தவருமாக அடிமை சகாப்தத்துள் முந்தியே தள்ளப்பட்டோம். வித்தியாரம்பத்துக்கு முன்னும் "அரசு" ஆட்சிக்கு அமைந்த விஷயங்கள் மிகச் சிலவே. எக்கலையும் ஈரெட்டு ஆண்டு எல்லைக்குள் சுற்கப்பட்ட காலத்தில் அடிமை சகாப்தம் பதினேராண்டளவினதாக இருந்திருக்கும்.

### 'மைந்தர் தமை நெஞ்சில'

வன்னியசிங்கத்துக்குப் பதினெட்டாண்டு நிரம்பியும் அடிமைத்தளை பாதி தான் நீங்கியது. சர்வகலாசாலைக் கல்லூரி விடுதியில் வார்டனின் பாதுகாப்பு உண்டு என்ற துணிவில்தான் அவரைக் கொழும்புக்கு அனுப்பினார்கள் பெற்றவர்கள். "எந்த வம்பு தும்புக்கும் போகாதே. சகமாணவரது அதிக்கிரமமான நடவடிக்கை எதிலும் சேராதே. நீ உண்டு உன் படிப்பு உண்டு என்றிருக்க வேண்டும்" என்று வழிக்கு வழி புத்தி சொல்லி அனுப்பினார் தாயார்.

"நேசனைக் காணாவிடத்து
நெஞ்சார வேதுதித்தல்
ஆசானை எவ்விடத்தும்
அப்படியே—வாச
மனையாளைப் பஞ்சணையில்
மைந்தர்தமை நெஞ்சில்
வினையாளை வேலை முடிவில்."

என்ற ஆன்றோர் வாக்கை கடைப்பிடித்து ஆசிரியரோ பெற்றோர்களோ பிள்ளைகளை மனதில் புகழ்வதன்றி வெளியில் அவர்கள் காது கேட்கப் புகழ மாட்டார்கள். "பருவ பரீட்சையில் இன்ன இன்ன பாடங்களில் நல்ல புள்ளி எடுத்திருக்கிறாய் ஆனால் இன்ன பாடங்களில் குறைவு; இன்ன பாடத்தில் மிகக் குறைவு; இவைகளில் எல்லாம் திருந்த வேண்டும். கவனமாகப் படி" என்று சொல்வார்களேயன்றி வகுப்பில் ஏழாவது நாலாவது என்று முன்னணியில் இடம் பெற்றதை யிட்டுத் திருப்தி அடைய மாட்டார்கள்.

கல்வியறிவு வளர்ச்சியில் இவ்வளவு கவனம் செலுத்தப்பட்ட தென்றால் கேள்வியறிவு வளர்ச்சிக்குச் சாதனங்களும் வளமாகவே வாய்ந்து விட்டன நல்லூழ் வயத்தால்.

### மனோலயத்தில் தேறியவர்

தகப்பனார் வழக்குகள் தயாரிப்பது, உறுதிகள் எழுதுவது, எழுத ஏற்பாடுகள் செய்வது எல்லாம் நடைபெறும் "கந்தோர்" தான் பிள்ளைகளின் படிப்பு அறையும். கட்சிக்காரர் இரண்டொருவராக இருந்து அமைதியாக அவர்களது விவகாரம் நடைபெறுமல், வாய் திறந்தபடி அதைப் பார்த்துக் கொண்டிருக்காமல் படிப்பைக் கவனிக்கும் படி பிள்ளைகளை வற்புறுத்துவார் தாயார். மனதை ஒரு வழிப்படுத்தி நிறுத்துவதில் இது நல்ல பயிற்சி ஆகும். தரப்பட்ட வீட்டு வேலை, பாடத்தை [illegible] திற் பதித்துக் [illegible] இருந்து விட்டால் மனோலயம் எவ்வளவு தூரம் சிந்தித்தது என்பதைக் கணிப்பது சுலபமல்ல. எழுதது வேலை அப்பியாசம் தரப்பட்டிருந்தால் மறுநாள் பள்ளிக்கூடத்திலே அப்பியாசம் பெறும் மதிப்பே அதைச் செய்தவரது மனோலயத்தின் மதிப்புமாகும் என்று கொள்ளலாம் அல்லவா? வன்னியசிங்கமும் அவரது தம்பியும் இந்த மனோலய பரீட்சையில் சித்தி எய்தினார்கள் என்றே கூற வேண்டும்.

### உலகியல் அறிவுக்கு உதவி

கட்சிக்காரர் பலர் கூடியதாலோ அல்லது விவகாரத்தில் விவாதம் பலத்ததாலோ சத்தம் அதிகமானால் உள்ளே போய்ச் சாப்பிட்டு விட்டு வந்து விவகாரத்தை அவதானிக்க அனுமதி கிடைக்கும். அவசரமான வீட்டு வேலை இருந்தால் உள்ளே வேறு விளக்கில் வேலை செய்வதும் உண்டு. வழக்கு விவகாரம் உறுதி விவகாரங்களைக் கவனிப்பது ஒரு விதத்தில் நூற் படிப்புக்குக் குந்தகம் விளைவித்தாலும் சொல்லகராதியை விரிவாக்குவதால் இன்னொரு விதத்தில் நூற்கல்விக்கு உதவியாகவும் அமையும்; மேலும் அவதானிப்பவர் வெறும் புத்தகப் பூச்சியாகக் கிடந்தொழியாமல் உலகியலறிவு பெறவும் பெரிதும் உதவி செய்யும்.

### கலைமாணி தமிழ் வல்லுநர்

தந்தையார் வெறும் வழக்கறிஞராக மட்டும் இல்லாமல் கலைமாணி (B.A.) ஆகவும் தமிழ் வல்லுநர் ஆகவும் இருந்ததனால் எங்கள் கிராமத்தில் படித்தவர்களிடையே அவரது மதிப்பு மிகவும் உயர்ந்திருந்தது. படித்தவர்கள் இன்னும் இருவர் (மாமன்மார்) கூட இருந்தது வீட்டுக்கு மேலும் பிரதானத்தை அளித்தது. தமிழ் இலக்கிய ரசிகர்கள் தந்தையாரோடு இலக்கிய சர்ச்சை செய்ய வருவார்கள். சமய நூலாராய்ச்சியில், சாதனைகளில் முயல்பவர்கள் மூத்த மாமனோரோடு சைவ சித்தாந்த சர்ச்சை செய்ய வருவார்கள். ஆங்கிலம் படித்தவர்கள் பத்திரிகைச் செய்திகள் வெளிநாட்டு உலக விவகாரங்கள் பற்றி வீட்டில் உள்ள மூவரோடும் கலந்து பேச வருவார்கள். இப்படிப் பல வேறு நோக்கங்களுடன் பயனுள்ள பொழுது போக்கை நாடி வருபவர்கள் தம்முள் அபிப்பிராயங்கள் பரிமாறிக் கொள்ளவும் ஒரு விஷயம் பற்றி அறிய வந்தவர் இன்னொன்று பற்றியும் சிற்சில புதுமைகள் அறிந்து கொள்ளவும் வீடு வாய்ப்பு அளித்தது. முக்கியமாக, தினமும் நீதி மன்றங்கட்குப் போய் வெளியூர்ப் பிரமுகர்கள் பலரோடும் பழகும் தந்தையார் மூலம், முதலாவது உலக மகாயுத்தம், இந்திய சுதந்திரப் போராட்டம், சர்வதேச சங்க நடவடிக்கைகள், சர்வதேச அரசியல் நிலை இலங்கை அரசியல் மாற்றங்கள் போன்ற விஷயங்கள் பற்றிய புதினங்களை அறியவும், அவை பற்றி யாழ்ப்பாணப் பிரமுகர்களது பொது அபிப்பிராயத்தை அறியவும் வாய்ப்பு உண்டு.

### பத்திரிகைப் படிப்பு

இக்காலத்திற் போல அக்காலத்தில் வீட்டுக்கு வீடு தினசரிகளும் வானொலிப் பெட்டிகளும் ஊருக்கு நாலு பொது வாசிகசாலைகளும் கிடையா. தமிழ்த் தினசரிகளே அக்காலத்தில் இல்லை. எங்கள் கிராமத்தில் யாரும் ஆங்கிலத் தினசரி வருவிப்பதும் இல்லை. தந்தையார் நீதி மன்றங்களுக்குப் போனால் சட்ட வாசிகசாலையில் தினசரிப் பத்திரிகை படிக்காமல் வீட்டுக்குக் கிளம்பமாட்டார். நீதிமன்ற விடுமுறை நாட்களில் தெல்லிப்பழைத் தபாற் கந்தோருக்கு மெயில் வரும் நேரத்திற்குச் சரியாகப் போய் அங்கிருந்து பத்திரிகை படித்து, பத்திரிகைச் செய்திகள் பற்றி அங்கு வரும் படித்தவர்களோடு அபிப்பிராயம் பரிமாறிக் கொண்டு தான் திரும்புவார். மெயில் பிந்தி அதனால் காலை உணவும் பிந்தினாலும் தந்தையார் அது பற்றிக் கவலைபட மாட்டார்; தாயார்தான் கவலைப்படுவார். நோயாளியாகி நீதிமன்றங்களுக்குப் போவதும் குறைந்து, தெல்லிப்பழைத் தபாற் கந்தோருக்கு நடப்பதும் சிரமமாகிவிட்ட பிறகே தந்தையார் ஆங்கில தினசரி வரவழைக்க ஆரம்பித்தார். அதன் பிறகு ஆங்கிலம் படித்த இரண்டொருவர் பத்திரிகை படிக்கவென்றும் வருவார்கள். புதினம் அறியவும் வீட்டிலுள்ள மூவரோடும் இன்னும் வந்துள்ள பிறரோடும் உலகச் செய்திகள் பற்றிக் கலந்து பேசி எந்த விஷயம் பற்றியும் விவாதித்துத் தெளிவு காணவும் வாரத்தில் ஒரு முறை அல்லது இரு முறை எங்கள் வீட்டுக்கு வராமல் இருக்க மாட்டார்கள் கிராமத்தில் படித்தவர்களாயுள்ளோர். இவ்வாறு வீடு ஒரு சிறு கலைக்கழகமாகவே மாறிவிட்டது.

### சண்டப்பிரசண்ட வாதப் பிரதிவாதங்கள்

ஒவ்வொருவராக நாலு பேர் ஆறு பேர் தற்செயலாக ஒரே சமயத்தில் வந்து கூடிவிட்டால், இலக்கிய

(13-ம் பக்கம் பார்க்க)

★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா

கண்ணைக் கவரும் வண்ணங்களிலும்
கருத்தைக் கவரும் வடிவங்களிலும்
சிறந்த பாவனையிலும்
உறுதியான சாயத்திலும்
முன்னணி வகிக்கிறது

லதா
கேம்பிரிக்

சட்டை, ஜாக்கெட், கவுன் பாவாடை கிமோனு முதலியவைகளுக்குச் சிறந்தது.

இலங்கை முழுவதிலுமுள்ள புடவை வியாபாரிகளிடம் கிடைக்கும்

ஏக விநியோகஸ்தர்கள்
குண்டன்மால்ஸ்,
26, கெய்சர் வீதி, கொழும்பு.

தபால் தந்தி தலைவர் நியமனம்
பரீட்சை ஜனவரி 1961.

இப்போட்டிப் பரீட்சையில் ஒரே முறையில் சித்திபெற்று அரசாங்க சேவையில் சேர வேண்டுமானால், எமது பரீட்சைத் துணை நூல்களை வாங்கிப் படியுங்கள். பரீட்சைக்கு வரக்கூடிய வினா விடைகளை மட்டுமன்றி, பரீட்சைக்கு எப்படி விடை எழுதவேண்டுமென்பதை என்னும் விளக்கவுரைகளையும் கொண்டன.

தமிழ் பாஷை ● எண் கணிதம்
பொது விவேகம் ● பூமிசாஸ்திரம்
சரித்திரம் ● பொது அறிவு
ஆங்கிலம் ● 101 நவீன வியாசங்கள்

ஒவ்வொரு புத்தக விலை ரூபா 5-00.
தபாற் செலவு 35 சதம். வி. பி. பி. கிடையாது.

இலவச விபரங்கட்கு:
[illegible] ஹோல், 723, மருதானை, கொழும்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுதந்திரன்

SUTANTIRAN

1960 அக்டோபர் மாதம் 23-ந் தேதி

194 ஏ, பண்டாரநாயக்க மாவத்த, கொழும்பு - 12.
தொலை பேசி எண் : 3411 த. பெ. 1183.


# இரண்டு கடிதங்கள்

"மத்திய தந்தி நிலையத்தில் தமிழ்த் தந்தி வேலைகளைக் கவனிக்கப் பெயருக்கு ஆறு பேரை வைத்திருந்து பயனில்லை. சிங்களத்துக்கு உள்ளது போலத் தமிழ்த் தந்தி வேலைகளுக்கென்று தனியாக முழு நேர ஊழியர்களை நியமிக்க வேண்டும்"— இவ்வாறு தமிழரசுத் தலைவர் திரு எஸ். ஜே. வி. செல்வநாயகம் தந்தி தபால்போக்குவரத்து அமைச்சருக்குப் புகார் செய்துள்ளார் என்ற ஒரு செய்தியை இரண்டு வாரங்களுக்கு முன்பு வெளியிட்டிருந்தோம் அல்லவா?

அந்தச் செய்தியைப் படித்த தந்தி நிலைய ஊழியர் ஒருவர் சுதந்திரனுக்கு ஒரு உருக்கமான கடிதத்தை எழுதியுள்ளார். அக் கடிதத்தை இன்றைய சுதந்திரன் முதற்பக்கத்தில் பிரசுரித்துள்ளோம்.

தமிழுக்கு சட்ட பூர்வமான சம உரிமை வேண்டும் என்று வாயளவில் போராடும் தமிழ் பேசும் மக்கள், செயலளவில் தமது தாய்மொழியான தமிழ்மொழியில் எவ்வளவு பற்றும் பாசமும் வைத்துள்ளார்கள் என்பதை அக் கடிதம் அம்பலப் படுத்துகிறது.

"மத்திய தந்திக் காரியாலயத்தில் கடமையாற்றும் ஊழியர்களில் நானும் ஒருவன். அதிலும் தமிழ்த் தந்திப் பகுதியில் கருமமாற்றும் சிலருள் நானும் ஒருவன். ஆயினும் நீங்கள் கூறியிருந்தது போல் தமிழ்த் தந்திகளின் கருமங்களுக்கென ஒரு முழு நேர ஊழியராக எம்மில் ஒருவரேனும் இல்லை. வெவ்வேறு வேலைகளுக்கு ஒதுக்கிவிடப்பட்டுள்ள நாம் தமிழ்த் தந்திகளின் கருமங்களையும் பார்க்க வேண்டியவர்களாக இருக்கின்றோம். இதனால் தமிழ்த் தந்திகள் தாமதமடைகின்றன என்பது உண்மைதான்; வருத்தத்துக்குரியதுதான். ஆனால் இந்தத் தவறை அரசாங்கத்தின் தலையில் சுமத்துவது மாபெரும் தவறாகும். தவறு செய்பவர்கள் தமிழ் மக்களே!"

மேற்கண்டவாறு தமது கடிதத்தில் கூறியுள்ள பிரஸ்தாப ஊழியர் தமிழ் மக்கள் எவ்வாறு தவறு செய்கிறார்கள் என்பதையும் விளக்கியுள்ளார். அவர் தொடர்ந்து எழுதுவதாவது: "நாளொன்றுக்குக் கொழும்பினூடாகப் பறந்து கொண்டிருக்கும் பலலாயிரக் கணக்கான தந்திகளில் 40 முதல் 45 விதம் வரை சிங்கள மொழித் தந்திகளாகும். அதனால் அதற்கென இருக்கும் சிங்கள ஊழியர்களுக்கு வேலை நிறையக் கிடைக்கிறது. தமிழ்த் தந்திகளைப் பற்றிச் சொல்லப் போனால் நாம் தலை கவிழ்த்தான் வேண்டும். நாளொன்றுக்குப் பத்துப் பதினைந்து தந்திகளுக்கு மேல் வருவதில்லை! இந்த இலட்சணத்தில் தமிழ்த் தந்திகளுக்கென ஒரு உத்தியோகத்தரை வீணுக்க யாருக்குத்தான் மனம் வரும்?" என்று அவர் கேட்கிறார்.

உண்மைதான்; தமிழ் மக்களே தமிழ் மொழியை உபயோகித்து தமிழ் உரிமையை நிலைநாட்ட முன் வராத போது அந்நிய அரசாங்கம் தமிழுக்காகத் தண்டச் செலவு செய்து தமிழை இந்த நாட்டில் ஏட்டளவில், பெயரளவில் உயிர் வாழ வைக்க வேண்டும் என்று எதிர்பார்ப்பது எவ்வளவு அறிவீனமாகும்?

மற்றும் ஒரு கடிதம் இவ்வாரம் சுதந்திரனுக்கு கிடைத்திருக்கிறது. இக்கடிதத்தை கெட்டியாந்தனை என்னும் இடத்தில் உள்ள ஒரு நேயர் எழுதியிருக்கிறார். அவர் கூறுவதாவது:

"தமிழ் பேசும் மக்கள் தங்கள் காரியங்களையெல்லாம் தமிழ் மொழியில் செய்ய வேண்டும் என்ற வேண்டுகோளுக்கிணங்க சமீபத்தில் நான் காவத்தை மாஜிஸ்ரேட் காரியாலயத்துக்குச் சென்று ஒரு வழக்கு நகல் பிரதி எடுக்க வேண்டித் தமிழ் மொழியில் மனுச் செய்தேன். அந்தி 4-00 மணி வரை பதிலில்லை. ஒரு யாழ்ப்பாணத் தமிழ் வாலிபச் சிப்பந்தியே இதற்குப் பொறுப்பாயுள்ளார் என்பதை அறிந்து அவரிடம் சென்று விசாரித்தேன். அவர் 'போய் விட்டு நாளைக்கு வா' என்றார். அதற்கு நான் 22 மைலிலிருந்து வந்திருக்கிறேன். நாளைக்கு வரமுடியாமலிருக்கிறது. உரிய செலவைக் கட்டி விடுகிறேன். தாங்கள் தபாலில் அனுப்பி வையுங்கள்' என்று வேண்டினேன். அவருக்கு கோபம் வந்து விட்டது. 'நீ விரும்பியபடி செய்ய நான் நீ வைத்த ஆளில்லை. போ, போ,' என்று துரத்தி விட்டார். பின்னர் ஆங்கிலத்தில் கடிதம் எழுதித் தபால் மூலம் பெற்றேன். தமிழ் ஊழியர்கள் இப்படியிருந்தால் எப்படித் தமிழை வளர்ப்பது? எப்படித் தமிழையும் உத்தியோக மொழியாக்குவது?"—இப்படிக் கேட்டுள்ளார் அந்த நேயர்.

இந்தக் கடிதங்களை நாம் இங்கு பிரசுரித்ததன் நோக்கம் இதுதான்: அதாவது இந்த இருவருக்கும் உள்ள தமிழுணர்ச்சி தமிழ் பேசும் மக்கள் ஒவ்வொருவருக்கும் ஏற்பட வேண்டும் என்பதே எமது குறிக்கோள்.

எத்தனைதான் பேசியும் எழுதியும் பயனில்லை. எவர் தூண்டியும் எதையும் செய்துவிட முடியாது. எத்தனை இயக்கங்கள் நடத்தியும் இந்த விஷயத்தில் எளிதில் வெற்றி காண முடியாது. தமிழுணர்ச்சி ஒருவர் உள்ளத்தில் தானாகச் சுரக்க வேண்டும். அது நடைபெற அந்த நபர் தாமாக விரும்பி முயற்சி செய்து ஆகவேண்டும்.

இருள் அகலும் ஆபிரிக்கா: (2)

# பிரதேச அரசின் உரிமையில் மத்திய அரசு தலையிட முடியாது

## சுதந்திரமடைந்த நைஜீரியாவின் இணைப்பரசுத் திட்டம்—அது நிலைக்குமா?

இரண்டாவது உலக மகா யுத்தம் என்ற கொடூரத்திற்குள்ளாகப் பிறந்தது ஆசிய நாடுகளின் விடுதலை. ஆசிய விடுதலை வேகத்தின் விளைவாக இன்று "இருண்ட கண்டத்"திலும் விடுதலைப் புயல் வீசுகிறது. சென்ற மாதம் ஐக்கிய நாடுகள் சபையில் இடம் பெற்ற 15 அங்கத்துவ நாடுகளில் 14, ஆபிரிக்க நாடுகள். இவ் ஆபிரிக்க நாடுகள் பற்றியும் அவற்றின் அரசியல் நிலைமை பற்றியும் சுதந்திரனில் கட்டுரைகள் வெளிவரும். "இருள் அகலும் ஆபிரிக்கா" என்ற இத்தொடரில் கொங்கோ முதற் கட்டுரையாக இடம் பெற்றது. இம்மாதம் 1-ம் தேதி சுதந்திரம் பெற்ற நைஜீரியா பற்றியது இக்கட்டுரை.

"இருண்ட கண்டம்" என்றழைக்கப்படுவது ஆபிரிக்கா. இனிமேல் இப்பெயரை மாற்றிவிட வேண்டியதுதான். ஆபிரிக்கா இப்பொழுது "விடிந்த கண்டம்". மிகவும் பிற்போக்கான நிலையிலிருந்து, ஐரோப்பிய வல்லரசுகளின் சுரண்டலுக்கு இலக்காகியிருந்த கடைசிக் கோட்டை ஆபிரிக்கா. ஆபிரிக்காவில் இருள் அகலுகிறது. மளமள வென்று சுதந்திர சூரியன் கண்டமனைத்தும் பரவி வருகிறது. சமீபத்தில் சுதந்திரம் பெற்ற ஆபிரிக்க நாடுகளில் 14 இராச்சியங்கள் ஐக்கிய நாடுகள் சபையில் அங்கம் பெற்றும் விட்டன. இம்

செ. குமாரசாமி




பிரதான பட்டினங்கள்: 1. பெனின், 2. போக்காடோஸ் துறைமுகம், 3 ஹாக்கோட் துறைமுகம், 4. கலாபார் துறைமுகம், 5 லொகோஜா, 6. ஜொஸ், 7. சங்கெரு, 8. கானோ, 9 குரு (நியூரு), 10 சொக்கோட்டோ, 11. யோலா, 12 மக்கூர்தி. பிரதேச, மத்திய தலை நகரங்கள் சதுரங்களால் காட்டப் பட்டிருக்கின்றன.

மாதம் முதலாந்தேதி சுதந்திரம் பெற்ற நாடு நைஜீரியா.

விடியும் ஆபிரிக்காவின் எதிர்கால சரித்திரத்தைப் பெரிதும் நிர்ணயிக்கப் போகிற நாடு நைஜீரியா—ஆபிரிக்காவின் விடிவெள்ளி.

### நீக்கிரோக்களின் தாயகம்

மேற்கு ஆபிரிக்காவிலே தென் அத்துவாந்திக் சமுத்திரத்திலுள்ள கினிக் குடாவளைவிலிருக்கிறது நைஜீரியா. மேற்கு எல்லையில் தாஹொமி; கிழக்கில் கமரூன்; வடக்கிலிருக்கிறது பிரெஞ்சு மேற்கு ஆபிரிக்கா. பிரிட்டனையும் பிரான்ஸையும் ஒன்று சேர்த்தாலும் நைஜீரியாவின் பரப்புக்கு வராது 3 லட்சத்து 73 ஆயிரத்து 250 சதுர மைல் நீக்ரோக்கள் ஆகக் கூடிய தொகையில் வாழும் தேசம். ஆபிரிக்க நாடுகளில் சனத்தொகை மிகுந்த நாடு. 3 கோடியே 80 லட்சம் மக்கள். ஆபிரிக்காவில் வாழும் ஒவ்வொரு ஆறு பேரிலும் ஒருவன் நைஜீரியா தேசத்தவன்—நீக்கிரோ.

வட நைஜீரியா, கிழக்கு நைஜீரியா, மேற்கு நைஜீரியா, என்று 3 பிரதேசங்களா கப் பிரிக்கப்பட்டிருக்கிறது தேசம். கிழக்கையும் மேற்கையும்பிரித்து வைக்கிறது 2900மைல் நீளங் கொண்ட நைகர்நதியின் இறுதிப் பகுதி. நைகர் நதியிலிருந்து கிழக்கே செல்கிறது பெனுாயி நதி. இரு நதிகளும் சேர்ந்தால் ஆங்கில எழுத்து Y, "வை" போலத் தோன்றுவதைக் காண முடியும்.

### நவீன சாதனங்கள்

நைஜீரியா—ஆபிரிக்காவின் விடிவெள்ளி என்று கூறுவதற்குக் காரணமாயிருப்பது நைஜீரியாவின் மூலவளங்களும் பொருளாதாரப் பெருக்கமுமாகும். 1928 லேயே இந்நாட்டில் சுமார் 2000 மைல் நீள இருப்புப் பாதைகள் இருந்ததென்றால் நாட்டின் வளம் பற்றி அதிகம் கூறத் தேவையில்லை. தென்மேற்குகோடியிலுள்ள லாகோஸ் இல் இருந்து வடகிழக்கே குரு பட்டினம் வரை இருப்புப் பாதை ஊடறுக்கிறது இதைவிட வேறு பல பாதைகளும் உத்தேச பாதைகளும் அநேகம். 37,000 மைல் நீளமான ரோட்டுகள். நவீன ரோட்டமைப்பு உபகரணமான பிட்டுமென் (Bitumen) மேற்பூச்சு ரோட்டுகள் மாத்திரம் 4000 மைல்களுக்கு இருக்கின்றன. கானோ, லாகோஸ் ஆகிய இரு பட்டிணங்களிலும் முதல் தர நவீன விமான நிலையங்கள் உண்டு இதைவிட வேறு 20 விமான நிலையங்கள், 23 இறங்கு துறைகள், 25 ஹெலிக்கோப்டர் நிலையங்களிருக்கின்றன!

### கப்பல் போக்குவரத்து

பத்து துறைமுகங்கள் நைஜீரியாவுக்கு உண்டு. இவற்றுள் லாகோஸ், போக்காடோஸ ஆகியவை மேற்கு நைஜீரியாவிலும் ஹாக்கோட், கலாபார் கிழக்கு நைஜீரியாவிலும் இருக்கின்றன இந் நான்கும் முதல்தர துறைமுகங்கள். உள்ளூர்த் துறைமுகங்களும் அநேகம். நைகர் நதியின் முகத்துவாரத்திலிருந்து 432 மைல் வரை கப்பற் போக்குவரத்து நடைபெறுகிறது. 566 மைல் தூரத்திலுள்ள ஜெபா துறைமுகம் வரை வருடத்தில சில பகுதிகளில் கப்பல் போக்குவரத்து நிகழுகிறது. நைகர்நதியும் பெனுாயி நதியும் சங்கமமாகும் லொகோஜா துறையிலிருந்து சுமார் 600 மைல் வரை—யோலா துறை வரை—பெனுாயி நதியில் கப்பல் போக்கு வரத்து நடைபெறுகிறது. நைகர் முகத்துவாரத்திலிருந்து இது சுமார் 900 மைல்!

### மூலவளம்

போக்குவரத்து வசதிகள் இத்தனை தூரம் வளர்ந்திருக்கும் பொழுது, இந்நாட்டு மூல வளங்களின் சாத்திரத்தை ஊகித்துக் கொள்ள வேண்டியதுதான்.

எண்ணை விதைகள், தோல், வாழைப்பழம், மரம், நிலக்கரி, தகரம், ரப்பர், கொக்கோ, பருத்தி ஆகியவை இந்நாட்டின் பிரதம ஏற்றுமதிப் பொருட்கள் நவீன கைத்தொழில்கள், இயந்திர ஆலைகள் பரவி வருகின்றன. ஏற்றுமதிப் பொருட்களின் பெறுமதி இப்பொழுது 225 கோடி ரூபா!

### கல்வித் துறையில்

தென் நைஜீரியாவில் (மேற்கு நைஜீரியா, கிழக்கு நைஜீரியா) கல்வி வசதிகளைப் பரப்பியவர்கள் (இலங்கையிற் போல்) கிறிஸ்தவ மிஷனரிகளே. முஸ்லிம் ஆதிக்கம் மிகுந்த வட நைஜீரியாவில் கல்வி வசதிகள் குறைவு அரசாங்கத்தின் முயற்சியால் இன்று இவ்வசதிகள் பரவி வருகின்றன. வடக்கு, மேற்கு, கிழக்கு மாகாணங்களிலும் கிளைகளைக் கொண்ட கலை, விஞ்ஞான, தொழில் நுட்பக் கல்லூரியில் பட்டப் படிப்பு வரை வகுப்புகளுமுண்டு. சுமார் 6000 தொழில்நுட்ப மாணவர்கள் இங்கு பயிற்சி பெறுகிறார்கள் மேற்கு மாகாணத்துத் தலைநகரான இபடான் இல் பல்கலைக் கழகக் கல்லூரி இருக்கிறது.

### டெலிவிஷன்

லாகோஸ் ஒலிபரப்பு நிலையத்திலிருந்து தேசிய நிகழ்ச்சிகள் ஒலிபரப்பப்படுகின்றன மாகாணத் தலைநகர்களான இபடான், கடுனு, எனுகு ஆகிய இடங்களிலிருந்து அவ்வவ் மாகாணங்களுக்குப் பிரதேச ஒலிபரப்புகள் நிகழ்கின்றன. 'இருண்ட ஆபிரிக்கா'வில் டெலிவிஷன் கூட இடம் பெற்று விட்டது.

★

### பிரதேச அரசுகளின் விசேஷ அதிகாரங்கள்

அரசியல் துறையில் நைஜீரியா ஓர் இணைப்பரசு. வடக்கு, மேற்கு, கிழக்கு மாகாணங்களில் பிரதேச அரசுகள் உண்டு. மத்திய அரசின் தலைநகர்

(9-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பத்திரங்கள் அனைத்தும் இனிச் சிங்களத்தில்தான்

## வலிந்து கேட்டால் மட்டும் தமிழில் கிடைக்குமாம்

## நிதி அமைச்சின் ஏற்பாடு

அரசாங்க இலாகாக்கள் விநியோகிக்கும் பத்திரங்கள், படிவங்கள், பாரங்கள் எல்லாவற்றையும் இனிமேல் சிங்கள மொழியிலேயே அச்சிட்டு வெளியிடுவது என்றும், ஆங்கில மொழிப் பத்திரங்களையும், படிவங்களையும், பாரங்களையும் அறவே கைவிட்டு விடுவதென்றும், தமிழ் மக்கள் தமிழ பாரங்கள் முதலியன வேண்டும் என்று கோரும் பட்சத்தில் தான் அவற்றைத் தமிழ் மொழியில் அச்சிட்டு விநியோகிப்பது என்றும் அணியையில கூடிய திறைசேரி உத்தியோகத்தர்கள் தீர்மானித்திருப்பதாகத் தெரிய வருகிறது நிதி அமைச்சரின் ஆலோசனையின் பேரிலேயே சம்பந்தப்பட்ட உத்தியோகஸ்தர்கள் இம் முடிவுக்கு வந்துள்ளனர்.

### கேட்டால்தான் தமிழில்

பொதுமக்கள் அரசாங்கத்தோடு தொடர்பு கொள்ளும் போது பல துறைகளில் அச்சிட்ட பத்திரங்களையும் பாரங்களையும் பூர்த்தி செய்து அனுப்ப வேண்டியிருக்கிறதல்லவா? இப்பத்திரங்கள் தமிழிலும் வேண்டும் என்று தமிழ் பேசும் மக்கள் கேட்டால் தான் இனிமேல் இவை தமிழ் மொழியில் அச்சிட்டு வழங்கப்படும் என்று தெரிகிறது.

### தமிழ் பாரம் கிடைக்காவிடின்...

தமிழ் பாரம் கேட்கும்போது விஷமத்தனமாகச் சிங்கள பாரம் அல்லது ஆங்கில பாரம் அனுப்பப்படுமானால் அதற்கு என்ன செய்வது? இந்தக் கேள்வியை தமிழரசுப் பிரமுகர் ஒருவரிடம் கேட்ட போது அவர் பின்வருமாறு கூறினார்:—

### எதையும் தமிழில் நிரப்ப வேண்டும்

"தமிழ் பேசும் மக்கள் எப்பொழுதும் தமிழ் பாரங்களே அனுப்பும்படி கோர வேண்டும். தமிழ் பாரம் கிடைக்காமல் சிங்கள பாரம் அல்லது ஆங்கில பாரமே கிடைக்குமானால் கிடைத்ததை எப்படியும் தமிழிலேயே நிரப்பி அனுப்ப வேண்டும் ஆங்கில பாரத்திலுள்ள ஆங்கிலம் புரிந்தாலும் சரி, சிங்கள பாரத்தில் உள்ள சிங்களம் புரிந்தாலும் சரி நிரப்புவதைத் தமிழிலேயே நிரப்ப வேண்டும். இதுதான் தமிழ் பேசும் மக்கள் செய்ய வேண்டியது"— இவ்வாறு அந்தத் தமிழரசுப் பிரமுகர் கூறினார்

## வானொலியில் பேச சந்தர்ப்பம்

### ரூபா 60 சன்மானம்

இலங்கை வானொலியில் ஒலி பரப்புவதற்குப் பொதுமக்களிடமிருந்து பேச்சுப் பிரதிகள் கோரப்படுகின்றன.

தமிழ் நிகழ்ச்சி அதிகாரி திரு க. செ. நடராஜா சுதந்திரனுக்கு அனுப்பியுள்ள வானொலி அறிக்கையில் பின்வருமாறு கூறியிருக்கிறார்.

"வானொலியில் ஒலிபரப்புவதற்குச் சிங்களம், தமிழ் அல்லது ஆங்கிலப் பேச்சுகளான எழுத்துப் பிரதிகளை இலங்கை வானொலி வரவேற்கிறது. தெரிந்தெடுக்கப்படும் விஷயங்கள் பொதுமக்கள் விரும்பிக் கேட்டுப் பயனடையத் தக்கனவாய் இருத்தல் வேண்டும் பேச்சு 15 நிமிடங்களுக்கு ஒலிபரப்பத்தக்கதாயும் இருத்தல் வேண்டும் பிரதிகள் தட்டெழுத்தில் பொறிக்கப்பட்டனவாயிருத்தல் நலம்.

"எழுதுவோரின் பெயர், விலாசம், கல்வித்தரம் ஆகியவற்றைக் குறிப்பிட்டு "பேச்சுப் பிரதி" என்ற தலைப்பில் எழுதி, ஒவ்வொரு பேச்சிலும் இரண்டு பிரதிகள் ஒலிபரப்பு மா—அதிகாரிக்கு அனுப்புதல் வேண்டும்.

"பேச்சுஒலிபரப்புக்கேற்றதெனத் தெரிவு செய்யப்பட்டால் பேச்சின் தரத்துக்கு ஏற்றபடியும எழுதியவரே பேச்சை ஒலிபரபபத் தேர்ந்தெடுக்கப்படுகிறாரா அல்லது பேச்சு, நிலைய உத்தியோகத்தரால் வாசிக்கப்படுகிறதா என்பதற்கு ஏற்றபடியும் ரூபா 30-00 முதல ரூபா 60-00 வரை சன்மானம் வழங்கப்படும்.

"வானொலிக்காக எழுதுவது பற்றிய குறிப்புகளை நிலையத்திலிருந்து பெற்றுக் கொள்ளலாம்"—திரு. நடராஜா இவ்வாறு அந்தஅறிக்கையில் குறிப்பிட்டிருக்கிறார்.

## 'தவறு....

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தந்திகளுக்குமேல் வருவதில்லை. இந்த இலட்சணத்தில் தமிழ்த் தந்திகளுக்கென ஒரு உத்தியோகத்தரை விணடிக்க யாருக்குத் தான் மனம் வரும்? தமிழ் பேசும் மக்கள் தாம் தந்திகளை தமிழில்தான் அனுப்புவோம் என உறுதிகொண்டால் இந்த இழிநிலை நீடிக்குமா?

"தமிழ்த் தந்திகளின் பழுஏறினால எப்படியும் அதற்கென ஒரு ஊழியரையோ அல்லது பலரையோ நியமித்துத்தானே ஆக வேணடும். தவறு எம்முடையதாக இருக்கும்போது பிறரையோ அரசாங்கத்தையோ குறை கூறிப் பயன் என்ன? நமமை நாமே திருத்திக் கொண்டால் மற்றது தானே நடக்கும்" இவ்வாறு அந்த ஊழியர் தமது கடிதத்தில் குறிப்பிட்டிருக்கிறார்.

## தமிழ்ப் பல்கலைக் கழகம்

### பதவி மாற்றம்

தமிழ்ப் பல்கலைக் கழக இயக்கத் தலைவராகப் பேராசிரியர் அ. வி. மயில்வாகனம் தெரிவு செய்யப்பட்டார். சேர். வைத்திலிங்கம் துரைசாமி உடல் நலக் குறைவு காரணமாகப் பதவியை ராஜினமாச் செய்ததையடுத்தே அவருடைய இடத்துக்குப் பேராசிரியர் மயில்வாகனம் தெரிவு செய்யப்பட்டார்.

பேராசிரியர் அ. சின்னத்தம்பி தமிழ்ப் பல்கலைக் கழக இடைக்கக் கவுன்ஸில் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டார்.

இத் தெரிவுகள் கடந்த 15-ந் தேதி நடைபெற்ற கவுன்ஸிலின் விசேஷ கூட்டத்தில் நடைபெற்றன.

## பிரதேச அரசின் உரிமையில்....

### நிலைக்குமா?

(8-ம் பக்கத் தொடர்ச்சி)

லாகோஸ். இப்பட்டினத்தைச் சுற்றியுள்ள 27 சதுர மைல் பிரதேசம் இணைப்பரசின் ஆதிக்கத்திற் குட்பட்டது. போக்கு வரத்து, வெளிநாட்டுத் தொடர்புகள், பாதுகாப்பு, சுங்கம் ஆகியவை மத்திய அரசின் பொறுப்பிலுள்ளவை. வரையறுக்கப்பட்ட விஷயங்களில் மத்திய அரசாங்கம் தலையிட முடியாதபடி, மாகாண இராச்சியங்களுக்கு அதிகாரம் உண்டு.

### கட்சிகளும் தலைவர்களும்

மேற்கு நைஜீரியாவில் செல்வாக்குப் பெற்ற கட்சி "நடவடிக்கைக் குழு" இதன் தலைவர் அவொலொவோ மத்திய பாராளுமன்றத்தில் இன்று எதிர்க் கட்சித் தலைவராயிருக்கிறார். மேல் மாகாணப் பிரதமராக இவரிருந்த இடத்தில் இன்றிருப்பவர் அகின்ரோலா.

கிழக்கு நைஜீரியாவில் செல்வாக்குப் பெற்றது நைஜீரிய தேசியக் கவுன்ஸில் (N. C. N. C.) இதன் தலைவர் அஸிக்கிவ் பிரதமராயிருந்தவர். இணைப்பரசு ஏற்பட்டதும் மத்திய அரசில் மகா தேசாதிபதியாகி... இன்று கிழக்கு நைஜீரியப் பிரதமர் டாக்டர் ...

வடமாகாண மக்கள் காங்கிரஸ் (N. P. C.) தான் நைஜீரியாவின் மிகப் பெரிய அரசியல் ஸ்தாபனம். இதன் தலைவராகிய பெல்லோ வட நைஜீரியாவின் பிரதமரும் ஆவர். மத்திய பாராளுமன்றத்தில் இவர் கட்சி 142 ஸ்தானங்களைப் பெற்று மந்திரி சபை நிறுவியுள்ளது. உண்மையில் அதிகாரமும் செல்வாக்கும் இவரிடமிருந்தும் இவர் மத்திய அரசின் பிரதமராக ஒரு சாதுமனிதனை நியமித்திருக்கிறார். நைஜீரிய இணைப்பரசின் இன்றைய பிரதமர் ஒரு முஸ்லிம், அபூபக்கர் பலேவா அடிவான் திசையில் ஒன்றுக்குப் பக்கத்தில் ஒன்றாக பச்சை வெள்ளை பச்சை நிறங்களைக் கொண்ட நைஜீரிய தேசியக் கொடியின் கீழ் நின்று சுதந்திர தினத்தன்று இவர் கூறினார் "நைஜீரிய பிரிவினை மடிந்து விட்டது. நைஜீரியா ஒரே ராஜ்ஜிய தேசம்" என்று.

விடிவெள்ளியைத் தொடர்ந்து நிரந்தர சூரியன் உதயமாகுமா? நைஜீரிய இணைப்பரசு தொடர்ந்து நிலைக்குமா?

(முற்றும்)

## பாடசாலைகளைக்....

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இந்து மத ஸ்தாபனமான விவேகானந்த சபை அரசாங்கம் உதவி நன்கொடை பெறும் பாடசாலைகளைக் கைபேற்பதை வன்மையாகக் கண்டித்து எதிர்ப்புத் தெரிவித்திருக்கிறது.

பௌத்தர்களின் அபிமானத்துக்குரிய பௌத்த ஞான சங்கமும் அரசாங்கத்தின் இந்த நடவடிக்கையைப் பலமாக எதிர்க்கிறது.

முஸ்லிம்களின் பலம் பொருந்திய ஸ்தாபனமான முஸ்லிம் லீக்கும் பாடசாலைகளை அரசாங்கம் எடுப்பதை எதிர்க்கிறது.

மொத்தத்தில் பாடசாலை விஷயத்தில் அரசாங்கம் பலத்த எதிர்ப்பைச் சமாளிக்க வேண்டியிருக்கிறது. அரசாங்கத்தின் கைக்குப் போகும் பாடசாலைகள் குறைவாகவும் வெளியே நின்று தனித்து இயங்கும் பாடசாலைகள் அதிகமாகவும் இருக்குமானால் அதுபற்றி ஆச்சரியப்படுவதற்கில்லை.


### தேவை

சமையற்காரப் பொடியன் தேவை.
சம்பளம் ரூபா 30-00.

டாக்டர் திருவிளங்கம்
471, தெமட்டகொடை,
கொழும்பு.


## திருமண அழைப்பு

அன்புடையீர்,

எதிர்வரும் 29-10-60 சனிக்கிழமை மாலை 5 மணிக்கு, டாக்டர் மு. வரதராசன் அவர்கள் தலைமையில், பம்பலப்பிட்டி, கில்டன் பிளேஸ், 60-ம் எண்ணிலுள்ள இல்லத்தில் நடைபெறும் எங்கள் திருமண விழாவில் கலந்து, விழாவைச் சிறப்பிக்கும் வண்ணம், நண்பர்களையும் உறவினர்களையும் அன்புடன் அழைக்கிறோம்.

தங்களன்புள்ள,
செ. கணேசலிங்கன்.
வே. மீனம்பாள்.

4, டிக்மன்ஸ் பாத்,
கொழும்பு-5.
20—10—60.

## தமிழரசி வாசம்

## புதுமனை புகு விழா

### அழைப்பு

திருவள்ளுவர் ஆண்டு 1991 ஐப்பசித் திங்கள் 13-ஆம் நாள் (29-10-60) சனிக்கிழமை முற்பகல் 11 மணிக்கிடையில் வரும் சுப முகூர்த்த வேளையில் புதுமனைப் பிரவேசமும்,

30-10-60 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 6 மணிக்கு கோப்பாய்த் தொகுதிப் பாராளுமன்ற உறுப்பினர் திரு மு பாலசுந்தரம் அவர்கள் தலைமையில் தேநீர் விருந்துபசாரமும், பிரமுகர்களின் சிறப்புச் சொற்பொழிவுகளும் நடைபெறும்.

அத்தருணம் நண்பர்களும் உறவினர்களும் சமுகம் தந்து சந்தோஷம் கொண்டாடிச் செல்லுமாறு வேண்டுகிறோம்.

இங்ஙனம்,
க. சின்னத்துரை
(தம்பதிகள்)

ஆவரங்கால்,
புத்தூர்.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஓடாதே மாப்பிள்ளை!

சிறுகதை — எழுதியவர்: "மாலதி"

"**ப**த்தாயிரம் பெறுமதியான வீடு; பதினையாயிரம் பெறுமதியான நெற்காணி; ஆயிரம் பெறுமானமுள்ள நகை; கையிலே ரொக்கமாக நாலாயிரம். என்ன சொல்கிறாய் தம்பி?"

தூசி படிந்த அந்த 'ஹோட்டலின்' மேல் மாடியிலே கல்யாணத் தரகர் சின்னத்தம்பியின் குரல் இப்படி ஒலி கொடுத்தது.

"சொல்லு தம்பி!" ஒத்துப் பாடியது கிளாக்கர் மணியின் குரல்.

ஒரு நூற்றாண்டும் கழிந்த, உளுத்துக் கொட்டிய அந்த மேல்மாடியை எட்டுச் சுண்ணாம்பு பூசிய சாக்குத் துண்டுகள் நான்கு அறைகளாக மாற்றி விட்டிருந்தன. ஒவ்வொரு அறைக்கும் மாதம் 15-00 ரூபாய் வாடகை. தென் கோடியிலேயிருந்த அந்தச் சின்ன அறையிலே தான் இத்தனை அமர்க்களமும்!

மாப்பிள்ளை சோமசுந்தரத்துக்கு உச்சி குளிர்ந்துவிட்டது. புதையல் கிடைத்தது போல இதயம் துள்ளியது. அடேயப்பா! இத்தனை சீர்வரிசைகள்! 'அடே சோமு! அதிர்ஷ்டக்காரனடா நீ!' தனக்குள்ளே பெருமை கும்மாளமிட்டது.

"அம்மாவும் வேண்டாம்; அப்பாவும் வேண்டாம். நான் இப்போதே 'ரெடி. கிளாக்கர். புறப்படுவோமா?" மாப்பிள்ளைக்குத் தலைகால் புரியவில்லை.

கொலுகொலுத்துக் கிடந்த அந்த ஏணியிலே, மாடிப் படியிலிறங்கும் கம்பீரத்தோடு கீழே குதித்தோடி வந்தார் மாப்பிள்ளை. கடகடக்கும் கிழட்டு மாடு போல படபடப்போடு படிகளை எண்ணிக்கொண்டிருந்தார் தரகர் சின்னத்தம்பி.

வாசலிலே வாடகைக் கார் ஒன்று. இவர்களைத் தான் காத்து நின்றது. மாப்பிள்ளைக்கு முன் சீட். இரண்டு தரகர்களும் முகத்தை முகத்தைப் பார்த்து முறுவலித்துக் கொண்டு பின்னே அமர்ந்து கொண்டார்கள். 'மெயின் ரோட்'டைத் தாண்டி, 'மெரண்டா ஜங்ஷனி'ல் வளைந்து, காற்றாய்ப் பறந்து கொண்டிருந்தது கார்.

●

"**பீ**ப்...பீப்...பீப்..."

சாளரம் பரபரப்போடு திறந்துகொண்டது. 'ரோட்டை' எட்டிப் பார்த்தது ஒரு முகம். யாரின் முகம்? எனது முகமேதான்.

ஒளியை நீளமாகப் பாய்ச்சியபடி நின்றது அந்தக்கார். கதவுகள் திறந்து—படால்! படால்! என மூடிக்கொண்டன; முன்வெளிச்சத்தைத் தாண்டின மூன்று வெள்ளை வேட்டிகள்!

"வாருங்கள் வாருங்கள்!" அண்ணாவின் குரல் வாசற்படியிலே ஒலித்தது. சாளரத்தைத் தடால் என இழுத்து மூடினேன்.

"மாலதி!"..........

திரையை விலக்கிக் கொண்டு உள்ளே முகத்தை நீட்டினார் அண்ணா.

"காப்பி கொண்டு வா!"...

"வெளியில் யாராவது பையன்கள் நின்றால் அனுப்புங்கள், கொடுத்தனுப்புகிறேன்"—இப்படி என் இதழ்கள் கதைத்தன; ஆமாம் குசுகுசுத்தேன்.

"உனக்கென்ன பைத்தியமா? வந்திருப்பவர்கள் அரட்டையடிக்க வரவில்லை. சேலையைக் கட்டிக்கொண்டு நீயே கொண்டு வா"

சேலையைக் கட்டிக் கொண்டு நானே போவதா? ஓகோ பெண் பார்க்கும் படலமோ? அண்ணாவுக்கு ஏன் இந்தப் பைத்தியம் நானென்ன காட்சிப் பொருளா? கண்ணாடி போட்டு வீதி ஓரத்திலே நிறுத்திவிட்டிருக்கலாமே! சே, சே இப்படி நான் எண்ணமிட்டாலும் மனத்திலே ஒரு இனம்புரியாத கிளுகிளுப்பு வெட்கம் என்னைப் பிடுங்கித் தின்றது. எப்படிப் போவது?...ம் கூம்...

"மாலதி!" அண்ணாவின் குரல்.

என்ன தொல்லையாய்ப் போச்சு? பெண்பிள்ளையென்றால் என்ன காட்சிக்கு வைக்கும் விளையாட்டுப் பொம்மையா? வெட்கமில்லாமல் இந்த வாலிபர்களும் கிளம்பி விடுகிறார்களே பெண் பார்க்க! எந்தப் பெண்ணாவது மாப்பிள்ளை பார்க்கக் கிளம்பியதுண்டா? சமத்துவமாம் சமத்துவம். சுத்த அநாகரிகம்.

இதற்கிடையிலே அண்ணாவின் குரல் ஏழாவது தடவையாக ஒலித்தது.

"மாலதி!......மாலதி!...... மாலதி!......"

மூச்சைப் பிடித்துக் கொண்டு ஒரே எட்டில் காப்பித் தட்டை வைத்து விட்டு உள்ளே பாய்ந்தேன். அப்பாடி இதற்குள்ளே வியர்த்துக் கொட்டியது எனக்கு!

சே! என்ன மடைத்தனம். வந்த மாப்பிள்ளை என்ன நிறம் என்றுகூட நிமிர்ந்து பாராமல்.........

> நான்தான் மணமகள். சுரணையற்ற—மானமில்லாத—துப்பற்ற இக்கால இளைஞர்களுக்கு ஒரு படிப்பினைக்காகவே எனது சொந்தக் கதையை இப்படி எழுதுகிறேன்.

அம்மாடியோவ்! இந்த ஆசை பொல்லாதது தான். ஆண், பெண் என்ற நான்கெழுத்துக்குள்ளே எத்தனை விசித்திர உணர்ச்சிகள்!

பார்த்துத்தான் விடுவோமே.

கதவிடுக்கின்மூலமாக கருவிழிகள் இரண்டு வெளியே பாய்ந்தன.

சகிக்கக்கூடிய தோற்றம் தான். அழகர் என்று சொல்லிவிட முடியாது. முறுக்கேறாத சாதாரண வாலிபப் பருவம். பரவாயில்லை.

திருப்திக்கும் அதிருப்திக்கும் நடுவிலே இரு தலைக் கொள்ளி எறும்பாக என் மனம்......

அண்ணாவும் அவர்களும் நீண்ட—நீண்டநேரம் பேசினார்கள். ஏதேதோ பேசினார்கள். என்னதான் அப்படிப் பேச இருக்கிறது? ஆமாம். கல்யாணம் சின்னவிஷயமா? அத்தனை பெரிதாகப் பேச்சும் இருக்கத்தானே வேண்டும்.

அத்தனை பெரிதாகப் பேசி அவர்கள் கண்ட முடிவு—அடுத்த சனி கல்யாணம். அடி ஆத்தே; அடுத்த சனி கல்யாணம்!

மணம்—திருமணம் இன்னும் எட்டு நாட்கள் எட்டேட எட்டு நாட்கள்!

இதற்கிடையில். அவர்... (அவரை இனியும் மாப்பிள்ளையென்றெழுதலாமோ?) அவர் நாள் தவறினாலும் எங்கள் வீட்டுப் படியை மிதிக்கத் தவறியது கிடையாது. சாப்பாடெல்லாம் தடல்புடல்! ஏன் பொய்யைச் சொல்ல? சமையலில் என் கைவரிசைதான். காட்டத்தானே வேண்டும்!

●

**நா**ட்கள் சும்மா நகர்ந்தன. என் மனம் சும்மாவா இருந்தது? இத்தனை வருஷத்துக்கு இந்தச் சிந்தனையே இல்லாதிருந்த எனக்கு இன்னும் ஏழு நாட்கள் [illegible]

வெள்ளி பொழுது சாய்ந்த நேரம் வெறும் நீல வெளியைப் பார்த்துக் கொண்டு எங்கோ நீந்தினேன். நீந்தினேனா? மனச் சிறு புள்ளினை நீந்தவிட்டேன்.

வெகுதூரத்தில்—அந்தக் கோடியில், இரண்டே 'கழுத்து வெட்டிக்' குருவிகள் வேகமாகப் பறந்து கொண்டிருந்தன. நானை நானும் அவரும் அப்படி... இந்த உள்ளத்துக்கு அணையே கிடையாது.

"மாலதீ!"

ஓட்டமாக வந்து என்னைக் கட்டிக்கொண்டாள் பவானி.

"அடியே கள்ளி! இத்தனை காலத்துக்குப் பிறகு இப்போதாவது நினைப்பு வந்ததே!"

அவளை அன்போடு கடிந்து கொண்டு சிகையை வருடினேன். அவள் என் மார்பிலே முகம் புதைத்து...... அட, அழுகிறாளா?

"பவானி!" முகத்தை நிமிர்த்தினேன்—அந்தச் சிவந்த வதனத்தில் இரண்டு அருவிகள்!— குளத்திலே தான் தாமரை பூக்குமாம். இங்கே தாமரையல் பொங்கும் இரண்டு பொய்கைகள்! —கண்ணீர்க் குளங்கள்.

"பவானி! என்ன இது?" எனக்குத் துடிப்பாய் இருந்தது. இத்தனை காலத்துக்குப் பிறகு சந்திப்பவள். வந்ததும் வராததுமாக இப்படி அழுவதா?

என்னை அவள் உள்ளே இழுத்து வந்தாள். மார்பினுளிருந்து எதையோ எடுத்தாள். புகைப்படமா? லபக்கென்று அப்படியே பிடுங்கிக்கொண்டேன்.

அதிலே......

அவர்......அவர் ......நாளை என்னை மணக்கப்போகும் அதே சோமு! அவருக்குப் பக்கத்தில் பவானி!—இதே பவானி!—என் உயிர்ச் சினேகிதி பவானி!

"பவானி!" நான் உரக்கத்தான் கூவினேனா?

"என்னை மன்னித்துவிடு மாலதி!" பவானி குனிந்து கொண்டு கண்ணீர் வடித்தாள்.

எனக்குப் புரிந்து விட்டது. அவள் புரியாததையும் புரிய வைத்து விட்டாள்.

"காலிப்பயல்!" யாரோ சினிமாவில் சொன்ன வார்த்தை நெஞ்சிலே மோதியது. என்ன பித்தலாட்டம் இது?

பவானியின் வீடே கதியென்று கிடந்தானும் (இனி நான் 'அவன்' என்று கூறுவதில அர்த்தமுண்டு தானே!) இருவரும் சேர்ந்தே படம் கூட எடுத்திருக்கிறார்கள்! பெற்றோரையே கேட்க வேண்டாமென்று திருமணத்துக்குச் சம்மதித்தானும். நாளை திருமணம். நல்ல செலவு. அன்று சாயந்தரம் சென்றவன்; சென்றவன் தான். 'ஹோட்டலுக்குப் போனால் அங்குமில்லை; எங்குமேயில்லை. மாப்பிள்ளை கம்பிநீட்டிவிட்டான்!

இதையெல்லாம் சொல்லியழுதாள் அவமானம் தாங்காது அண்ணாவோடு கொழும்பு சென்றுவிட்டாள் பவானி. இப்போது என் கல்யாணத்துக்கு வந்திருக்கிறாள். அதே சோமுவுக்கும் எனக்கும் கல்யாணம். அதற்குத்தான்வந்திருக்கிறாளாம். பேதை பவானி. எப்படியிருக்கிறது வேடிக்கை? நாளை எனக்கு நடக்கப்போவது திருமணம்தானா?

என்ன இருந்தாலும் அண்ணா என் அண்ணாவே தான். இதைப் பவானி கூறக் கேட்டதும் அவருக்குப் பற்றிக் கொண்டு வந்தது கோபம் பவானி வெளியே சென்றிருந்தாள். ஒரு திட்டம் போட்டோம். மிஸ்டர் சோமு அன்றிரவும் வந்திருந்தார். சாப்பாடு ஆயிற்று. ஊரே உறங்கிக் கொண்டிருந்தது. திட்டப் படி அண்ணா நழுவினார். நான் திரையை விலக்கி மாப்பிள்ளைக்குச் சைகை காட்டினேன் (நானில்லை. என் வேடத்திலிருந்த அண்ணா). கதவு தாளிடப் பட்டது.

உள்ளே என்ன நடந்திருக்கும்?......முதுகு புளித்துப் போய் வெளிவந்தார் மாப்பிள்ளை. அண்ணா வெளியேயிருந்து அப்போதுதான் படியேறினார்.

"சோமு! இங்கேயே படுத்துக் கொள்கிறாயா? 'ஹோட்டலு'க்குப் போகவேண்டுமா?" அண்ணா கேட்டார்

எனக்குச் சிரிப்பொரு புறம்; அழுகை ஒரு புறம். "பாவம்......"

"என்ன சோமு! கல்யாணத்துக்கு எல்லாம் ரெடி; நாளைக் காலையிலே அழைக்க வருவேன். பிறகு இரவிலே எங்காவது ஒடிவிடாதே" அண்ணா சிரிக்காமலே பேசினார்.

வீட்டுக்குள் நடந்ததை வெளியில் விடுவாரா மாப்பிள்ளை? சும்மா ஆட்டினார், தலையாட்டி மாடு போல.

வருகிறேன் என்று சொல்லாமலே படியிறங்கி இருளோடு கலந்தார் மாப்பிள்ளை.

"அயோக்கியப் பயல். நாளைக்கு — இவனுக்கு நாம் செய்வது என்ன தெரியுமா மாலதி!" அண்ணா கேட்டார்.

"என்ன?" அவர் முகத்தைப் பார்த்தேன்.

"மானங் கெட்டவன். நாளை வந்தானானால் அந்த முகூர்த்தத்தில் கல்யாணத்தை நடத்தி முடிக்க வேண்டியதுதான்."

எனக்குப் பகீரென்றது.

"அண்ணா'" என்னை அறியாமலே கத்தினேன்.

"இதைப் பார்க்கினும் எனக்கொரு துளி நஞ்சு. நாளைய முகூர்த்தத்திலே தாருங்களண்ணா'. என் உடல் படபடத்தது.

அவர் சிரித்தார்.

"பைத்தியப் பெண்ணே! பவானிக்கே கட்டிவிடலாம் என்கிறேன் நான்."

அம்மாடி! எத்தனை தூரம் இதுக்குள்ளே பதைத்து விட்டேன்!

●

**அ**டுத்தநாள். முகூர்த்த வேளை நெருங்கிக் கொண்டிருந்தது. எந்த ஆயத்தமும் எங்கள் வீட்டில் நடக்கவில்லை. அயல் வீட்டவர்கள் முகத்தை முகத்தைப் பார்த்தார்கள்.

அண்ணா காலையில் போனவர் போனவர் தான். முகூர்த்த வேளை கடந்து விட்டது. பவானி என்னைப் பார்த்துச் சிரித்தாள். இது வரை என்னை இவள் நம்பவில்லைத்தானே! சபலம் பெண்களுக்கே உரியது தான்.

அண்ணா வியர்த்து விருவிருத்துக் காரிலிருந்திறங்கினார்.

"என்னண்ணா புதினம்?"

"மாப்பிள்ளையை ஓடோட விரட்டிவிட்டு வருகிறேன்."

"ஓடோடவா விரட்டினீர்கள்?"

(11-ம் பக்கம் பார்க்க)


# ஆனந்தா லேகியம்

இதன் குணத்தை ஒரே நாளில் அறிந்து கொள்ளலாம்.

நிர். 174, ஆனந்தா வைத்தியசாலை என்ற விலாசத்துடன் இந்த அடையாளத்தை பார்த்து வாங்குங்கள்.

ஆனந்தா லேகியம் நாள் தோறும் மலஜலத்தை சுகமாகக் கழித்து, அசதி, சோம்பல், மேல், கால், கை கணுக்களில் வலி, அஜீரணம், பசியின்மை, பித்த வாய்வு, புளியேப்பம், வயிற்றுப் பொருமல், வயிற்று வலி, இடுப்பு வலி, நெஞ்சு வலி, சிரங்கு, பற்றுகள், சொறி, தேமல், நெஞ்சு எரிவு, திரேகம் காந்தல், கண் எரிச்சல், உள்ளங் கால், கை எரிச்சல், வாய்வுக் குத்து, நெஞ்சடைப்பு, சகலவித வாய்வுகள், வாதக் கடுப்புகள் முதலிய அநேக வியாதிகள் தீரும். சில காலம் சாப்பிட்டு வந்தால் மூல வியாதி அடியோடு தொலைந்து போகும். பத்தியமில்லை.

**பெரியது ரூ. 5-75. சிறியது ரூ. 3-00.**

இத்துடன், "ஆனந்தா தைலத்தை"த் தேய்த்து வந்தால் அதிக உஷ்ணம், கண் எரிச்சல், மூலச் சூடு, பித்த மயக்கம், கை கால் எரிவு முதலான அநேக வியாதிகளை நீக்கி மூளைக்கு குளிர்ச்சியையும் கண்ணுக்குப் பிரகாசத்தையும் கொடுக்கும். சகல வியாதிகளுக்கும் விபரமடங்கிய கேட்லாக் எழுதினால் இனமாக அனுப்புவோம்;

**பெரியது ரூ. 5-50. சிறியது ரூ. 3-00.**

வி. பி. பி. செலவு வேறு.

தயாரிப்பாளர்:-

**ஆனந்தா வைத்தியசாலை,**

நிர். 174, செட்டியார் தெரு, கொழும்பு—11


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீர்கொழும்பில் மீன்பிடித் தொழில்:

# தந்தை கண்முன்னல் மகன் கடலுக்கு பலியாவதும் உண்டு

## "கூட்டுறவு முறை" என்றல் அதன் பொருள் தெரியாது-ஆனல் தொழிலில் அது செயல்படுகிறது

## ஊர்விட்டு ஊர் சென்று மீன்பிடித்தால் ஆளுக்கு ரூபா 200 மிச்சமாகும்

இலங்கையின் கரைநாடுகளை அண்டிப் பல இடங்களிலும் மீன்பிடி மக்கள் வசிக்கின்றனர்கள். இம் மீன்பிடி மக்களுள் நீர்கொழும்பு மீன்பிடி தொழிலாளர் ஒருபடி உயர்ந்தவர்களாகக் கணிக்கப்படுகின்றனர்கள். இவர்கள் செல்வாக்கும், தொழில் திறமையும், மீன்பிடி தொழிலில் கூடிய அனுபவமும் கொண்டவர்களாகக் காணப்படுகின்றனர்கள். நீர்கொழும்பு பகுதியில் மட்டுமன்றி மன்னர், தலைமன்னர், திருகோணமலை, முல்லைத்தீவு காரைத்தீவு, கற்பிட்டி, நிலாவெளி போன்ற பிரதான மீன்பிடி இடங்கட்கு எல்லாம் கூட்டம் கூட்டமாகச் சென்று மீன் பிடிப்பார்கள். இந்த மீன்பிடி கேந்திர ஸ்தானங்களில் இவர்கள் மூன்று அல்லது நாலுமாத காலந்தங்கி மீன் பிடிப்பதுண்டு. பத்துப்பன்னிரண்டு தோணிகள் ஒன்றாகச் சேர்ந்து அவைகளில் தொழில் செய்யும் நாற்பது ஐம்பது தொழிலாளர்களும் கூட்டுறவு முறையில் தங்கள் தொழிலை நடத்துவார்கள்.

### ரூபா 200/- மிச்சமாகும்

கடற்கரையிலே வாடிவீடுகள் அமைத்துக்கொண்டு வசிப்பார்கள். சிலர் கடலுக்கு மீன் பிடிக்கப் போவார்கள். இன்னும் சிலர் கரையிலே தங்கி தொழிலாளருக்கு வேண்டிய உணவுவகைகளைத் தயாரிப்பார்கள். தேவைக்கு அதிகமாகப் பிடிக்கப்படும் மீன்களை வெட்டி உப்பிட்டுக் கருவாடு ஆகக் காயவைப்பார்கள். வேறு சிலர் தொழில் உபகரணங்களைத் திருத்துவதிலும் புதுப்பிப்பதிலும் ஈடுபடுவார்கள். தாங்கள் பிடிக்கும் மீன்களை வியாபாரிகட்கு விற்பார்கள். அவர்கள் மீன்களை வாங்கி ஐஸ் போட்டு புகையிரத மூலம் கொழும்புக்கு அனுப்புவார்கள். இப்படியாக மூன்று அல்லது நாலு மாத காலம் தொழில் செய்த பின்பு ஊருக்குத் திரும்புவார்கள். தங்கள் சாப்பாட்டுச் செலவும், ஏனைய செலவுகளும் போக மிகுதியாகவுள்ள பணத்தை அவர்கள் பங்கிட்டுக் கொள்வார்கள். நல்ல திறமான உணவோடு அவர்கட்கு மாதம் நூற்றைம்பது ரூபா அல்லது இருநூறு ரூபாவரை மிச்சமாகும் மாதங்களுமுண்டு. மொத்தமாகப் பெருந்தொகைப் பணம் கிடைப்பதால் பிற ஊர்கட்குப்போய் மீன் பிடிப்பதை நீர்கொழும்பு மீன் பிடி தொழிலாளர் மிக விரும்புகிறார்கள்.

இம்முறையால் தங்கள் வாழ்க்கையின் பெரும் பிரச்சினைகளையும், தேவைகளையும் அவர்கள் பூர்த்தி செய்து கொள்ளுகின்றனர்கள்.

### ஒப்பந்த முறையில் மீன் பிடித்தல்

சில பணம்படைத்த மீன் முதலாளிகள் மீன்பிடி தொழிலாளரை பிற ஊர்கட்குப் போய் மீன்பிடிப்பதற்காக ஒப்பந்த முறையில் அழைத்துச் செல்வதுண்டு. மீன்பிடி உபகரணங்களும், தோணி முதலாம் எல்லாச் சாமான்களும் முதலாளி வைத்திருப்பார். தொழிலுக்கு அழைத்துப் போகப்படும் தொழிலாளிக்கு உணவு கொடுத்து மாதம் ஐம்பது அல்லது எழுபத்தைந்து ரூபாய் என்று பொருந்திக் கொள்வர். முற்பணமாக தொழிலுக்குப் போக முன்பு ஒரு தொகைப் பணத்தைக் கொடுப்பார். தொழிலாளி இந்த ஒப்பந்தப்படி இரண்டு அல்லது மூன்று மாதகாலம் அவருடைய தோணியில் வேலை செய்ய வேண்டியவராக இருக்கின்றார். இம்முறையை மீன்பிடி மக்கள் ஆதரிப்பதில்லையென்றாலும், வாழ்க்கையில் அவர்கட்குண்டாகும் கஷ்ட நஷ்ட நேரங்களில் பணம் பெற வேறு வழியில்லாமல் அந்த முதலாளிமாரின் தயவைப் பெற வேண்டியவராக இருக்கின்றனர். இப்படிக் கூட்டமாக பிற ஊர்கட்கு மீன் பிடிக்கப் போவதைக் கூட்டுறவு முறையில் நடத்த இவர்கள் வழி நடத்தப்பட்டால் அது மீன்பிடி மக்களுக்குச் செய்யும் மகத்தான சேவையாகும்.

**என். டி. பீரிஸ்**

### ஒற்றுமை

கூட்டுறவு முறை என்னும் சொல்லின் பொருளையோ கருத்தையோ அவர்கள் அறியமாட்டார்கள் ஆனல் கூட்டுறவு முறையை அவர்கள் தங்கள் வாழ்நாளில் தினமும் கையாண்டு பெரும்பயன் பெறுகின்றனர்கள். தோணியில் நாலு அல்லது ஐந்து பேர் ஒன்றுசேர்ந்து கடலுக்குப் போவார்கள். ஒற்றுமையாக இருந்து மீன்பிடிப்பார்கள். கடலிலே தாங்கள் தனித்தனி செய்யவேண்டிய வேலைகளையும், ஒன்றாகச் சேர்ந்து செய்ய வேண்டிய வேலைகளையும் கூட்டுமனப்பான்மையுடன் செய்வார்கள். ஒருவர் சுக்கானைப் பிடித்துத் தோணியின் ஓட்டத்தைக் கவனித்துக் கொண்டிருப்பார். மற்றவர் கூரைப்பாய்க்குத் தண்ணிரை அள்ளி விசி தோணியின் ஓட்டத்தைத் துரிதப்படுத்திக் கொண்டிருப்பார். மூன்றும் நபர் கடல் அலைகளால் தோணிக்குள் கொட்டப்படும் நீரை வெளியே எடுத்து ஊற்றிக் கொண்டிருப்பார். இதற்கிடையில் நாலாம் நபர் தோணியின் கயிறுகள், கூரைப்பாய் பொருத்தப்பட்டுள்ள கயிறுகள், மீன்பிடி கயிறுகள் என பவற்றிலே கண்ணும கருத்துமுடையவராக இருப்பார்.

### ஒரு நம்பிக்கை

கரைக்கு வந்தாலும் அவர்கள் ஒற்றுமை குலைந்துவிடுவதில்லை. மீன்பிடிகாரருக்குக் கடலில் மட்டுமல்ல; கரையிலும் நிரம்ப வேலையுண்டு. மறுநாள் தொழிலுக்குப் போவதற்காக தூண்டிற் கயிறுகளைத் தயாரிப்பார்கள். கூரைப்பாயில ஏதும் [illegible] இருந்தால் பழுது பார்ப்பார்கள். தோணி [illegible] தோணிக் கயிறுகளில் உள்ள குறைபாடுகளைத் திருத்திக் கொள்வார்கள். வலைகளைப் பின்னி கயிறுகளை முறுக்கி தூண்டிற் கயிறுகட்குச் சாயமூட்டி, தூண்டில் கொக்கிகளைக் கூர்மையாக்கி வைத்துக்கொள்வார்கள். தங்கள் ஓய்வு நேரத்தை அவர்கள் சரியான வழியில் செலவிடாவிட்டால் தங்கள் உயிருக்கு ஆபத்து உண்டாகும் என்று அவர்கள் கூறுவது முற்றிலும் உண்மையே.

### ஆபத்து

"ஆகாயத்தில் அந்தரத்திலே பறக்கும் விமான இயந்திரம் பழுது பட்டால் விமானிக்கு எத்தகைய ஆபத்து உண்டாகுமோ அதைப் போலவே கொந்தளிக்கும் கடலில் பொங்கி எழும் அலைகட்கு மத்தியில் ஓடும் எங்கள் படகுகட்கு ஆபத்து உண்டானல் எங்கள் நிலைமை மிகப் பரிதாபமாக இருக்கும். நாங்கள் உயிர்வாழ உதவும் கடலே எங்கள் எமனுகவும் மாறிவிடும். எந்த மீன்களை நாங்கள் வேட்டையாடிப் பிடித்து ஜீவனோபாயம் நடத்துகின்றோமோ ஆபத்து வேளையில் அந்த மீன்களுக்கே நாங்கள் இரையாக வேண்டிய பரிதாபமான நிலை எங்கட்கு ஏற்படுவதுண்டு!" என்று அவர்கள் கூறுவார்கள்.

### புயல் ஏற்பட்டால்...

சில வேளைகளில் சாத்திரப் பிரகாரமாக சூராவளிக் காற்று புயற்காற்று என்பன ஏற்பட்டுவிட்டால் • உடனே அவர்கள் கூரைப் பாயை அவிழ்த்து மடித்துக் கொள்வார்கள் தோணி கடல் அலைகளால் அங்கும் இங்கும் அலைக்கழிக்கப்பட்டு நீரில் மூழ்கிவிடும். ஆனல் முற்றாகவல்ல; தோணிக்கு மேலாக இரு பலகைகள் பொருத்தப்பட்டிருக்கும் இதைப் 'பத்தா' என்று அழைப்பர். அப்பத்தாருக்கு மேலாக நீண்ட தடிப்பான இரு தடிகள் உண்டு. தடியின் பெயர் 'குட்டிப்போர்'. தோணி நீரில் மூழ்கினுல் இந்தக் குட்டிப்போர் வரை தான் நீரில் மூழ்கும். "குட்டிபோர்" மிதக்கக் கூடிய தடியால் செய்யப்பட்டிருப்பதால் நீர் மட்டத்தின்மேல் தாமரை இலைபோல தோணி மிதக்கும். ஆனல் தோணிக்குள் ஒருவரும் நிற்கமுடியாது. தொழிலாளர் கடல் அலைகளால் கடலுக்குள் வீசப்படுவர். இப்படியான ஆபத்து வேளைகளில் ஒருவருக்கொருவர் உதவி செய்யத்தன்னும் முடியாத நிலையில் தங்கள் தங்கள் உயிர்கட்காகப் போராட வேண்டியவர்களாக இருக்கின்றனர்கள்.

### கண் முன்னல் கடலுக்குப் பலி

ஒரு தோணியில் தகப்பன், மகன், அண்ணன், தம்பி, மச்சான், மருமகன் என்ற உறவுமுறை கொண்டவர்களே மீன் பிடிக்கப் போவதுண்டு. இவர்களுள் ஒருவர் விழுந்து விட்டால் தோணியில் உள்ள உபகரணங்களுள் ஒன்றைப் போடுவதைத் தவிர மற்றவர்களால் வேறு எந்த விதமான உதவியையும் செய்ய முடிவதில்லை. தோணியை நிறுத்தவோ கடலுள் விழுந்தவரிடம் கொண்டு செல்லவோ காற்றும் அலைகளும் இடந்தருவதில்லை. கடலில் விழுந்தவர் விதி அவ்வளவுதான்; சிலவேளை தங்கள் கண் முன்னலே தகப்பன் மகனையோ உடன் பிறந்த ஒரு சகோதரனையோ கடலுக்குப் பலியாகக் கொடுத்துக் கரைக்கு வரவேண்டிய சமயமும் சந்தர்ப்பங்களும் அவர்களுக்

(13-ம் பக்கம் பார்க்க)



நீர்கொழும்புக் கடற்கரையில் காணப்படும் காட்சிகளுள் இவை இரண்டும் சர்வசாதாரணமானவை

பாடசாலைகளை

# அரசாங்கத்திடம் கையளிக்க விவேகானந்த சபை எதிர்ப்பு

## சைவத்துக்கும் சைவப்பண்பாட்டுக்கும் கேடுவரும் என அஞ்சுகிறது

உதவி நன்கொடை பெறும் பாடசாலைகளை அரசாங்கம் கையேற்று நடத்துவதைக் கொழும்பு விவேகானந்த சபை எதிர்க்கிறது சபையின் நிர்வாகக் குழுக் கூட்டத்தில் ஒரு மனதாக நிறைவேற்றப்பட்ட தீர்மானம் ஒன்று இதுவாகும்.

நிர்வாகக் குழுக் கூட்டம் கடந்த 13-ந் தேதி, சபைத் தலைவரின் தலைமையில் நடைபெற்றது.

சைவ சமயத்துக்கும், சைவப் பண்பாட்டுக்கும் பொதுவாக மாணவர்களின் கல்விக்கும் அரசாங்கம் உதவி நன்கொடை பெறும்பாடசாலைகளைக் கையேற்று நடத்துவது உகந்ததல்ல என்றும் இப்படிச் செய்வதால் தனி மனிதனுக்கு மட்டுமல்ல; நாட்டுக்குமே கேடுவரும் என்று நிர்வாகக்குழு அபிப்பிராயம் தெரிவித்து எதிர்ப்பு தீர்மானம் நிறைவேற்றியது.

நிர்வாகக் குழுவின் இந்தத் தீர்மானத்தை உறுதிப்படுத்த சபையின் [illegible] பொதுக்கூட்டம் ஒன்றைக் கூட்டுவது என்றும் முடிவு செய்யப்பட்டது.

# ஓடாதே....

(10ம் பக்கத் தொடர்ச்சி)

"இரவு நடுச் சாமத்திலேயே 'ஹோட்டலை' விட்டு ஓட்டம் பிடித்து விட்டானும். 'ஹோட்டல்' மனேஜர் சந்திரனைச் சரியான ஆட்டு ஆட்டி விட்டேன். ஆளைத் தேடுவது போல அங்குமிங்கும் அலைந்து விட்டுத்தான் வருகிறேன். தரகர் மாமாக்களைக் கண்ணிலேயே காணேம். ஊரெல்லாம் இப்போ என்ன அடிபடுகிறது தெரியுமா?"

"என்ன?"

"இத்தனை செலவையும் ஏற்படுத்திவிட்டு எங்களை இப்படி இவன் ஏமாற்றலாமா?"

அண்ணு சிரித்தார்.

"ஓடாத மாப்பிள்ளை" என்று வீசு கயிறோடு நீங்களும் ஓடியிருக்கிறீர்கள். கழுத்திலே மாட்டி இழுத்து வந்தீர்களா? பவானிகளே கட்டிப்போட்டிருக்கலாமே!"

"பவானியைக் கட்டாமல் வேறு யாரை அவன் கட்டப் போகிறன். காலடியிலேயே விழப் போகிறன் பாரேன்."

பவானியின் வதனத்திலே [illegible]

ஆரோக்கியாமிருதலேஹம்

நேர்வானம்சோத சுகபேதி

S. N. GURU MEDICAL HALL
80, NEW CHETTY STREET COLOMBO

## இலவசம்

உங்களுக்கு நிறைவேற வேண்டிய காரணங்கள் இருக்கின்றதா? என்பதை அறியவேண்டுமானுல இலவச விபரங்களுக்கு எழுதவும்.

பி. எம். திசாநாயக்க,
அருத எண்ணெய் காரியாலயம்
கண்டி ரோட், கள்பனே

தம்பலகமம்

# புராண வயல்களுக்கு கந்தளாய் குளத்து தண்ணீர் கிடையாதாம்

## அரசாங்க அதிபர் கைவிரிப்பு

### அது குடியேற்றவாசிகளுக்கு மட்டுந்தான் என்று வாதாட்டம்

(சுதந்திரன் தம்பலகமம் நிருபர்)

தம்பலகமப் பகுதியிலுள்ள புராண வயல்களுக்கு மாரிப் போகச் செய்கைக்கு கந்தளாய்க் குளத்திலிருந்து தண்ணீர் கொடுக்க முடியாது என்று அரசாங்க அதிபர் கையை விரித்து விட்டார். அந்தக் குளத்தில உள்ள தண்ணீர் அரசாங்கத்தால் அங்கு குடியேற்றப்பட்ட கமக்காரர்களுக்கு மட்டும் தானும்.

தம்பலகமப் பற்றில் வாழும் பல்லாயிரக் கணக்கான தமிழ்ப் பேசும் மக்களின் நல்வாழ்வுக்காகவே குளக்கோட்டன் என்னும் தமிழ் மன்னன் கந்தளாய் நீர்த்தேக்கத்தை அமைத்தான் என்று மேற்படி குளத்தைப் பற்றிக் கூறும் தமிழ் வரலாற்று நூல்கள் கூறுகின்றன. பிரிட்டிஷாரின் ஆட்சிக் காலம் முழுவதும் கந்தளாய் நீர்த்தேக்கத்தின் நீர்ப்பாச்சல் உரிமைகள் யாவும் தம்பலகமப் பகுதி மக்களின் ஏகபோக உரிமைகளாகவே இருந்தும் வந்தன. ஆனல் சுதந்திர ஆட்சியின் கீழ் பிரஸ்தாப குளத்தின் நீர்ப்பாச்சல் உரிமைகள் தலைகீழ்பாடமாக மாறி வருவதுடன் இடையில் வந்த குடியேற்றக்காரர்கள் தம்பலகம பகுதியில் உள்ள புராண வயல்க்காரர்களின் நீர்ப்பாச்சல் உரிமைகள் அனைத்தையும் கபளீகரம் பண்ணித்தமதாக்கிகொள்ளக் கூடிய நிலை ஏற்பட்டு விடுமோ என்று அஞ்ச வேண்டியிருக்கின்றது.

#### கூட்டத்தில் நடந்தது

தம்பலகமம் கிராம நீதி மன்றத்தில் தம்பலகமப் பகுதி வயல் வெளிகளில் மாரிப் போகச் சாகுபடி செய்வதை யிட்டு ஆலோசிக்கும் நோக்கமாக திருமலை அரசாங்க அதிபர் திரு. அன்றன் மெக்கெய்சர் தலைமையில் தீர்மானக் கூட்டம் நடைபெற்றது. அச்சமயம் கூட்டத்தில் சமூகமாக இருந்த கமக்காரர்களும் விவசாயிகளும் தங்களுக்கு மாரிப்போகச் செய்கையின் ஆரம்பக்காலமான உழவு வேலையின் போதிருந்தே கந்தளாய் நீர்த்தேக்கத்தில் இருந்து தண்ணீர் திறந்து தரவேண்டும் என்று அரசாங்க அதிபரிடம் கேட்டுக் கொண்டனர்.

#### அரசாங்க அதிபரின் கையிருப்பு

கமக்காரர்களின் மேற்படி கேள்விக்கு அரசாங்க அதிபர் பதில் அளிக்கையில் தம்பலகமப் பகுதி புராண வயல்களுக்கு மாரிச் செய்கைக்குத் தண்ணீர் தர இயலாதென்றும் மழையை எதிர்பார்த்து மாரிச் செய்கையை ஆரம்பிக்குமாறு கமக்காரர்களுக்காலோசனை கூறினர். எனவே கமக்காரர்களுக்கும் அரசாங்க அதிபருக்குமிடையே மேற்படி தண்ணீர்ப் பிரச்சினையை இட்டு கடும் வாக்குவாதம் மூண்டது. தம்பலகமப் பகுதிப் புராதன வயல்க்காரர்கள் குளத்தில் உள்ள தங்கள் பங்குத் தண்ணீரைச் சென்ற கோடைப் போகத்தில் எடுத்துச் செலவளித்து விட்டார்கள் என்றும் தற்போது நீர்த்தேக்கத்தில் உள்ள தண்ணீர் அரசாங்கத்திற்குச் சொந்தமானதென்றும் ஆகவே குடியேற்ற வாசிகளுக்கு மட்டுமே நீர்த்தேக்கத்தில் இருந்து மாரிப் போகச் செய்கைக்குத் தண்ணீர் விட முடியும் என்றும் தம்பலகமத்துப் புராதன வயல் வெளிக்கு மாரிப் போக உழவு வேலைக்குக் கண்டிப்பாகக் கந்தளாய் நீர்த்தேக்கத்தில் இருந்து தண்ணீர் தர முடியாதென்றும் அரசாங்க அதிபர் கூறினர்.

#### கமக்காரர்களின் வாதம்

அரசாங்க அதிபர் அளித்த பதிலைக் கேட்டு திகைப்புற்ற தம்பலகமப் பகுதிக் கமக்காரர்கள் இவ்வாண்டு மாரிப் போக உழவு வேலைக்கு கந்தளாய் நீர்த்தேக்கத்தில் இருந்து கட்டாயம் தண்ணீர் தந்தே ஆகவேண்டும் என்றும் மழையை எதிர்பார்த்து மாரிச் செய்கையை ஆரம்பித்தால் மாரிச் செய்கை பிர்தி பெரும் நஷ்டம் அடைய வேண்டி ஏறபடுவதுடன் எதிர்வரும் கோடைப் போகச் சாகுபடியும் பாதிக்கப்படும் என்றும், கந்தளாய்க் குளத்தில் இருபத்தைந்து அடிக்குள் உள்ள தண்ணீர் முழுவதும் தங்களுக்கே உரிமையுடையது என்பது அரசாங்கத்திலை ஏற்கனவே ஒப்புக்கொள்ளப்பட்ட விஷயம் என்றும், சென்ற கோடைப்போகத்தில் தாங்கள் மட்டுமின்றி குடியேற்ற வாசிகளும் சந்தளாய் நீர்த்தேக்கத்தில் இருந்தே தண்ணீர் எடுத்துச் செய்தார்கள் என்றும் எனவே தங்களுக்கு மாரிப் போகச் செய்கைக்குக் குளத்தில் இருந்து தண்ணீர் தர வேண்டியது மிகமிக அவசியம் என்று அரசாங்க அதிபருக்கு எடுத்துக் கூறினர்.

#### அரசாங்க அதிபர் பிடிவாதம்

எனினும் அவர்கள் கூற்றை அரசாங்க அதிபர் ஏற்க மறத்ததுடன் பிரஸ்தாப குளத்தில் உள்ள தண்ணீர் உரிமைபற்றித் தம்பலகமப் பகுதிக் கமக்காரர்களுக்கும் அரசாங்கத்திற்கும் இருந்து வரும் ஒப்பந்தப்படி தற்போது குளத்தில் உள்ள தண்ணீர் அரசாங்கத்திற்கே சொந்தமானது என்றும் எனவே கமக்காரர்கள் மழையை எதிர்பார்த்து வேளாண்மைச் செய்கையைச் செய்து பயிராக இருக்கும் போது தண்ணீர்த் தட்டுப்பாடுநேர்ந்தால் தண்ணீர் பெறலாம் என்றும் இப்படித் தரப்படும் தண்ணீர்க்கும் அடுத்த கோடைப் போகத்தில்விடப்படும் தண்ணீர் குறைக்கப்படும் என்று அரசாங்க அதிபர் கூறினர்.

#### ஆதரவற்ற தீர்மானங்கள்

முடிந்தவரையில் தண்ணீர் பாச்சி மிஞ்சியதை ஓடவிட்டு இவ்வளவு காலமும் கந்தளாய நீர்த் தேக்கத்தின் நீரைத் தங்கள் இஷ்டம் போல உபயோகித்து வந்த தம்பலகமப் பகுதிக் கமக்காரர்களும் விவசாயிகளும் அரசாங்க அதிபரின் கண்டிப்பான பேச்சைக் கேட்டு அதிர்ச்சியும் திகைப்பும் அடைந்தவர்களாகக் காணப்பட்டனர்—அரசாங்க அதிபருக்கும் கமக்காரர்களுக்குமிடையே தண்ணீர்ப் பிரச்சினையிட்டு வாக்கு வாதம் வளர்ந்ததேயாயினும் கூட்டம் தொடர்ந்து நடைபெற்றுத் தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன. இடைஇடையே குறுக்கிட்டுப் பேச முயன்ற இளம் கமக்காரர்களை கூட்டத்திற்குப் போதிய கமக்காரர்கள் சமூகமளிக்காததால் உங்களுக்குப் பேச உரிமையில்லை என்று அரசாங்க அதிபர் அவர்களை மடக்கினர். தீர்மானங்களில் பெரும்பாலானவைகள் கமக்காரர்களின் ஆதரவின்றியே நிறைவேற்றப்பட்டன.

#### நடவடிக்கை

கந்தளாய் போட்டன் காடு போன்ற கந்தளாயில் உள்ள புராதன வயல வெளியில் இவ்வாண்டு செய்யப்படும் மாரி வேளாண்மைச் செய்கைக்கு ஆரம்பத்தில் இருந்தே தண்ணீர் விடச் சமீபத்தில் கந்தளாயில் நடைபெற்ற தீர்மானக் கூட்டத்தில் அரசாங்க அதிபர் சம்மதித்திருப்பதாகவும் தம்பலகமத்தில் உள்ள புராண வயல்களுக்கு மட்டுமே தண்ணீர்விட அரசாங்க அதிபர் மறுப்பதாகவும் அறிந்த இங்குள்ள கமக்காரர்கள் தங்கள் தொகுதியில் உள்ள இரு பாராளுமன்றப் பிரதிநிதிகள் மூலமாகவும் இந்தத் தண்ணீர் பிரச்சினைக்கு தக்க பரிகாரம் தேட முயற்சி எடுத்து வருவதாகத் தெரிகின்றது.




"மலர் விழி கண்டால் மான் நாணும் கலையே காதல் கனிரசமே!!...."

என்று சொல்லுப்படி நிலையான அழகு பெற நீங்கள் அணிய வேண்டியது

எலைட் சுப்பர்லோன் ஜோர்ஜெட் ஒன்றே.

எலைட் சுப்பர்லோன் ஜோர்ஜெட்

கண்கவர் ஹை-பை நிறங்களிலும்;
நல்ல பல நவீன டிசைன்களிலும்;
இலங்கை முழுவதிலும் கிடைக்கும்;
குறைந்த விலையில் சிறந்த சேவை புரிவது
எலைட் சுப்பர்லோன் ஜோர்ஜெட் ஒன்றே!

ஒவ்வொரு ஞாயிறு மாலை
நாலு நாற்பத்தைந்திலிருந்து ஐந்து மணிவரை
இலங்கை வானொலி வர்த்தக ஒலிபரப்பில்
குண்டன்மால்ஸ் ஸ்தாபனத்தார் அளிக்கும்
மாலைகீதம் நிகழ்ச்சியைக் கேட்டு மகிழுங்கள்.

★ ★ ★

ஏக விநியோகஸ்தர்கள்:-

குண்டன்மால்ஸ் லிமிட்டெட்,

சில்லறை வியாபாரப் பகுதி: 110 & 114, மெயின் வீதி. கொழும்பு. மொத்த வியாபாரப் பகுதி: [illegible] மெயின் வீதி.

—Mylads 619 60—


### ஒத்தாசை...

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

அவ்வசட்டைக்குப் பிறகு இவ்விஷயத்தைத் தடுக்கக் கூடியவர் மோட்டார் வாகனச் சாரதியே; அவர் தன் வாகனத்தை நிறுத்த முயன்றிருந்தால் விபத்தைத் தவிர்த்திருக்கலாம்; ஆகையால் அவரே குற்றவாளி. ஆனல் அவர் ஒருவளைவால் ஜாக்கிரதையுடன் வருகையில் நடந்திருந்தால் விபத்தைத் தடுக்கும் கடைசி வாய்ப்பு அவருக்கும் இராதாகையால் அச்சந்தர்ப்பத்தில் அவர் நிரபராதியாவார். இவ்வுதாரணங்களால் அறியக் கிடப்பது யாதெனில் சாதாரணமாக வாதியின் ஒத்தாசை உபேட்சை (Coutributory Negligence) ஒரு படிக்குப் பரதவாதமாகத் தோன்றினலும் சூழ் நிலையைப் பொறுத்த சில சந்தர்ப்பங்களில் அது ஒரு போதிய பிரதிவாதமாகமாட்டாதென்பதே. மேற்கூறிய கோட்பாடுகளையும் கொண்டு சூழ் நிலையையும் அவதானித்தே தீர்ப்புக் கூற முடியும்.

### தமிழியக்கம்

(4ம் பக்கத் தொடர்ச்சி)

565 வே சண்முகம், மாத்தளை; 566 ப. பவானி, கொழும்பு-6; 567 கே. கந்தையா, மாத்தளை; 568 மோ. ரொசாரியே, மாத்தளை; 569 ஆ. க மாணிக்கம், வவுனியா; 570 சி. நவசோதியும் சகோதரர்களும், கொழும்பு-14; 571 ரா. மாதவன். 572 வெ. குப்புசாமி; 573, வெ சீரங்கன்; 574 கோ கோவிந்தராசன், 575 ரா. அச்சுதன், 676 இ. தங்கவேலு 577 செ சிவலிங்கம் 578 சி. சின்னரப்பலி, 579 சி. ஆச்சிமுத்து, 580 சி. தங்கையா, உடபாகை தோட்டம்; 581 வி. செகரட்சகல. அளவெட்டி; 582 செ வ. செல்வநாயகம், கரவெட்டி; 583 அ. சிறீ. மகாதேவன். புத்தூர்; 584 பி மொய்தீன் பாட்சா, வவுனியா; 585 வி எம். கணபதி, கொழும்பு-13.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தந்தை கண்முன்...

(11-ம் பக்கத் தொடர்ச்சி)

குண்டாவதுண்டு. கடலில் விழுந்தவர் தன்னால் இயன்ற மட்டும் நீந்துவார். அப்படி அவர் நீந்தும் வன்மை படைத்தவராக விருந்தாலும், தண்ணீரில் நெடுநேரம் இருப்பதால் அவர் பாதங்கள் வெண்மை நிறமடைய சுறுபோன்ற பயங்கர பெரிய மீன்கள் அவரை இரைக்காகத் தின்றுவிடுகின்றன.

### கடற்கரையில் கண்ணீர் விடும் காட்சி

"ஒருமுறை நாலுபேர் சேர்ந்து கடலுக்குப் போனார்கள். சுக்கான் பிடிப்பவர் தோணியின் ஒரு அந்தத்தில் இருந்து சுக்கான் பிடித்துக் கொண்டிருந்தார். காற்றின் வேகம் அதிகரிக்கவே அவர் கடலுள் வீசப்பட்டார். தங்கள் சக தொழிலாளி கடலுக்குள் விழுந்துவிட்டார் என்பதை மற்றவர்கள் அறியுமுன்பே தோணி பல மைல் தூரம் ஓடிவிட்டது. தோணியைத் திருப்பவோ தொழிலாளிக்கு உதவி செய்யவோ முடியாத நிலையில் கரைக்கு வந்து பொலீசாரிடம் முறையிட்டனர். பொங்கிச் சீறி எழும் கடலுக்கு விரோதமாக அவர்களால் என்ன செய்ய முடியும்? விமானங்கள் அனுப்பப்பட்டன. ஆனால் விமானங்கட்கு கூட அவரைத் தேட முடியவில்லை. கடலுள் விழுந்தவர் கரைக்கு மீண்டுவரும் வழக்கமேயில்லை. அவர் தாய் தகப்பன் உற்றார் உறவினர் எல்லோரும் கடற்கரையை நோக்கி ஓடினர்; கண்ணீர்விட்டுப்புலம்பினர்; கத்தினர்-கதறினர். தங்கள் அன்பு மகனை-அருமைச் சகோதரனைப் பலிகொண்ட கடலை வெறுமனே நோக்கிச் சபித்துக் கொண்டிருந்தனர். காற்று மும்முரமாக வீசும் நாட்களில் மீன்பிடி தொழிலாளரின் உற்றார் உறவினர் எல்லாரும் கடற்கரையில் கூடி கண்ணீர் விடும் காட்சி நீர்கொழும்புக் கடற்கரையில் அடிக்கடி நிகழும் காணலாம்.

### பயங்கர கோலத்தில் பிணம்

சனிக்கிழமை காலை 10-மணிக்கு முப்பது நாற்பது மைல்களுக்கு அப்பால் கடலில் விழுந்த தொழிலாளி இறந்து விட்டார் என்று அன்றிரவு நிச்சயிக்கப்பட்டது அவரின் வீடு மரண வீடாகியது மரணச் சடங்குகள் செய்யப்பட்டன நீர்கொழும்பு மக்களின் வழக்கப்படி தொழிலாளியின் உறவினர்கள் கறுப்பு டை தரித்துக் கொண்டனர். இறந்தவரின் சடலம்கூட கிடைக்கவில்லையே என்பதால் கவலை மிக அதிகமாயிற்று. ஞாயிற்றுக்கிழமை காலை தொழிலாளியின் சடலத்தைத் தேடிக் கடற்கரை வழியே பலர் புறப்பட்டனர். கடலில் விழுந்த பலருடைய சடலங்கள் மீன்களால் உண்ணப்படுவதுண்டு. கண் இன்றி; காது இன்றி; கைகால் இன்றி; பல அங்கக் குறைவுகளுடன் பயங்கர கோலத்தோடு விகாரமாக பல சடலங்கள் கரையை அடைவதுமுண்டு சில வேளைகளில் மீன் பிடிக்கப்போடப் பட்டிருக்கும் வலைகளில் சடலங்கள் சிக்கிக் கொள்வதுமுண்டு.

### கடல் கப்டன்

கடலில் விழுந்தவர் நீரோட்டத்தின் திசைக்கு எதிர்க நீந்தினார். பகல் பத்து மணியில் இருந்து மாலை ஐந்து ஆறு மணிவரை பயங்கரமான கடலில் தனது உயிருக்காகப் போராடினார் கடைசியாக அவர் ஒரு வலையில் சிக்கிக் கொண்டார். அவர் நல்ல காலம் வலையில் இருந்த மிதவைக் கட்டையை வாயாற்கவ்வி எடுத்துக் கொண்டு, கரை நோக்கி நீந்தலானார். ஞாயிற்றுக்கிழமை காலை ஒன்பது மணியளவில் கரையை அடைந்த அவர் பேச்சற்று, செயலற்று மயங்கிக் கிடக்கக் காணப்பட்டார். அவர் உயிரோடு கரை சேர்ந்த சம்பவம் இறந்தவர் உயிர் பெற்றெழுந்ததுபோல நகரெங்கும் பரவியது. பத்திரிகையாளர் பல புகைப்படங்களுடன் அவர் பெற்ற அனுபவத்தை பத்திபத்தியாக வெளியிட்டார்கள். "கடல் கப்டன்" என்ற பெயர் சூட்டி அவர் கௌரவிக்கப்பட்டார்.

—(தொடரும்)

[உபயம்: இலங்கை வானொலி]

# என் தம்பி..

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

விஷயங்கள், உலக விவகாரங்கள் எல்லாமே அவர்கள் பேச்சில் அடிபடும். தாயாரும் இந்தச் சர்ச்சைகளில் கலந்து கொள்வார். வாதப் பிரதிவாதங்கள் சண்டப் பிரசண்டமாக முழங்கும். விவாதம் சூடு ஏறப் பேச்சுக் குரல்களும் சுருதி ஏறிவிடும். அரவம் குறைந்த இரவில் அரை மைல் தூரத்துக்குக் கேட்கும் இவர்களது விவாதக் குரல். சற்றுத் தூரத்தில் வசிப்பவர்கள் ஏதோ கலாட்டா என்று எண்ணி ஓடிவந்து, வெறும் தர்க்கம் என்று அறிந்து, சற்றுநேரம் நின்று வேடிக்கை பார்த்துவிட்டுப் போவதும் பலமுறை நிகழ்ந்திருக்கிறது. தடை, விடை, மேற்கோள், ஏது எல்லாம் பிரயோகித்து எந்த விஷயத்தையும் தகர்க்கரீதியாகத் தீர விவாதித்துத் தெளிவு காண்பார்கள். வாரம் இருமுறையாவது வீட்டில் அரசியல் பட்டி மண்டபம் கூடத் தவறியதில்லை.

தந்தையார் பாளையங் கோட்டையில் நடைபெற்ற சைவ சித்தாந்த மகா சமாஜத்துக்குப் போகும் போது வயதுச் சிறுவனாக இருந்த வன்னியசிங்கத்தையும் அழைத்துப் போனார். அதனால், தென்னிந்தியாவின் அப்போது பரபலம் பெற்று விளங்கிய பல பிரமுகர்களையும் சமயநூலறிவிலும் தமிழ் நூலறிவிலும் தலைசிறந்து விளங்கிய சான்றோர்களையும் காணவும் சமாஜத்தில் நிகழ்த்தப்பட்ட சொற்பொழிவுகளைக் கேட்கவும், சமுகந்தந்த பெரியோர்களிற் சிலரோடு பழகவும் பாக்கியம் கிடைத்தது வன்னியசிங்கத்துக்கு.

இலக்கிய, சைவ சித்தாந்த சாசனைகளைக் கேட்டுக் கற்றதை ஆராய்ந்து உறுதிப்படுத்தவும் கல்லாத பல விஷயங்களைப் புதிதாக அறியவும் நிறைய வாய்ப்பு இருந்தது வன்னியசிங்கத்துக்கு. வாரம் இருமுறை கூடும் அரசியல் பட்டி மண்டபம் சிறு வயது முதலே வன்னியசிங்கம் அரசியல் கற்க நல்ல ஒரு பள்ளியாக அமைந்தது.

—(தொடரும்)

# எட்டாவது தமிழ் எழுத்தாளர் மாநாடு

எட்டாவது தமிழ் எழுத்தாளர் மாநாடு 1960 அக்டோபர் 15, 16 ஆகிய இருநாட்களும் சென்னை ராஜாஜி மண்டபத்தில் நடைபெற்றது.

சங்கத் தலைவர் திரு. கா. அப்பாத்துரை தலைமையில், சென்னை உயர் நீதி மன்றத் தலைமை நீதிபதி திரு. பி. வி. ராஜமன்னார் 15-10-60 சனிக்கிழமை மாலை 6-மணிக்கு மாநாட்டை துவக்கி வைத்தார்.

டாக்டர் ராஜா சர். மு. அ. முத்தையா செட்டியார், தமிழுக்குச் சிறப்பாகத் தொண்டாற்றியுள்ள திரு. தெ. பொ. மீனாட்சி சுந்தரனார், திரு. கு. கோதண்டபாணி பிள்ளை, ஆகியோருக்கு சங்கச் சார்பில் கேடயங்கள் வழங்கிச் சிறப்பித்தார்.

16-10-60 ஞாயிறு காலை 9-30 மணிக்கு திரு. அ லெ லின் தலைமையில், 'இருபதாம் நூற்றாண்டில் தமிழ் வளர்ச்சி' பற்றி ஒரு கருத்தரங்கு நடைபெற்றது.

மாலையில் சென்னை சட்ட மன்றத் தலைவர் டாக்டர் யு. கிருஷ்ணராவ் மலையாளத்திலும் தெலுங்கிலும் தமிழ் இலக்கியங்களைச் சிறப்பாக மொழி பெயர்த்துள்ள திரு. வெள்ளிக்குளம் கோபால குருப்புக்கும் திரு சல்லா இராதா கிருஷ்ண சர்மாவுக்கும் பதக்கங்கள் வழங்கிப் பாராட்டு தலினர்.


## வெற்றி முரசு கொட்டும் 2-வது வாரம்!

எல்பின்ஸ்டன் [கொழும்பு] · றெக்ஸி [வெள்ளவத்தை] · வின்ஸர் [யாழ்ப்பாணம்] · கிங்ஸ் [பதுளை] · நெல்சன் [திருகோணமலை]

அசோகமாலா [நீர்கொழும்பு] · இர்பீரியல் [மட்டக்களப்பு] · வேல்ஸ் [கண்டி]



உள்ளத்தை உருக்கும் கதை, உணர்ச்சி மயமான நடிப்பு, காதுக்கினிய பாட்டுகள். இவ்வளவுக்கும் மேலாக சிவாஜியின் நடிப்பு. இத்தனை சிறப்புகளும் நிறைந்த இவ்வாண்டின் சிறந்த படம்.

ஒவ்வொருவரும் குடும்பத்துடன் அவசியம் பார்த்து மகிழவேண்டிய திரைஓவியம்.

நடிகர் திலகம் சிவாஜி கணேசன்—சௌகார் ஜானகி—ரங்கராவ் கண்ணாம்பா—டி. ஆர். ராமச்சந்திரன்—இ வி. சரோஜா—அசோகன் முதலியோர் நடித்த

## படிக்காத மேதை

டைரக்ஷன்: ஏ. பீம்சிங் · கதை வசனம்: கோபால கிருஷ்ணன் · பாடல்கள்: கவிஞர் கண்ணதாசன்

அக்டோபர் 28-ம் தேதி வெள்ளிக்கிழமை தொடக்கம்

கெயிட்டி (கொட்டாஞ்சேனை) மற்றும் 6 திரைகளில்

ஜெமினி கணேசன் — சரோஜாதேவி — தங்கவேலு — டி. கே பகவதி — எம். என். நம்பியார் — ஆர். நாகேந்திரராவ் முதலியோர் நடித்த

## எல்லோரும் இந்நாட்டு மன்னர்

அக்டோபர் 27-ம் தேதி
வியாழக்கிழமை முதல்
குதூகலமான ஆரம்பம்

செண்ட்ரல் (கொழும்பு) · ஓடியன் (கல்கிசை) · ராணி (யாழ்ப்பாணம்)

ராஜேஸ்வரா (மட்டக்களப்பு) · ஜோதி (திருகோணமலை)

லிபேர்ட்டி (பதுளை)

பூமியையே தன் தாய்க்கும் மேலாக நேசிக்கும் ஒரு ஏழை உழவனின் வரலாற்றைச் சித்தரிக்கும் படம்.

வள்ளுவன் புகழ் கூறும் இன்பச் சித்திரம்!
வளமார் உழவனின் சிந்துபாடும் சித்திரம்!

ஒவ்வொரு ஏழை — பணக்காரனும் பார்த்து மகிழவேண்டிய படம்.

ஜெமினி கணேஷன், பத்மினி, ராகினி, பாலையா, சந்திரபாபு, எஸ். வி. சுப்பையா டி. பாலசுப்பிரமணியம், சுகுமாரி, அங்கமுத்து முதலியோர் நடித்த

## பொன்னு விளையும் பூமி

திரைக் கதை—வசனம்: இராம அரங்கண்ணல் · சங்கீதம்: கே. எச். ரெட்டி

பின்னணி பாடியவர்கள்:
சிதம்பரம் ஜெயராமன் — [illegible]
சீர்காழி [illegible]





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# மாணவருக்கு ஒரு சொல்!

[சென்ற வாரத் தொடர்ச்சி]

மாணாக்கர்களில் பல பேர் காலை, காலை இவ்விரண்டிற்குமிடையில் உச்சரிப்பு வேற்றுமை தெரியாதவர்களாய் இருக்கிறார்கள். காலை என்னும் சொல் சூரியோதயத்துக்குப் பிறகு உள்ள நேரத்தைக் குறிக்கிறது. காளை என்னும் சொல் எருதைக் குறிக்கிறது. உச்சரிப்பு வேற்றுமை தெரியாது ஒரு சொல்லுக்குரிய உச்சரிப்பை மற்றொரு சொல்லில் செலுத்திப் பேசுபவர்கள் பலபேர் இருக்கின்றனர். உரக்க வாசித்துப் பழகும் பொழுதே தன் சொல் குற்றம் தனக்கோ அல்லது மற்றவர்களுக்கோ விளங்கும். பள்ளிக்கூடத்தில் எல்லாப் பிள்ளைகளையும் வாசிக்க வைத்துப் பார்ப்பதற்கு ஆசிரியருக்கு அவகாசமில்லை என்றாலும் இரண்டு அல்லது மூன்று மாணாக்கர்களை வாசிக்கும் படித் தூண்டி, வாசிப்பு முறையிலுள்ள குறைகளையும் நிறை நிலையையும் எடுத்துக் காட்டுவது அவசியமாகிறது. ஆங்குக் கேட்டுத் தெரிந்து கொண்டபடி மாணாக்கன் தன் வீட்டில் வாய்விட்டு வாசித்துப் பழகுவது முற்றிலும் அவசியம்.

மாணாக்கன் தனக்கென்று வாசிக்கிற பொழுது ஓசையை அதற்கேற்றபடி அளவெடுத்து வைக்க வேண்டும். பத்துப் பேருக்குக் காதில் விழும்படி படிக்கிற பொழுது ஓசையை அதற்கேற்றவாறு உயர்த்த வேண்டும். நூறு பேர் காதில் விழும்படி படிக்கும் பொழுது குரலை அதற்கேற்றவாறு உயர்த்த வேண்டும். மௌனமாக வாசிப்பது நாப்பழக்கமாகாது. பெருங் கூச்சலிடுவதும் நாப்பழக்கமாகாது. நாவுக்குச் சரியான பயிற்சி கொடுத்திருக்கிறவன் எந்தெந்த இடங்களில் ஓசையை எப்படி உயர்த்த வேண்டும் அல்லது தாழ்த்த வேண்டும் என்பதை அறிந்திருப்பது முற்றிலும் அவசியம். மூன்றாவது மனிதனுக்கு இடையூறு செய்யாது இரண்டு பேர் அந்த மூன்றாம் மனிதனுக்கு அருகிலேயே அடங்கிய குரலில் பேசிப் பழகுவது நல்ல நாப் பயிற்சியாகும். பெருங் கூட்டத்தில் எல்லோருக்கும் கேட்கும்படி உரத்த குரலில் சொற்களைத் தெளிவுறப் பகர்வதும் நல்ல நாப்பயிற்சியாகும். நாள்தோறும் உரக்கப் படித்துப் பழகுதலின் மூலம் இத்தகைய நாவிற்கான பயிற்சிகளைப் பெறுவது மாணாக்கனுக்கு முற்றிலும் அவசியமாகிறது.

வாய்விட்டு உரக்க வாசிக்கும் மாணவர்கள் பொதுப்பட அதிவேகமாக வாசிப்பது வழக்கம், படிப்புத் திறமைக்கு அறிகுறியென்று அது பெரும்பாலும் கருதப்படுகிறது. ஆனால் அப்படி விரைந்து படிப்பது நாப் பழக்கத்துக்கோ கருத்தைக் கிரகிப்பதற்கோ உதவாது. உணவை உண்கிற ஒருவன எவ்வளவு நிதானமாக அதை மென்று விழுங்குகின்றானோ அவ்வளவுக்கு அவ்வுணவு அவனுக்கு நன்கு பயன்படுகிறது. வேகமாக உணவை எடுத்து விழுங்குவதால் ஜீரணக் கருவி வரையில் கெட்டுவிடும். உணவும் உடலில் நன்கு செமிக்காது. உணவை நிதானமாக உண்பது போன்று படிப்பதையும் மிகச் சாவதானமாகச் செய்ய வேண்டும். ஒவ்வொரு சொல்லும் தெளிவுற உச்சரிக்கப்பட வேண்டும். அதற்கு ஒவ்வொரு சொல்லிலும் உள்ள எழுத்துக்களும் சரியாக உச்சரிக்கப்பட வேண்டும். அப்படிச் செய்வதாலேயே சொல் சுத்தம் உண்டாகிறது. வாசகத்தில் ஆங்காங்கிருக்கும் காற்புள்ளி, அரைப்புள்ளி, முக்கால் புள்ளி, முற்றுப்புள்ளி ஆகியவைகளுக்கு ஏற்ற நேரம் கொடுக்க வேண்டும். ஒரு வாக்கியத்தை முடிக்கு முன்பே மற்றொரு வாக்கியத்தைத் துவக்கும் பழக்கம் சரியல்ல ஒலிபரப்பியில் வரும் பேச்சுக்களை மாணாக்கர்கள் அடிக்கடி கேட்கலாம். பேச்சு நிதானமாக இருக்கும் பொழுதே அது கேட்பவர்களால் நன்கு கிரகிக்கப்படுகிறது. விரைந்து பேசுகிற பேச்சு வீண் பேச்சாய்ப் போய்விடுகிறது. உரக்கப் படிக்கும் பொழுது நிதானமாகப் படிக்கிற படிப்பே நாவுக்கு நல்ல பயிற்சியையும் மனதுக்கு நல்ல கருத்தையும் கொடுக்கக் கூடியதாகும்.

—தர்ம சக்கரம்.

வளர்மதி—சுதந்திரன் மாணவர் மன்றத்தில் இருபது வயதுக்குட்பட்ட எல்லோரும் அங்கத்தவர்களாகச் சேரலாம். கீழே பிரசுரிக்கப்பட்டிருக்கும் மனுப்பத்திரத்தைப் பூரணப்படுத்தி அனுப்பவேண்டும். மனுப்பத்திரங்கள் தொடர் இலக்கங்களுடன் பிரசுரிக்கப்படும். வெவ்வேறு இலக்கங்களைக் கொண்ட மூன்று மனுப் பத்திரங்களை "வளர்மதி"யில் அங்கத்தவர்களாகச் சேர விரும்புவோர் பூர்த்தி செய்து "வளர்மதி" C/o சுதந்திரன், தபால் பெட்டி இலக்கம் 1183, கொழும்பு 12 என்ற விலாசத்திற்கு அனுப்பி வைக்க வேண்டும். இப்படிச் செய்வோர் பெயர்கள் வளர்மதியில் வெளியிடப்படுவதுடன் அவர்களுக்கு அங்கத்தவர் இலக்கமும் கொடுக்கப்படும்.

## வளர்மதி
### சுதந்திரன் மாணவர் மன்றம்
### அங்கத்தவர் மனுப்பத்திரம்

இல. 3.

பெயர் ..............................

பாடசாலை ..............................

விலாசம் ..............................

..............................

.............................. ..............................
பெற்றோர் அல்லது ஆசிரியர் கையொப்பம் கையொப்பம்

நிமிஷக் கதை:

## கொலை! கொலை!!

வானத்திலே வான்மதி சிரித்துக் கொண்டேயிருந்தான். நேரம்—சரியாகப் பத்து மணியிருக்கலாம். முருகன் அந்தத் தோட்டத்து வரம்பால் நடந்து கொண்டேயிருந்தான். திடீரென்று திகைத்தான். நின்றான். யாரோ அவன் சொந்தக்காரன் பொன்னனின் தோட்டத்தில் கத்தரிக்காய் திருடுவது போல் தெரிந்தது அப்பொழுதுதான் அவனுக்கு அந்தத் தோட்டத்தில் இதற்கு முன்னர் நடந்த களவுகளின் ஞாபகம் உதித்தது அவனுக்குத் தைரியம் பிறந்தது. பக்கத்திலே கிடந்த பூவரசம் கட்டையைக் கையிலே தூக்கினான்.

ஒரு முறை போல் இருமுறை பலத்து இருமினான் கத்தரித் திருடனை நோக்கி நடந்தான். திருடன் அப்படியே அசையாமல் நிற்பது போல் தெரிந்தது முருகனின் உள்ளத்திலே பயம் கிளர்ந்தது. நடை தளர்ந்தது. பேய் பிசாசோ என்று கூட எண்ணினான், உடலெல்லாம் வியர்த்தது உள்ளம் நடுங்கியது துணிவு பின் வாங்கியது. பயம் முன் வாங்கியது. ஓடுவதற்குக் கூட முடியவல்லை. இன்னும் கிட்டே நெருங்கினான் திருடன் அணிந்திருந்த வெண்ணிற ஆடையும் அவன் கண்களில் பட்டது. அவன் தன்னை நோக்கி யுத்த பிரசண்டனைப் புராதன வீரர்களைப்போன்று கையில் பிடித்த வில்லிலே அம்பைத் தொடுத்து தன் நெஞ்சை நோக்கிக் குறி பார்த்து நிற்பதும் தெரிந்தது.

கால்கள் பயத்தால் அபிநயம் பிடித்து நடனமாட முற்பட்டன. நடுங்கிப் பூகம்பமேற்படும் அவன் வாயில் சலசல தெறிக்கும் சினிமா வசனங்கள் வெடித்தன. பறந்தன ஒன்றிறகும் திருடன் அசைவதாகத் தெரியவில்லை. இன்னும் பொறுத்தால் தனனுயிருக்கே ஆபத்து என்றுணர்ந்தான். துணிந்தான. பொங்கி எழுந்தான். கண்களை இறுக்கி மூடிக்கொண்டு திருடனின் தலையில் தடியால மொங்கினான். மண்டை இரண்டாகப் பிளந்தது. திருடனுக்கு அடி நோகவில்லைப போலும்—வாய் திறந்து சத்தம் கூடப் போடவில்லை—அப்படியே பிணமாக பூமாதேவியின் மடிமீது சாய்ந்தான்

முருகன் மகா கெட்டிக்காரன்தான். திருடன் பிணமானவுடன் அவனுக்கும் பயம் இரட்டித்தது. ஐயோ கொலை கொலை!! என்று தொண்டை கிழியக் கத்தி [illegible] வந்தான். முருகனைக் கண்டான். தனது கத்தரி வெருளியைக் கொலை செய்ததற்காக முருகனை நையப் புடைத்தான்.

—அ. இராசதுரை.

வள்ளுவர் குறள் 36

## பொன்றுந் துணை

மனத்தில் மாசு இல்லாத வகை — பொறாமை ஆசை சினம் கடுஞ்சொல் ஆகிய குற்றங்களுக்கு இடங் கொடாத வகை— ஒழுகுதல் அறம். 'அவ்வறத்தை, எக்காரணங் கொண்டும் இடைவிடாமற் செய்ய வேண்டும்' என்று முன்பு கூறிய வள்ளுவர், பின்பு, இங்கே கூறும் குறளுக்குச் செவி கொடுப்போம்:

"அன்றறிவாம் என்னாது அறஞ் செய்க; மற்று அது
பொன்றுங்கால் பொன்றுத் துணை"

'நாம் இப்போது இளைஞராக இருக்கின்றோம். ஆதலினால், இப்போது தொடங்கியே எதற்காக அவசரப்பட்டு அறத்தினைச் செய்ய வேண்டும்? பிறகு,பிற்காலத்தில் பார்த்துக் கொள்ளலாமே' என்று எண்ணலாமா? எண்ணி, அறத்தினைச் செய்யாது தவணையிடலாமா? 'கூடாது' என்கிறார் பெருநாவலர்.

'நாம் எப்போது இறந்து படுவோம் என்பது எமக்குத் தெரியாதே ஆதலினால், இளைஞராக இருக்கும் நாம், பிற்காலத்திற் பார்த்துக் கொள்வோம்' என்று எண்ணக்கூடாது, இப்போதே தொடங்கி இடைவிடாது செய்ய வேண்டும். அப்போதுதான் அவ்வறமானது. உடல் அழியுங் காலத்தில் பொன்றாத—அழியாத—துணையாகும் அறத்தினூங்கு ஆக்கம் இல்லை.

## வளர்மதி புதிய மருமக்கள்

3155 வ. சிவபாலன், காரைநகர்.
3156 ஆர். எஸ். சந்திரா, உரும்பிராய்.
3157 கணபதி தம்பித்துரை, இணுவில்.
3158 சி. காயாம்பு, நுவரெலியா.
3159 செல்வி மா. பாடத்தி, நுவரெலியா.
3160 பி. கணேசலிங்கம், அலவாய்.
3161 வி. அருணாசலம், மாத்தளை.
3162 செல்வி தனபாக்கியவதி, தெல்லிப்பழை.
3163 செ. சந்திரசேகரம், ஆறைப்பற்றை 3-ம் குறிச்சி.
3164 கி. செல்லையா, செம்பியன்பற்று.
3165 பெ. சின்னத்தம்பி, புத்தூர்.
3166 செ. விஜயானந்தன், இணுவில் தெற்கு.
3167 ஏ. எல். காலித்தீன், அக்கரைப்பற்று 3-ம் குறிச்சி.
3168 செல்வி ஏ. எச். சித்தி பாத்துமா, வதுளை.
3169 செல்வி சண்முகநாதன் கமலேஸ்வரி, காங்கேசன்துறை
3170 ரஞ்சித் சிங்கநாயகம், கொழும்பு-6.
3171 செல்வி மும்தாஜ் மஹால், மாத்தளை.
3172 செல்வி பாப்பா ரஞ்சித நாயகி, புளியங்குளம்.
3173 கோ. இராமச்சந்திரன், யாழ்ப்பாணம்.
3174 கே எம். கபிரியேற்பிள்ளை, இளமருதங்குளம்.
3175 செல்வி கு இராஜேஸ்வரி, கோளாவில்.
3176 ஜே. ஜேசுமணி ராஜன், மட்டக்களப்பு
3177 தயா தம்பிராசா, உரும்பிராய.
3178 செல்வி இரின் டடலிகுலுநு, தூவலை.
3179 அ. வ. ஸ். த. அன்றனி, மருதானை.

## பொறுமை

கோபம் குடி கெடுக்கும். அதையுடையவன் அழிவான். அவனுக்குத் தான செய்வது எப்படிப்பட்டதென்று தெரியாத. தீமையை உண்டு பண்ணும் ஒருவகை வெறியே கோபம். கோபத்தில் ஒன்றைப் பேசிவிட்டுப் பின் வருந்துவோர் பலர். தரையிலடிப்பவன் கை தப்பாது தரையிற்பட்டு அந்தக் கைக்கே துன்பங் கொடுப்பது போல கோபமும் தன்னையுடையவனைத் துன்புறுத்திக் கெடுத்தேவிடும். அவனைச் சேர்ந்தவர்களும் கெடுவர். ஆதலால் ஒருவன் தனக்குப் பழி பாவம் வேண்டாம் என்று தன்னைக் காத்துக்கொள்ள வேண்டுமாயின் கோபத்தை அடக்கி அகற்றிவிட வேண்டும். கோபிக்கிறவனிடம் மகிழ்ச்சியும், சிரிப்பும் காணல் முடியாது.

ஒருவன், தன்னிலும் மேலான செல்வம், பலம் உடையவர்களிடம் கோபம் காட்டினால் அதன் தீயபயனை உடனே அவர்களின் பகைமையினால் அடைந்து விடுவான். கீழானவர்களிடம் கோபத்தால் பழியும் பாவமும் அடைந்து தெய்வத்தால் தீமையடைவது ஒரு வகை. பிறர் நமக்குத் தீமை செய்தாலும் நாம் கோபப்படாமல் பொறுத்துக் கொண்டிருந்தால் கடவுள் அத்தீமை செய்தாரைத் தண்டித்து நம்மைக் காப்பாற்றுவார் நாம் பகை அடையமாட்டோம். நம் காரியத்திற்கு ஒரு இடையூறும் ஏற்படாது. மேலும், மேலும் நாம் விருத்திக்கு வருவோம்.

"பொறுத்தார் பூமியாள்வார்" என்பது பழமொழி. யார் என்ன சொன்னாலும், எத்தீமை செய்தாலும் நாம் பொறுத்துக்கொண்டு நம் காரியத்தில் கண்ணுங்கருத்துமாக இருப்பது நல்லது. பொறுமையுள்ளவனுக்குப் பகையும் தீங்கும் கிடையா. யாவரும் 'நல்லவன் என்று அவனைப் புகழ்வர். பிறர் அடையும் உயர்வைக் கண்டு நாம் மனம் எரியக் கூடாது. அங்ஙனம் பொறாமைப்படுகிறவன் குடியுடன் கெடுவான். குறுகிய அறிவுள்ள மூடன்தான பிறர் வாழ்வு கண்டு பொறாது வருந்துவான். யாருடைய பொருளுக்கும் நாம் ஆசைபடக் கூடாது. ஆயிரம் வருவதாகவிருந்தாலும் பிறர் பொருள் நமக்கு வேண்டியதில்லை. நம்முடைய காசு ஒன்றுக்குப் பிறனுடைய காசு ஆயிரமும் ஈடாகாது. ஆசை தான் மனிதர் வாழ்வைக் கெடுத்து அவர்களைத் தீய வழியில் செலுத்துகிறது.

ஒருவன் எல்லோரிடத்தும் அன்பாகவிருந்தால் அவன் செய்வதும் சொல்வதும் குற்றமாகத் தோன்றா. இன்பமும் அறமும் அன்பினால் அடையலாம். பிறர் துன்பங் கண்டவிடத்துப் பார்த்திராது தன் துயரம் போல் நினைத்து அகற்றும் அருளுடைமை அவ்வன்பின் முதிர்ச்சியால் உண்டாகும்.

—ஏ. வர்ணன் திருகோணமலை.

3180 த. விஜயகோபால், வடடுகோட்டை.
3181 செல்வி நாகபூஷணி கதிரவேலு, உரும்பராய்.
3182 த. சோமசுந்தரம், பசறை
3183 க. பரமசிவம், புசல்லாவை.
3184 வி. ஜெயஸ்ரீ, உரும்பிராய.
3135 முத்துமணி முத்துவேலு உரும்பிராய்.
3186 சந்தையா தேவகுஞ்சர், சாவறநகர்.
3187 செல்வி நஸீமா ஜெமால்தீன், கல்ஹின்னை.
3188 அ நாகலிங்கம், காத்தான்குடி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கழகச் செய்திகள்

## அகில இலங்கை தமிழ் மொழி இயக்கம்

"ஈழநாட்டில் தமிழ் மொழி வாழுமா" அன்றேல் தாழுமா? என்ற அவல நிலையில் இருக்கின்ற இந்நேரத்தில் தமிழ் பேசும் மக்கள் தங்கள் தாய் மொழியில் அக்கறை கொள்ளாதிருப்பது வருத்தம் தரக்கூடிய செயலாகும்'

இவ்வாறு 9-10-60-ல் யாழ்ப்பாணத்தில் அகில இலங்கைத் தமிழ் மொழி இயக்கக் கூட்டத்தில் பேசிய திரு. சி சிவரத்தினம் குறிப்பிட்டார்.

திரு. சிவரத்தினம் தொடர்ந்து பேசுகையில்: 1956-ல் நிறைவேற்றப்பட்ட தனிச் சிங்களச் சட்டம் தனது சுயரூபத்தைக் காட்டத் தொடங்கியிருக்கிறது. அடுத்த ஆண்டு முதல் சர்வமும் சிங்களமயமாகப் போகின்றது. இவ்வேளையிலாகுதல் தமிழ் மொழியின் நிலையை நாம் உணர்ந்து நடக்க வேண்டாமா? சிங்கள மக்கள் தங்கள் தாய் மொழியை அரசாங்கத்துடன் உபயோகிக்கின்ற அளவு தமிழ் மக்கள் உபயோகிக்கப் பின்னிற்பதன் மர்மம் என்ன என்பது புலனாகவில்லை என்று கூறினார்.

இக்கூட்டத்திற்கு திரு. க. சத்தியானந்தசிவம் தலைமை வகித்தார்.

பின்வரும் தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன.

(1) தமிழ்ப் பிரதிநிதிகள் யாவரும் அரசாங்கத்துடன் தமிழில் தொடர்பு கொள்ள முன் வர வேண்டும்.

(2) தமிழ்ப்பிரதேசத்தின் பழம் பெரும் பதியாகிய யாழ்ப்பாண நகர் மாநகர சபை நடவடிக்கைகள் சகலதும் தமிழ் மொழியில் செய்ய வேண்டுமெனக் கேட்டுக்கொள்வல்

(3) திரு. க சொக்கலிங்கம், கலைக் கழகம் நடாத்திய நாடகப் போட்டியில் முதல் பரிசு பெற்றமைக்குப் பாராட்டுத் தெரிவித்தல்.

—

## நெடுந்தீவு முத்தமிழ் கழகம்

நெடுந்தீவு முத்தமிழ் கழக அங்குரார்ப்பணக் கூட்டம் கடந்த 25—9—60—ல் கொழும்பு விவேகானந்த வித்தியாசாலை மண்டபத்தில் கூடியது. இக்கழகம் தமிழ் மொழியின் ஆக்கம் கருதியும், தீவு மக்களின் கலையார்வத்தைத் தூண்டுவதற்கும் அவர்களின் கல்வி நிலை, ஒழுக்க நிலை இவைகளைச் செம்மையுறுவதற்கேற்ற வாய்ப்புக்களை உண்டாக்குவதற்கும் உழைக்கும். இதற்காக, சொற்பொழிவுகள், விழாக்கள், நாடகங்கள் முதலியவற்றை ஒழுங்கு செய்து நடாத்தும். இதையொட்டி எதிர் வரும் 1961-ம் வருடம் சித்திரைத் திங்களில் முத்தமிழ் விழாவொன்றும் நடாத்துவதற்கும் இக்கழகம் தீர்மானித்துள்ளது.

பின் வருபவர்கள் இக்கழகத்தின் நிர்வாகிகளாகத் தெரிவு செய்யட்டுள்ளனர்:—

தலைவர்: கிராமச் சங்கத் தலைவர் திரு. ம. கணபதிப்பிள்ளை உபதலைவர்கள்: திரு. வி. சுப்பிரமணியம், திரு. இரா. சின்னத்தம்பி, பொதுச் செயலாளர்: திரு. வ. குமாரசுவாமி, இணைச் செயலாளர்கள், திருவாளர்கள் ஐ. நடராசா, நா. பொன்னம்பலம், ச. முத்துத்தம்பி, பொருளாளர்: திரு கு. புண்ணியமூர்த்தி பரிசோதகர்: திரு. க. பத்மநாதன், அங்கத்தவர்கள்: திருவாளர்கள், வ. சுவாமிநாதன், ஐ. இரத்தினம், எம். மரியாம்பிள்ளை, அ. சவரிமுத்து, வ. சங்கரப்பிள்ளை, டி. சுவாம்பிள்ளை.

—

## செபஸ்டியன் கல்லூரி தமிழ் மன்றம்

"தேச விடுதலைக்காகவும், அச்சந்தவிர்ந்து திடவாழ்வுக்காகவும், சுதந்திர நாட்டுக்காகவும் சிறியோர் பெரியோர் எளிதில் விளங்கக் கூடியதாகவும் புரட்சிக் கவிபாடிய கவிஞன் பாரதியின் விழாவினைக் கொண்டாட வேண்டும். அப்போதுதான் நாமும் நமது நாடும் முன்னேற முடியும்"

இவ்வாறு கொழும்பு தட்டாரத்தெரு சென்ட் செபஸ்டியன் கல்லூரித் தமிழ் மன்றத்தின் சார்பில் வித்துவான மு. கணபதிப்பிள்ளையின் தலைமையில் கொண்டாடிய பாரதி விழாவின் போது சுதந்திரன் ஆசிரியர் திரு. எஸ் டி. சிவநாயகம் பேசுகையில் கூறினார்.

கணபதி வித்தியாலயத் தலைமை ஆசிரியர் வித்துவான் இ. சி. சோதிநாதன் பேசுகையில் தமிழ்ப் பற்றும் அம்மை விலக்கறுத்தவரும் தேச விடுதலைக் கவிஞனும் பாரதி, குயில், கிளி, முகில், மழை முதலியவற்றின் மூலம் உணர்ச்சிப்பெருக்கத்தற்காக கவிதைகளைப் புனைந்து புரட்சி யூட்டிய கவிஞன்" என்றார்.

"வசன இலக்கியங்களையும் பாப்பாப்பாட்டுகளையும் பாடிய பாரதியார் மறுமலர்ச்சிக் கவிஞனைகவும், வீரனாகவும் வாழ்ந்து, மக்களின் விடுதலையே தேசத்தின் விடுதலை என்பதையும், பாஞ்சாலி சபத மூலம் பாரத மாதாவின் இன்னல்களையும் எடுத்தோதிய கவிஞர் பாரதியாரைப் பற்றி நாம் அறிய வேண்டியது அவசியம்" என்று ஆசிரியர் கா. சின்னத்தம்பி கூறினார்.

கல்லூரி மாணவிகளின் தமிழ்த்தாய் வணக்கத்துடன் ஆரம்பமாகிய இவ் விழாவில் செல்வன் வி. அற்புதராஜ் "பாரதியும் நாமும்" என்றும் விடயம் பற்றிப் பேசினார். கல்லூரி ஆசிரியர் திரு. சபாரத்தினத்தின் நன்றியுரையுடன் விழா முடிற்றது.

—

## சைவத் தமிழ் வித்தியாசாலை

உரும்பராய் சைவத்தமிழ் வித்தியாசாலைப் பெற்றோர் ஆசிரியர் சங்கக் கூட்டம் அணிமையில் சங்கத் தலைவர் திரு. அ இளையதம்பி தலைமையில் பாடசாலை மண்டபத்தில் கூடியது.

உதவி நன்கொடை பெறும் பாடசாலைகளை அரசாங்கம் எடுக்க உத்தேசித்திருப்பதையிட்டு கூட்டத்தில் பேசிய பலரும் வன்மையாகக் கண்டித்துப் பேசினர் சமயக் கல்வி, தமிழ் மொழி, அந்தஸ்து இதனுற் பாதிக்கப்படும் என்றும், பொதுவாக கல்வித் தரம் குறையும் என்றும், எனவே உதவி நன்கொடை பெறும் பாடசாலைகளை அரசாங்கம் எடுக்க உத்தேசித்திருப்பதை இப்பெற்றோர் ஆசிர் சங்கம் வன்மையாக கண்டிக்கிறதென்றும், இத்தீர்மானத்தை கல்வி மந்திரி, வித்தியாதிபதி, பாராளுமன்றப் பிரதிநிதி ஆகியோர்களுக்கும் அனுப்[illegible]தென்றும் [illegible] தீர்மானிக்கப்பட்டது.

## தமிழ் இலக்கிய சங்கம்

கொழும்பு, கொட்டாஞ்சேனை, புனித பெனடிக்ற் கல்லூரித் தமிழ் இலக்கிய சங்கத்தின் பதினைந்தாம் ஆண்டு விழா, மேற்படிக் கல்லூரி மண்டபத்தில் அணிமையில் நடைபெற்ற முத்தமிழ்ப் போட்டியில் பரிசு பெற்றோர் விவரம் வருமாறு:—

கட்டுரைப் போட்டி: மேற்பிரிவு திரு. எஸ். வி இறெஜி வேதநாயகம், திரு. எஸ் விமலநாதன், திரு. க. தியாகராஜா.

பேச்சுப்போட்டி: மேற்பிரிவு திரு. சி. கண்ணன், திரு. நா. ஹரிரத்தினஜோதி, திரு. எஸ். கந்தநாதன், நடுப்பிரிவு: செல்வன் பி. சந்திரசேகர், செல்வன் க. காந்தன், செல்வன் சத்தியராஜா வேதநாயாம். கீழ்ப்பிரிவு: செல்வன் கிளறன்ஸ் சேவியர், செல்வன் சோ. சசிதரன், செல்வன் க. ஸ்ரீகாந்தன்.

இன்னிசைப் போட்டி: மேற்பிரிவு:— திரு நா. ஹரிரத்தினஜோதி, திரு. இருஸ்தி தியாகராஜ, திரு. செறன்ஸ் சேவியர். நடுப்பிரிவு: செல்வன் கே. வசந்தகுமாமர், செல்வன் கோபிநாத், செல்வன் விக்டர் டீ ரேஸ். கீழ்ப்பிரிவு: செல்வன் இரா. ஸ்ரீராம், செல்வன் பெனில்டஸ் ரொட்றிகோ, செல்வன் க. சூரியகுமார்.

## சமூக முன்னேற்றச் சங்கம்

நெடுந்தீவு சமூக முன்னேற்றச் சங்க அங்கத்தினர் கூட்டம் கடந்த 9-10-60 விவேகானந்த மண்டபத்தில் திரு. சி. வ. பொன்னம்பலம் தலைமையில் கூடியது. அவ்வமயம் திரு. ஆ. பாக்கியநாதன் திரு. வ. த. கந்தையா, திரு. அ. யோ. சத்தியபால் திரு. சு. சோமசுந்தரம் முதலானோர் சங்க வளர்ச்சி பற்றிப் பேசினார்கள்.

சங்கச் செயலாளர் திரு. சு. கணபதிப்பிள்ளை பேசுகையில் சங்க மூலமாக நெடுந்தீவு தேவைகள் பற்றி அரசாங்கத்திடம் விண்ணப்பிப்பதாகவும் கூறி, சங்க விஷயங்கள் எல்லாம் தமிழில் நடத்துவதென்றும் எல்லோரும் சமூக முன்னேற்றம் கருதி அரசாங்கத்தோடு கடிதங்களை தமிழில் எழுத வேண்டும் என்றும் அங்கத்தவரின் கரகோஷத்துக்கிடையே கூறி முடித்தார்.

—

## வள்ளுவர் மன்றம்

தெனிவத்தை வள்ளுவர் மன்றத்தின் தேர்தல் கூட்டம் கடந்த 6-10-60-ல் திரு. வீர. தங்கவேல் தலைமையில் நடைபெற்றது. கீழ்க்கண்டவர்கள் நடப்பு வருட நிர்வாகிகளாகத் தெரிவு செய்யப்பட்டனர்:—

தலைவர்: வீர. சுப்பிரமணியம், உபதலைவர்: வீ. ஆ. வீரையா, செயலாளர்: இரா. இராமசாமி, துணைச் செயலாளர்: நா. சுப்பிரமணியம், பொருளாளர்: மா. இராமசாமி, துணைப் பொருளாளர்: தே. இராமநாதன். முன்னுள் செயலாளர் பெ. வீரமுத்து நன்றி கூறினார்.

—

## நிகரை மாணவர் மன்றம்

சங்கானை நிகரை மாணவர் மன்றத்தின் வருடாந்த விளையாட்டுப்போட்டி. அணிமையில் சங்கானை நிகரை வயிரவராலய வீதியில் அமையப் பெற்ற விளையாட்டு மைதானத்தில் பட்டின சபைத் தலைவர் திரு. நா. முத்தையா தலைமையில் நடைபெற்றது.

தங்கள் வாழ்க்கை முழுவதையும் தாய் நாட்டின் விடுதலைக்காக அர்ப்பணித்த மகாத்மா காந்தி, சுப்பிரமணிய பாரதியார் ஆகிய இரு பெரியார்களின் நாமத்தை இரு இல்லங்கட்கும் சூட்டியதை வரவேற்க வேண்டுமென்றும், இப் பேர்ப்பட்ட விளையாட்டுப் போட்டி நடாத்துவதினலே மாணவர் சமுதாயத்தில் ஒற்றுமை நிலவ வேண்டுமென்றும் மன்றக் கொடியை ஏற்றிவைத்த பட்டின சபைத் தலைவர் குறிப்பிட்டார்.

காந்தி இல்லமும், பாரதி இல்லமும் பலத்த போட்டியில் நின்று ஈற்றில் காந்தி இல்லம் அதிக புள்ளிகளைப் பெற்று வெற்றி பெற்று வெற்றிக் கிண்ணத்தைக் கைப்பற்றியது.

—

## சைவ மாணவர் கழகம்

அல்வாய் தெற்கு சைவப் பிரகாச வித்தியாசாலை சைவமாணவர்கழகத்தின் சார்பில் நவராத்திரி கலைவிழா கடந்த 21-9-60-ல் மேற்படி வித்தியாசாலை மண்டபத்தில் வித்தியாசாலைத் தலைமையாசிரியர் திரு. க. சதாசிவம் தலைமையில் நடைபெற்றது.

# 61-ல் எதிர்நோக்குகிறது...

(2ம் பக்கத் தொடர்ச்சி)

நிலையும் கூட தமிழ் பேசும் இனத்தின் சிந்தனையிலும் செயலிலும் தான் பெரிதும் தங்கி இருக்கிறது. இந்தப் பேருண்மையை இன்னும் பலர் உணர மறுப்பது வருத்தத்துக் குரியது. "எல்லாம் தமிழில் செய்தே எம் வாழ்வாம் தமிழைக் காப்போம்" என யாம் அனைவரும் உறுதிபூண்டு இன்று தொட்டே அரசாங்க அலுவலகங்கள் அனைத்தோடும் மற்றும் ஏனைய வணிக, உள்ளூராட்சி மன்றங்களோடும் வைக்கும் தொடர்புகள் அனைத்தையும் தமிழிலே வைப்போமாயின் அரசாங்கம் தொடர்ந்தும் தமிழர்களை அரசாங்க அலுவலகங்களில் வைத்திருக்கும் நிலையை உருவாக்குவோம். இது தவறின் சிங்களவர் தமிழ் கற்று அரசாங்க அலுவல்களை தமிழில் நடாத்த வேண்டி நேரிடும்.

மேலே குறித்த இரண்டிற்கும் அரசாங்கம் ஈந்து கொடுக்க மறுக்கின் நாடு இரண்டாகப் பிரிவதை எவரும் தவிர்க்கவோ, தடுக்கவோ முடியாது கூட்டாட்சி அடிப்படையில்நாட்டில் நல்லாட்சி நிலவுவதே யாம் விரும்பத்தக்கது. எனினும் ஒரு தனி இனம் எமக்கென்று ஒரு தனிப பண்பு— தனிக் கலை, தனி வாழ்வியல் முறை உண்டு என்பதனையும் சிங்கள அரசாங்கம் ஏற்க மறுக்கின் எம் இனம் எம் தன்பண்போடு வாழ்வதற்காக யாம் பிரிவினையையும் (Separation) வரவேற்றே யாக வேண்டும் வேறு சொற்களில் விளம்பின் மருந்தளவும் செங்குருதி சிந்தாது செயல் முறையில் [illegible] டத்தை எதிர்க்கும் மாபெரும் [illegible] "எல்லாம் தமிழ் இயக்கம்" என்பதை நம் சிந்தையில் பதித்தல் வேண்டும்.

இதையொட்டி ஒரு முக்கிய குறிப்பை ஈண்டு குறிப்பிடுதல் நலம். இன்று ஒரு சில அரசாங்க அலுவலகங்களில் மட்டும்தான் விண்ணப்பத்தாள்கள், (Application forms) அறிக்கைகள (Notices) முதலியன தமிழில் உள்ளன. ஆதலால் அரசாங்கத்தோடு தமிழில் தொடர்பு கொள்ளுகின்ற ஒவ்வொரு தமிழ் பேசும் மகனும் தனக்குத் தமிழில் விண்ணப்பத்தாள்கள் அறிக்கைகள் முதலியன வேண்டுமென வேண்டுகோள் விடுக்க வேண்டும். அப்பொழுதுதான் அவ்வலுவலகங்களில் உள்ள தமிழ் ஊழியர் தம் மேலதிகாரிகளை "தமிழில் விண்ணப்பத்தாள்கள் வேண்டுமென மக்கள் கோருகின்றனர்" என்று கூறி அவற்றைப் பதிப்பிக்க ஒழுங்கு செய்ய முடியும். குறிப்பாக செலாவணிக் கட்டுப் பாட்டுப் பகுதியோடு (Exchange Control Department) தொடர்பு கொளபவர்கள் 100க்கு 80 விழுக்காடு (வீதம்) தமிழர், ஆனல் அங்கு இப்போத இருக்கும் விண்ணப்பத்தாள்கள் ஆங்கிலத்தில் மட்டும் தான் உண்டு. இதை மாற்றியமைக்கும் ஆற்றல் தமிழ் பேசும் மக்களின் விழிதல் அறிடா வேண்டுகோளி லயே தங்கியிருக்கிறது. "கேளுங்கள் கொடுக்கப்படும்" என்ற விவிலிய நூலில் காணப்படும் விழுமிய கூற்றும் "தீதும் நன்றும் பிறர்தர வாரா" என்று புறநானூறு புகட்டும் கருத்தும் எமக்கு நல்வழி காட்டட்டும்.

## தமிழ் அரசுக் கட்சியின் தலையாய கடன்

இனி இறுதியில் தமிழ் பேசும் இனத்தின் தனிப்பேர் அரசியல் இயக்கமாயும் அன்னரின் உள்ளம் நிறை ஆதரவையும், நம்பிக்கையையும் பெற்றிருப்பதுமான தமிழ் அரசுக் கட்சியின் பணிகள் யாவை என்பதை ஈண்டு சிந்தித்தல் நலம். எந்த ஒரு அரசியல் இயக்கமும் எடுத்த எடுப்பில் நேரடி நடவடிக்கையில் இறங்கி உள்ளதையும் இழக்கக் கூடாது என்பது அனைவரும் ஏற்கத்தக்க அறிவுடைய கருத்தாகும்.

இனியும் காலம் தாழ்த்தாது இன்று தொட்டே ஆயிரக் கணக்கான அங்கத்தவர்களை தன்பால் இழுத்து ஒரு பலம் வாய்த்த இயக்கமாக வளர்ச்சியுற தமிழரசுக் கட்சி முயல வேண்டும். கண்ணியம், கடமை, கட்டுப்பாடு ஆகிய அரும் பெரும் பண்புகளை தன் ஒவ்வொரு தொண்டர் உள்ளத்திலும் ஆழப்பதிக்க வேண்டும். இவற்றேடு நில்லாது அறத்தின் வழி நின்று அன்புநிறை உள்ளத்தோடு சிங்கள அரசாங்கத்துடன் உடனடியாக பேச்சு வார்த்தைகள் நடாத்தி எமது கொள்கையை தெளிவுற விளக்குவது மிக மிக அவசியம். இவற்றேடு சிங்களப் பொது மக்களுக்கு எம் நிலைமையை விளக்கி பல்லாயிரக்கணக்கில் துண்டு அறிக்கைகளை வெளியிட்டுப் பரப்ப வேண்டும். இதன் பின்பும்சிங்கள அரசாங்கமும், சிங்கள மக்களும் எம் கொள்கையை ஏற்க—எம் உள்ளத்தை உணர மறுக்கின் "சொல்லப் பயன் படுவர் சான்றோர் கரும்பு போல் கொல்லப் பயன் படும் கீழ்" என்ற வள்ளுவர் வாய் மொழியை நினைவில் வைத்து "செய் அல்லது செத்துமடி" (Do or Die) என்று காந்தியடிகள் செப்பிய செவ்வுரையை நெஞ்சில் நிலையாகப் பதித்து நேரடி நடவடிக்கையில் குதித்தேயாக வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பொழுது வெற்றிகரமாக
காண்பிக்கப்படுகிறது!

கிங்ஸ்லி [கொழும்பு] பிளாஸா [வெள்ளவத்தை] நவா [குப்பனித்தெரு] வெலிங்டன் [யாழ்ப்பாணம்]

மனோகரா [யாழ்ப்பாணம்] விஜயா [மட்டக்களப்பு] லக்ஷ்மி [இரத்தினபுரி] விஜிதா [மஸ்கேலியா]

சம்ரொக் [வென்னப்புவ] ஸ்ரீகிருஷ்ணா [திருகோணமலை] மொடர்ன் [பதுளை] மொடர்ன் [பண்டாரவளை]

தீவொளி [நுவரெலியா] ஜெமினி [ராகல] வெம்பிளி [கண்டி]


ஒரு நாட்டு வீரனின் வரலாற்றை சித்தரிக்கும் படம்
விஜயபுரி வீரன்

பயங்கரமான மயிர்க்கூச்செறியும் சண்டைகளும் பல வீரதீரச் செயல்களும், உள்வத்தை உருக்கும் பல சம்பவங்களும், காதுக்கினிய பாடல்களும், கண்ணுக்கு நிறைந்த பல அற்புதமான நடனங்களும் நிறைந்த படம்.

ஒவ்வொருவரும் பார்த்து மகிழவேண்டிய
இன்பச் சித்திரம்.

சி. எல். ஆனந்த்—அசோகன்
ராமதாஸ்—எஸ். ராமராவ்
ஹேமலதா - காமினி - சந்திரகாந்தா
சகுந்தலா—மாஸ்டர் கோபால்

முதலியோர் நடித்த





சிட்டாடல்

# விஜயபுரி வீரன்

டைரக்ஷன்:
ஜோசப் தளியத் Jr.

சங்கீதம்:
டி. ஆர். பாப்பா

தயாரிப்பு:
ஜோஸப் தாமஸ்

பின்னணி:
ஏ. எம். ராஜா—ஜிக்கி—பி. சுசிலா—ஏ. பி. கோமளா—எஸ். வி. கிருஷ்ணன்—எஸ். ஜானகி
டி. வி. ரத்தினம்—டி. எல். ராஜேஸ்வரி.


இப்பத்திரிகை கொழும்பு பண்டாரநாயக்க மாவத்தை ... சிவநாயகம் அவர்களால் இலங்கை நியூஸ் பேப்பர்ஸ் லிமிட்டெட்டின் தாபனத்தாரின் சார்பாக பண்டாரநாயக்க மாவத்த சுதந்திரன் அச்சகத்தில் பதிப்பித்து 1960 அக். 23-ம் தேதி பிரசுரிக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org